Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 28 விலை - 30 ரூபா செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :74 தை 27ஆம் நாள் திங்கட்கிழமை 10 பெப்ரவரி 2020 வள்ளுவர் ஆண்டு 2051






# டில்லியின் நிலைப்பாட்டை உதாசீனம் செய்யாதீர்!

## அரசிடம் சம்பந்தன் வலியுறுத்து

**கொழும்பு, பெப்ரவரி 10**

**அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை இலங்கை அரசு நடைமுறைப்படுத்தினால்தான் தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்ற முடியும். இதையே இலங்கைப் பிரதமர் மஹிந்த ராஜபக்சவிடம் இந்தியாவின் பிரதமர் நரேந்திர மோடி திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார். இந்தியாவின் இந்த நிலைப்பாட்டை நாம் வரவேற்கின்றோம். அத்துடன், இந்தியாவின் விருப்பத்தை ராஜபக்ச அரசு நிறைவேற்ற வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கின்றோம். இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன்.**

23 ►

## இராணுவ உதவி வழங்கத் தயார்

பாக். உறுதியளிப்பு

கொழும்பு, பெப். 10
இலங்கைக்கு தொடர்ந்தும் இராணுவ உதவிகள் வழங்கப்படும் என்று பாகிஸ்தான் விமா

23 ►

## படை விட்டோடிகள் 4,229 பேர் திரும்பினர்

கொழும்பு, பெப். 10
பொதுமன்னிப்புக் காலத்துக்குள் 10 அதிகாரிகள் உள்ளிட்ட முப்படையைச் சேர்ந்த 4 ஆயிரத்து


23 ►

கொழும்பு, கம்பகா, புத்தளத்தில்

## தமிழ் அரசுக் கட்சி களமிறங்க வேண்டும்

யாழ்ப்பாணம், பெப். 10
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி கொழும்பு, கம்பகா மற்றும் புத்தளம் மாவட்டங்களிலும் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில்

23 ►




## திருகோணமலையைச் சேர்ந்த மற்றொரு மாணவனுக்கும் தடை

யாழ்ப்பாணம், பெப். 10
யாழ்ப்பாண பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தின் தொழில்நுட்ப பீடத்தில் மோசமான முறையில் பகிடிவதையில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டுக்குள்ளாகிய மற்றொரு இரண்டாம் வருட மாணவனான திருகோணமலையைச் சேர்ந்த எஸ்.பகீரதனுக்கு

23 ►

## மைத்திரிக்கு சஜித் அழைப்பு

கொழும்பு, பெப். 10
எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் அமையவுள்ள பரந்துபட்ட அரசியல் கூட்டணியில் இணையுமாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு அழைப்பு விடுத்துள்ளார் ஐக்

08 ►

பட்டியலை உறுதிப்படுத்த

## காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளுக்கு அழைப்பு

ஓ.எம்.பி. விடுக்கிறது

08 ►

## புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து



யாழ்ப்பாணம், பெப். 10
தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பங்காளிக் கட்சிகளுக்கு இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்றுக் கைச்சாத்திடப்பட்டது. நேற்றுக் காலை 9.30 மணி

23 ►

## வடக்கு–கிழக்கு பகுதிகளில் அபிவிருத்திதான் முக்கியம்

### இந்தியாவில் வைத்து மஹிந்த தெரிவிப்பு

கொழும்பு, பெப். 10
இலங்கையில் தமிழர்கள் வாழும் பகுதிகளில் நாங்கள் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள முயற்சிக்கிறோம். நிதிகளையும் வழங்குகின்றோம். ஆனால் தமிழ்த்தேசியக்கூட்

23 ►

## புதையல் தோண்டிய இராணுவ அதிகாரிகள் உள்ளிட்ட 21 பேர் கைது



கிளிநொச்சி, பெப். 10
கிளிநொச்சியில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் 5 இராணுவத்தினர் உள்பட 21 பேர்

23 ►

## 45 வயது வரை அரச தொழில்!

கொழும்பு, பெப். 10
தொழில் வாய்ப்பற்ற பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்பை வழங்கும் நிகழ்ச்சித்

23 ►

## புலிகளின் ஏகப் பிரதிநிதிகளே தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள்

கோத்தா அரசு குற்றச்சாட்டு

கண்டி, பெப். 10
2004ஆம் ஆண்டு தொடக்கம் நாடாளுமன்றத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஏகப் பிரதிநிதிகளாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்

08 ►

### கூட்டமைப்பை உருவாக்கும்போது

# அன்றிருந்த நிலைப்பாட்டிலேயே நாம் இன்றும் இருக்கின்றோம்

## சிறிகாந்தா தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், பெப். 10**

**2001 ஆம் ஆண்டு ஐப்பசி மாதத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. அப்போது இதே கருத்து இதே நிலைப்பாட்டில்தான் அன்று கூட்டமைப்பு உருவாக்கப்பட்டிருந்தது. நாம் அதே நிலைப்பாட்டில்தான் இருக்கின்றோம். இவ்வாறு தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ந.சிறிகாந்தா தெரிவித்தார்.**

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார். அவர் தெரிவித்ததாவது:

இலங்கைத் தீவிலே கடந்த எழுபது வருடங்களாக தமிழ் மக்கள் உரிமைக்காக போராடி வருகின்றனர். அரசியல் ரீதியான உரிமைக்கான போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும். அந்த நிலைப்பாட்டில் உறுதியுடன் இந்த புதிய கூட்டணி உதயமாகின்றது.

உரிமைகோரி நடத்தி வரும் போராட்டங்களிலே ஏராளமான உயிர் அழிவுகளை சொத்தழிவுகளை சந்தித்திருக்கின்றோம். எமது மக்கள் நேர்மையான உறுதியான அர்ப்பணிப்புடன் பயணிக்கக் கூடிய ஓர் அரசியல் தலைமையை பெற்றுக்கொள்வதற்கு முயன்று வருகின்றது.

அந்த அடிப்படியில் அத்தகைய அரசியல் தலைமையை மக்களின் நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றுவதற்காக நாம் இந்தக் கூட்டணியை உருவாக்கியுள்ளோம். இந்தக் கூட்டணி அதற்காக சரியான பாதையில் அர்ப்பணிப்புடன் பயணிக்கும். நாம் ஒரே இனம் ஒரே தேசம் என்ற உணர்வோடு தொடர்ந்து செயற்பட முடியுமாக இருந்தால் எதிர்வரும் ஒரு சில ஆண்டுகளுக்கு உள்ளே எமது மக்கள் கேட்டு நிற்கின்ற அரசியல் நீதியை அவர்கள் பெற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது.

2001 ஆம் ஆண்டு ஐப்பசி மாதத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. அப்போது இதே கருத்து இதே நிலைப்பாட்டில்தான் அன்று கூட்டமைப்பு உருவாக்கப்பட்டிருந்தது. அப்போது இதே போல புரிந்துணர்வு உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. அன்று தமிழ் மக்கள் சார்பில் நான்கு அமைப்புக்கள் இதில் கையொப்பம் இட்டிருந்தன. நாம் அன்று எந்த உணர்வோடு தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் இருந்தோமோ அதே அடிப்படையில் இந்த கூட்டணி மக்கள் முன்னிலையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எமது பயணம் மிகவும் கடினமானது. எமக்கு முன்பாக உள்ள பாதை கறடுமுரடானது. எமது மக்களின் எதிர்காலம் மிகவும் சவால்கள் நிறைந்ததாகக் காணப்படுகின்றன. நாம் பல துன்பங்கள் சோகங்கள் கஷ்டங்கள் கொண்டது. அதற்கும் மேலாக பல தியாகங்களை கொண்டது. நாம் விவேகத்துடன் துணிச்சலாக பயணிக்க முடியும் என்ற நம்பிக்கை யுடன் இதை ஆரம்பித்துள்ளோம் - என்றார். (ஒ-20-105)

## 'மொட்டு' அலுவலகம் முள்ளியவளையில் திறப்பு



முல்லைத்தீவு, பெப். 10

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் இணைப்புக் காரியாலயம் முல்லை த்தீவிலுள்ள, முள்ளியவளையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கட்சியின் வன்னி மாவட்ட தேர்தல் தொகுதி வேட்பாளர் எம். எஹியான் இதைத் திறந்துவைத்தார். இதில் கருத்துரைத்த எம். எஹியான், கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான பொதுஜனபெரமுன கட்சிதான் நாட்டில் வளமான அபிவிருத்தி ஏற்படுத்துகின்றது. என்னை பிரதமர் அழைத்து பேசியுள்ளார். வன்னியில் எல்லா மாவட்டங்களிலும் ஒரே மாதிரியான குறைபாடுகள் காணப்படுகின்றன. நீடித்து நிலை க்கக்கூடிய அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் எதுவும் இங்கு இல்லை விவசாயம், மீன்பிடி, வேலைவாய்ப்புக்களும் இங்கு தேங்கிக்கிடக்கின்றன. இவற்றை நல்லமுறையில் செய்து முடிக்க வேண்டும் என்பதற்காக தேர்தலில் களமிறங்கியுள்ளேன். என்றார்.

வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் அப்பாஸ் அலிகானும் இதில் உரையாற்றினார். (கு-19)

# மக்கள் நலனுடனேயே கூட்டணி பயணிக்கும்

## அனந்தி திட்டவட்டம்

யாழ்ப்பாணம், பெப். 10

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களுக்கு வழங்கிய ஆணையை மீறிச் செயற்பட்டு வருகின்றது. அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நான் உட்பட பலர் வெளியேறி இருக்கின்றோம். நாம் இன்று மாற்றுத் தலைமையை உருவாக்கியுள்ளோம். இந்தக் கூட்டணி வடக்கு கிழக்கு மக்கள் சார்ந்த நலனில் அக்கறையுடன் சரியான பாதையில் பயணிக்கும். எமக்கான முழு ஆதரவை மக்கள் எமக்கு தர வேண்டும். இவ்வாறு ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகத்தின் தலைவர் திருமதி அனந்தி சசிதரன் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் பெரும்பான்மை இனம் என்ற சிங்கள தேசத்தால் தமிழ் மக்களாகிய நாம் எமது உரிமைகள் மறுக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு வாழ்ந்து வருகின்றோம். எமது மக்களின் இன விடுதலைக்கான ஆயுதப் போராட்டம் முப்பது ஆண்டுகள் நடைபெற்றது.

எனினும் எமது போராட்டம் சர்வதேசத்தின் உதவியுடன் கடந்த 2009 ஆம் ஆண்டு மௌனிக்கப்பட்டது. அவ்வாறு மௌனிக்கப்பட்ட போது போர்க் கைதியாக எனது கணவனை இலங்கை இராணுவத்திடம் ஒப்படைத்த பெண்ணாகவும் நடைபெற்ற இன அழிப்புக்கு ஓர் சாட்சியாகவும் வாழ்ந்து வருகின்றேன்.

அந்தச் சூழ்நிலையில் அரசியலுக்குள் நுழைந்துள்ளேன். பல கசப்பான அனுபவங்களுடன் பெண் தலைமைத்துவக் குடும்பமாக நான் இருந்து வருகின்றேன். என்னைப் போன்ற பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் எவ்வாறான கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர் என்பதை நேரடியாக உணர்ந்தவளாக இருந்து வருகின்றேன் - என்றார். (ஒ-5-20)

# ஐக்கியம் பேசுவோர் எம்முடன் இணையலாம்

## சுரேஸ் அழைப்பு



யாழ்ப்பாணம், பெப். 10

நாம் பல தரப்புக்கள் இணைந்து புதிய கூட்டணி அமைத்துள்ளோம். ஆகவே வெளியிலிருந்து ஐக்கியம் பேசுகின்ற யாரும் எம்முடன் இணைந்து பயணிக்கலாம். இவ்வாறு ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமசந்திரன் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களின் இன விடுதலைக்காக பல தரப்புக்கள் போராடியுள்ளன. தங்களின் உயிர்களை பொருட்படுத்தாது போராடிய அனைவரையும் எமது கூட்டணியில் இணையுமாறு இந்தச் சந்தர்ப்பத்திலே அழைப்பு விடுக் கின்றேன். எமது கூட்டணி அமைக்கப்பட்டதன் நோக்கம் தமிழ் மக்கள் இத்தனை ஆண்டுகளாக கோரி வந்த இனப்பிரச்சனைக்கு ஆக்கபூர்வமாக தீர்வு கிடைக்க வேண்டும்.

தற்போது எமக்கு எங்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும். தமிழரின் இருப்பு பாதுகாக்கப்பட வேண்டும். இந்த அடிப்படையான விடயங்களில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும். எமது கட்சிக்கு என்று நாற்பது ஆண்டுகால வரலாறுகள் உள்ளன. முப்பது ஆண்டுகள் நாம் நாடாளுமன்ற ஜனநாயக முறைமையை ஏற்றுச் செயற்பட்டுள்ளோம். அதற்கு முன்னர் ஆயுதப் போராட்டம் நடத்தியிருக்கின்றோம்.

தமிழ் மக்களின் கோரிக்கைகளை வென்றெடுக்க மிகப் பெரிய போராட்டங்களை செய்திருக்கின்றோம், பெரிய அழிவுகளை சந்தித்திருக்கின்றோம். எமது உரிமைக்காக அனைத்தையும் இழந்துள்ளோம். இழக்கக்கூடாத பல இழப்புக்களைச் சந்தித்துள்ளோம். ஆகவே வெளியில் நின்று வெறுமனே ஐக்கியத்தை பேசுவதை விட நாங்கள் ஒன்றாகச் சேர்ந்து செயற்பட வேண்டும். சிங்கள பௌத்த அரசு எதுவாக இருந்தாலும் அவர்களை பாதுகாப்பதை விடுத்து இன்று இருக்கக் கூடிய அகப்புற சூழ்நிலைகள் அனைத்தையும் கவனத்தில் எடுத்து நாம் செயற்பட வேண்டும். அதன் ஊடாக தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க வேண்டும்.

தற்போது உருவாக்கப்பட்டுள்ள மாற்றுத் தலைமையானது தமிழ் மக்களுக்குச் சரியான பாதையை வகுத்து கொடுக்கும். நாம் சரியான பாதையில் பயணித்து தமிழ் மக்களின் உரிமையை வென்றெடுப்போம், என்றார். (ஒ-5-105)

# மாகாணசபையை விக்கிக்கு பயன்படுத்தத் தெரியவில்லை

## டில்லியில் வைத்து மஹிந்த தெரிவிப்பு

கொழும்பு, பெப். 10

13ஆவது அரசமைப்பு திருத்தம் ஏற்கனவே நடைமுறையில் உள்ளது. ஆனால், அந்தச் சட்டத்தை மாகாண சபை சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்பதுதான் உண்மை. வடக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன், அந்த மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியைக்கூட முழுமையாகச் செலவழிக்காமல் திருப்பிக் கொடுத்துவிட்டார். இவ்வாறு புதுடில்லியில் வைத்து குற்றம்சாட்டியுள்ளார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

புதுடில்லிக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் இந்தியாவின் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்த பின்னர் நேற்று ஊடகவியலாளர்களைச் சந்தித்துப் பேட்டியளித்துள்ளார். அப்போது, அவரிடம் கேட்கப்பட்ட முக்கிய கேள்விகளும், அதற்கு அவர் அளித்த பதில்களும் வருமாறு:

**கேள்வி:** நீங்கள் புதுடில்லிக்குப் பயணமாக வந்திருப்பதையும், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து பேசியதையும் எப்படி பார்க்கிறீர்கள்?.

**பதில்:** என்னுடைய புதுடில்லி பயணம் சிறப்பு வாய்ந்ததாகும். கடந்த நவம்பர் மாதத்தில் என்னுடைய சகோதரரும், இலங்கை ஜனாதிபதியுமான கோத்தபய சந்திப்பின்போது இரு நாடுகளுக்கும் இடையே உள்ள நல்லுறவுக்காக போடப்பட்ட அஸ்தி வாரம் இப்போது மேலும் வலுவடைந்துள்ளது.

இந்தியப் பிரதமர் மோடியுடனான சந்திப்பு மிகவும் பயன் உள்ள சந்திப்பாக அமைந்தது. அவர் என்னிடம் மிகவும் நெருக்கமான நட்பைக் காட்டினார். நான் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டபோது கார் வரை வந்து வழியனுப்பி வைத்தார். இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையேயான உறவு மேலும் வலுவடைந்துள்ளது. இரு நாடுகளுக்கு இடையே இருந்த வேற்றுமைகள் களையப்பட்டுவிட்டன. நல்ல புரிந்துணர்வு மற்றும் பல்வேறு துறைகளில் இரு நாடுகளுக்கு இடையேயுள்ள கூட்டுறவு, பிராந்திய பொருளாதார வளர்ச்சி மற்றும் பயங்கரவாதத்தை ஒடுக்குவதிலும் இரு நாடுகளும் நல்ல பாதையை நோக்கி சென்று கொண்டிருக்கின்றன.

**கேள்வி:** இலங்கையில் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நடந்தவெடிகுண்டு நாசவேலை பற்றி இந்தியா முன்கூட்டியே ஏற்கனவே எச்சரிக்கை விடுத்தும் நடந்துவிட்டதே?. அப்போது ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேன தனக்கு அந்தத் தகவல் சொல்லப்படவில்லை என்று கூறியிருந்தாரே?.

**பதில்:** மைத்திரிபால சிறிசேனவுக்கு இந்தியா அனுப்பிய எச்சரிக்கை தகவல் நன்றாகத் தெரியும். தகவல்கள் அனைத்தும் அவருக்குச் சொல்லப்பட்டது. அப்போது, பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தெரியும். ஆனாலும், அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. இனிமேல் இதுபோன்ற தவறு என் ஆட்சியில் நடக்காது. என்னுடைய கடந்த அரசு பயங்கரவாதத்தை ஒடுக்கியது. அப்போது ஏற்படுத்திய பயங்கரவாதத்துக்கு எதிரான கட்டமைப்பை மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க ஆட்சி தகர்த்துவிட்டது. அதுமட்டுமல்ல, பயங்கரவாதத்தைத் தடுக்க நடவடிக்கை எடுத்த 70 புலனாய்வுத்துறை அதிகாரிகளில் சிலர் பணியில் இருந்து நீக்கப்பட்டனர். பலர் சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டனர். சிலர் வேறு நாடுகளுக்கு சிறு சிறு பணியிடங்களுக்கு மாற்றப்பட்டு வெளியே அனுப்பப்பட்டனர்.

இப்போதுள்ள சூழ்நிலையில் பயங்கரவாதம் என்பது எல்லா நாடுகளுக்கும் சவாலாக உள்ளது. முக்கியமாக இந்தியா, இலங்கை நாடுகளுக்கு இருக்கிறது. ஏனென்றால், இரு நாடுகளும் பல ஆண்டுகளாக பாதிக்கப்பட்டுள்ளன. உயிர்த்த ஞாயிறு தினமன்று வெடிகுண்டுத் தாக்குதலுக்கு மூளையாக செயற்பட்டவர். இலங்கையின் பெரிய பணக்காரர்களில் ஒருவர். அவருடைய 2 மகன்கள் தற்கொலைப் படையாகச் செயற்பட்டார்கள். அவர்களில் ஒருவர் இங்கிலாந்திலும், மற்றொருவர் ஆஸ்திரேலியாவிலும் உயர் படிப்பு படித்தவர்.

**கேள்வி:** இந்தியாஇலங்கை உறவு வலுவடைந்து வந்ததாக சொன்னீர்கள். நீண்ட காலமாகவே இந்தியாவுக்கு, நீங்கள் சீனாவோடு மிக நெருக்கமாக உறவு வைத்திருக்கிறீர்கள் என்ற கவலை இருக்கின்றதே?

**பதில்:** எதற்காக இந்தியா அஞ்ச வேண்டும். இந்தியா பெரிய வலுவான நாடு. அதனால், இந்தக் கவலை தேவையில்லை.

**கேள்வி:** 13ஆவது அரசமைப்பு திருத்தத்தை நடை முறைப்படுத்தப்பட வேண்டும் (மாகாண சபைக்கு அதிக அதிகாரம் கொடுக்கும் சட்ட திருத்தம்) என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உங்களிடம் வேண்டுகோள் விடுத்திருக்கின்றாரே?

**பதில்:** 13ஆவது அரசமைப்பு திருத்தம் ஏற்கனவே நடைமுறையில் உள்ளது. உண்மை என்னவென்றால், அந்தச் சட்டத்தை மாகாண சபையில் சரியாகப் பயன்படுத்திக்கொள்ளவில்லை. உதாரணமாகச் சொல்ல வேண்டும் என்றால், வடக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன், அந்த மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியைக்கூட முழுமையாகச் செலவழிக்காமல் திருப்பிக் கொடுத்துவிட்டார்.

(ஓ.5,22)

---

# கடனைச் செலுத்த இந்தியாவிடம் கால அவகாசம் கேட்கும் மஹிந்த!

கொழும்பு, பெப்ரவரி 10

கடனைச் செலுத்த இந்தியா மூன்று ஆண்டுகள் கால அவகாசத்தை வழங்கும் என்று இலங்கை எதிர்பார்ப்பதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவில் வைத்து தெரிவித்துள்ளார். கடன் சவால் சம்பந்தமாக 'த ஹிந்து' பத்திரிகையின் செய்தியாளர் சுஹாசினி ஹைதர் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளித்த மஹிந்த ராஜபக்ஷ,

நாங்கள் இந்திய அரசுடன் பேச்சு நடத்தினோம். சகல கடன்களையும் செலுத்த மூன்று ஆண்டுகள் கால அவகாசத்தைப் பெற்றுக்கொள்ள முடியுமா என்று நாங்கள் இந்திய அரசிடம் வினாவினோம். பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வரை மாத்திரமே இதனைக் கோருகின்றோம். இந்திய அரசு நடவடிக்கை எடுத்து எமக்கு சந்தர்ப்பத்தை வழங்கினால், சீனா உட்பட ஏனைய நாடுகள் கூட இதற்கு இணங்கும். கடந்த அரசு பெரியளவில் கடனைப் பெற்றது. அவர்கள் பொருளாதாரத்தை வீழ்ச்சியடையச் செய்தனர். தற்போது அது நெருக்கடியாக மாறியுள்ளது. இந்தியா எடுக்கும் தீர்மானத்தின் அடிப்படையிலேயே அனைத்தும் தீர்மானிக்கப்படும்' - என்றார்.

'தேசிய வளங்களை வெளிநாடுகளுக்கு வழங்குவதில்லை என இலங்கை அரசு கடும் தீர்மானத்திற்கு வந்துள்ளது. எனவே, கடந்த அரசு கையெழுத்திட்ட உடன்படிக்கைகள் எதிர்காலத்தில் செயற்படுத்தப்படுமா?' என எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த மஹிந்த ராஜபக்ஷ,

'நாங்கள் இன்னும் திருகோணமலை திட்டம் குறித்து இந்திய அரசுடன் பேச்சு நடத்தவில்லை. எனினும், கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் பற்றி நாங்கள் பேச்சு நடத்தினோம். அதேபோல் இயற்கை எரிவாயு முனையம் பற்றியும் பேச்சு நடத்தினோம். கடந்த அரசு 2017ஆம் ஆண்டு கையெழுத்திட்ட எந்த உடன்படிக்கையையும் முன்னெடுத்துச் செல்லவில்லை. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கையெழுத்திட்ட உடன்படிக்கைகள் நிராகரிக்கப்பட்டன. அந்த உடன்படிக்கைகளுக்கு நாங்கள் பொறுப்புக்கூற மாட்டோம். மத்தள விமான நிலையம் சம்பந்தமான திட்டத்தை நாங்கள் நீக்கினோம். தேசிய வளங்களை வெளிநாட்டு நிர்வாகத்துக்கு வழங்குவதில்லைஎன்ற கடும்தீர்மானத்தில் உள்ளோம்' - என்றார்.

(ஓ.5,22)

# விமல் அங்கொடையில் இருக்கவேண்டியவரே

## ரவிகரன் காட்டம்

முல்லைத்தீவு, பெப். 10

அமைச்சர் விமல் வீரவன்ச மனநோயாளிகளுக்கான அங்கொடை மருத்துவமனையில் இருக்கவேண்டியவர். இவ்வாறு வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்தார்.

அவரது அலுவலகத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களை மண்ணுக்குள்தான் தேட வேண்டும் என்ற விமலின் கருத்தை இலங்கை வாழ் மக்கள் அவதானிக்க வேண்டும். அமைச்சர் பொருத்தமான பதிலையா சொல்லியுள்ளார். அவரை அங்கொடை மருத்துவமனைக்கு அனுப்பி சிகிச்சைய ளிக்கவேண்டும். அங்கு சிகிச்சை பெற வேண்டியவரை எப்படி அரசு அமைச்சராக்கியுள்ளது? படையினரிடம் ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகளுக்கு அரசு பொறுப்புக் கூறவேண்டும். அவர்கள் காணாமல் ஆக்கப்பட்டமைக்கு எப்படி விடுதலைப் புலிகள் பொறுப்பாகுவார்கள்? காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் அரசு பொறுப்புக் கூறலிருந்து தப்பிக்கவே முடியாது - என்றார்.

(ஓ.5,19,246)

# விரைவில் 'பல்டிகள்'

கொழும்பு, பெப். 10

பொதுத்தேர்தலுக்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியான பின்னர் கட்சி தாவும் படலமும் ஆரம்பமாகவுள்ளது என அறியமுடிகின்றது. இரகசியப் பேச்சுகள் தற்போதே ஆரம்பமாகியுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள் சிலர் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியில் இணைந்து, பொதுத்தேர்தலுக்கு ஆதரவு வழங்கவுள்ளனர் எனவும் அதேபோல் சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் சிலரும் மஹிந்த அணி பக்கம் தாவவுள்ளனர் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. பொதுத்தேர்தலின் பின்னர் நடைபெறும் மாகாணசபைத் தேர்தலை இலக்குவைத்தே இந்த 'பல்டிகள்' இடம்பெறுகின்றன என்று கூறப்படுகின்றது. அதேபோல் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி உறுப்பினர்கள் சிலர் ஐக்கியதேசியக்கட்சியுடன் சங்கமிக்கவுள்ளதுடன், சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் சிலரும் இணைவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(ஓ.5,44)

# மெய்வன்மைப் போட்டி

வவுனியா பெப்.10

வவுனியா பூம்புகார் கண்ணகி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மை நிகழ்வு அண்மையில் பாடசாலை அதிபர் மு.குகதாசன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தானின் பிரத்தியேகச் செயலர் ஜனாப் லியாகத் அலி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக வவுனியா வடக்கு வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் கு.செந்தில் குமரன் கௌரவ விருந்தினர்களாக கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.சசிக்குமார் ஆசிரிய ஆலோசகர் இ.பாக்கியநாதன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினரின் கொள்கை பரப்புச் செயலர் ஜனாப் ஜப்பர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர்களுக்கான சான்றிதழ்களும் வெற்றிக் கிண்ணங்களும்; விருந்தினர்களால் வழங்கப்பட்டன.

நிகழ்வில் பிரதமவிருந்தினர் அதிபரினால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். பாடசாலை அபிவிருத்திக் குழுவின் வேண்டுகோளுக்கிணங்க நாடாளுமன்ற உறுப்பினரின் நிதியிலிருந்து பாடசாலைக்கு புல்வெட்டும் இயந்திரம் ஒன்றும் வழங்கிவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-222)

*** *** *** ***

வவுனியா பெப்.10

வவுனியா நொச்சிமோட்டை கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் வியாழக்கிழமை பிற்பகல் 1.30மணிக்கு பாடசாலை மைதானத்தில் பிரதி அதிபர் திருமதி. ஸ்ரீ.ஜெயதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வவுனியா மாவட்ட மேலதிக மாவட்ட செயலர் தி.திரேஸ்குமார் சிறப்பு விருந்தினராக வவுனியா வடக்கு கல்வி வலய வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி. அன்னமலர் சுரேந்திரன் மற்றும் கௌரவ விருந்தினர்களாக வடக்கு கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் கு.செந்தில்குமரன் நொச்சிமோட்டை கிராம அலுவலர் ந.குபேந்திரன் ஓய்வு பெற்ற பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் சு.ஜெயரட்ணம் ஆகியோர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (ந-222)

*** *** *** ***

கரணவாய், பெப். 10

வடமராட்சி, மணற்காடு றோமன் கத்தோலிக்கப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டிகள் நேற்று முன்தினம், பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றன. வித்தியாலயத்தின் அதிபர் சோ.வாகீசன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக வடமாகாண கல்வித்திணைக்களத்தின் உடற்கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர் ஆர். இராஜசீலன் கலந்து கொண்டார். போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான வெற்றிக்கிண்ணங்களும், சான்றிதழ்களும் பிரதம விருந்தினரால் வழங்கி வைக்கப்பட்டன. (ந-108)

## மருத்துவ முகாம்

முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்களுக்கான மருத்துவ முகாம் யாழ்.போதனா மருத்துவமனையில் நேற்று நடைபெற்றது.

சர்வதேச மருத்துவ சுகாதார நிறுவனத்தின் அனுசரணையுடன் , யாழ்.போதனா மருத்துவமனையின் ஒழுங்குபடுத்தலில் மருத்துவ முகாம் நடைபெற்றது.

போரின் போது படுகாயங்களுக்கு உள்ளாகி முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்படவர்கள் பலர் மருத்துவ முகாமில் கலந்து கொண்டு பயனடைந்தனர். மருத்துவ முகாமில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவம், நாளாந்தச் செயற்பாடுகள் எவ்வாறு மேற்கொள்ள வேண்டும் என்பதற்கான ஆலோசனைகள் மற்றும் உடற்பயிற்சி முறைகள் பற்றிய சிறப்பு விரிவுரைகளும் வழங்கப்பட்டன. (க-160)

# ஓர் அணியாகவே இனி போராளிகள் பயணிப்பர்

## விடுதலைப் புலிகள் மக்கள் பேரவை தெரிவிப்பு

வவுனியா, பெப். 10

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நாங்கள் இணைந்து செயற்பட எவ்வித விருப்பமும் தெரிவிக்கவில்லை. அவர்களும் எமக்கு எவ்வித அழைப்பும் விடுக்கவில்லை. எதிர்வரும் காலங்களில் போராளிகள் யாவரும் ஓர் அணியாகப் பணிப்போம் என்ற நம்பிக்கை எங்களிடம் இருக்கின்றது.

இவ்வாறு, விடுதலைப் புலிகள் மக்கள் பேரவையின் தலைவர் த.இ.மலரவன் தெரிவித்தார். விடுதலைப் புலிகள் மக்கள் பேரவையின் மாவட்ட நிர்வாக ஒருங்கிணைப்பாளர்களையும் இணைப்பாளர்களையும் தெரிவுசெய்யும் கூட்டம் வவுனியா புகையிரத நிலையத்துக்கு முன்பாகவுள்ள விருந்தினர் விடுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. அதன்பின்னர் ஊடக சந்திப்பும் நடத்தப்பட்டது.

அதில் பேரவைத் தலைவர் மலரவன் மேலும் தெரிவித்ததாவது:

விடுதலைப் புலிகள் மக்கள் பேரவையின் அரசியல் வேலைத்திட்டங்களும் அரசியல் நகர்வுகளும் மக்களை உள்ளடக்கிமக்களுடைய ஆலோசனைகளைப் பெற்றுத்தான் பயணித்துக்கொண்டிருக்கின்றோம். ஆகையால் எதிர்காலத்தில் நாங்கள் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதை மக்கள் தீர்மானிப்பார்கள். என்றார்.

மகளிர் அணித் தலைவி பாவு கஜேந்தினி தெரிவித்ததாவது:

நாங்கள் போராளியாக இருக்கின்ற சமயத்தில் எங்களுக்கு தனித்துவமான மரியாதை காணப்பட்டது. தற்போது அது இல்லை. பெண்களுக்கான உரிமையை வென்றெடுப்பதற்காகவே விடுதலைப் புலிகள் மக்கள் பேரவையுடன் இணைந்துள்ளோம் - என்றார். (த-110, 18)

# போதைப் பொருளுக்கு எதிராகப் போராட்டம்

கிளிநொச்சி, பெப். 10

போதைப்பொருளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கிளிநொச்சி அக்கராயன் பிரதேச மக்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தை நேற்று முன்னெடுத்தனர். சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான பணியகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

மதத் தலைவர்கள், பொலிஸாருக்கு போதைப் பொருளைக் கட்டுப்படுத்தக் கோரிய மனுக்கள் கையளிக்கப்பட்டன.

போராட்டத்தில் கலந்து கொண்ட பணியகத்தின் இணைப் பணிப்பாளர் அருட் தந்தை ரமேஸ் தெரிவித்ததாவது:

போதைப்பொருள் பாவனையால் மக்களிடத்தில் சமாதானமற்ற நிலை காணப்படுகின்றது. வாள்வெட்டுக்கள், வன்முறைகள் தொடர்ந்தும் சவாலாகக் காணப்படுகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்துவதற்காகவும், இந்தப் பிரதேசத்தில் போதைப்பொருள் பாவனை தொடர்பில் விழிப்பினை ஏற்படுத்தும் வகையிலும் கவனவீர்வை ஏற்பாடு செய்திருந்தோம். போதைப்பொருள் பாவனையிலிருந்து விடுபட்டு, நல்லதொரு சமூகத்தை கட்டியெழுப்பி சமாதானமான சூழலை நிலைநாட்ட அனைவரும் ஒன்று சேர வேண்டும், என்றார்.

போதைப்பொருள் பாவனை காரணமாக குடும்பங்களுக்குள் நிம்மதியற்ற நிலை காணப்படுவதாகவும், குடும்ப வன்முறைகள் இடம்பெறுவதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். பாடசாலை செல்லும் வயதை உடைய மாணவர்கள் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகின்றனர். அதேபோன்று கல்வி கற்கும் வயதில் குடும்ப நிலை காரணமாக தொழில்களுக்குச் செல்லவேண்டிய நிலை சிறுவர்கள் மத்தியில் காணப்படுவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். (ஒ.5,6)

# கொள்ளை சந்தேக நபர்கள் கைது!

மானிப்பாய், பெப்.10

மானிப்பாய் மற்றும் தெல்லிப்பழைப் பகுதியில் வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபட்டவர்கள் என்ற சந்தேகத்தில் மானிப்பாய் பொலிஸாரால் நேற்று முன்தினம் இருவர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்படும் போது சந்தேக நபர்களிடம் இருந்து 4 சங்கிலிகள் உட்பட 9 பவுண் நகை பறிமுதல் செய்யப்பட்டதாக மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களை நேற்று மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்திய போது 14 நாள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவானால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதேவேளை கொள்ளையடிக்கப்பட்ட நகைகளை விற்பனை செய்ய உதவியதாக சந்தேகிக்கப்படும் பெண் மற்றும் நகையையைக் கொள்வனவு செய்த கடை உரிமையாளர் ஆகியோரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். (ந-26)

# மஹிந்த குழுவில் பிரசன்ன ரணவீர

## சமூக ஊடகங்களில் கிண்டல்

கொழும்பு, பெப். 10

மஹிந்த ராஜபக்ஷ பிரதமராக பதவியேற்ற பின்னர் முதலாவது உத்தியோகபூர்வப் பயணமாக இந்தியாவுக்கு சென்றுள்ளார். இந்தியாவுக்கு மூன்று நாள் பயணத்தை மேற்கொண்ட பிரதமர், தன்னுடன் அழைத்துச் சென்ற தூதுக்குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணவீர இடம்பெற்றிருப்பது சமூக வலைத்தளங்களில் விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளது. பிரசன்ன ரணவீர, மகிந்த தலைமையிலான 52 நாள் அரசின் காலத்தில் நாடாளுமன்றத்தில் ஏற்பட்ட அமளியின் போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது மிளகாய் தூள் கலந்தத்தண்ணீரை வீசி தாக்குதல் நடத்தியிருந்தார். (ஒ.5)



# எரிபொருள் நிலைய ஊழியர் மீது தாக்குதல்

கோப்பாய்,பெப்.10

கோப்பாய் பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றின் ஊழியர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று மாலை போதையில் வந்த ஒருவரால் இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது ,

நேற்றுக் காலை குறித்த எரிபொருள் நிலையத்துக்கு வந்த ஒருவர் காசு மாற்றித் தருமாறு கோரியுள்ளார். எனினும் மாற்றுவதற்குப் போதிய பணம் இல்லையெனக்கூறப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து ,நேற்று மாலை 5.30 மணியளவில் போதையில் வந்த குறித்த நபரே தன்மீது தலைக்கவசத்தால் தாக்குதல் நடத்தியதாக தாக்குதலுக்குள்ளான ஊழியர் குறிப்பிட்டார். சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தாக்குதலுக்குள்ளான நபர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

# விபத்தில் முதியவர் காயம்

சாவகச்சேரி பெப்.10

வீதியில் சைக்கிளில் பயணித்த முதியவரை மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இந்தச்சம்பவம்நேற்றுமுன்தினம் இரவு கச்சாயில் இடம்பெற்றது. கொடிகாமம் கச்சாய் வீதியைச் சேர்ந்த முருகுப்பிள்ளை குலசிங்கம் (வயது 61) என்ற முதியவரே காயமடைந்தவராவர். குறித்த முதியவர் தினமும் மாலை வேளைகளில் உடற்பயிற்சிக்காக சைக்கிளில் பயணிப்பதாகவும் அவ்வாறு நேற்று மாலை வீட்டிலிருந்து புறப்பட்டு சைக்கிளில் சென்று கொண்டிருந்த வேளையில் மோட்டார் சைக்கிள் மோதியதெனவும் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்த முதியவர் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ந-9)

# எவருக்கும் பாதிப்புக்கள் ஏற்படாதவாறு கூட்டணி

## வாசுதேவ தெரிவிப்பு



**கொழும்பு, பெப்.10**

**நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடனான அரசு தோற்றுவிக்க வேண்டுமாயின் அனைத்துப் பங்காளிக் கட்சிகளின் ஆதரவு அவசியமாகும். எந்தத் தரப்பினருக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் புதிய கூட்டணி உருவாக்கப்படும்.**

**இவ்வாறு நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.**

**அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:**

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன ஜனாதிபதி தேர்தலில் பங்காளி கட்சிகளுடன் இணைந்தே போட்டியிட்டது. ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி கூட்டணியில் பிரதான பங்கு வகிக்கின்றது. ஸ்ரீ லங்கா சுதந்திர பொதுஜன பெரமுனவின் தலைமைத்துவம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கே வழங்கப்பட்டன.

அதில் எந்த வித மாற்றமும் இனி ஏற்படாது. கூட்டணியின் தலைமைத்துவம் என்றும் இவர் வசமாகவே இருக்க வேண்டும் என்பது கட்சியின் ஏகமனதான தீர்மானமாகும். கட்சியின் மொட்டு சின்னமும் அவ்வாறானதே.

ஜனாதிபதித் தேர்தலின் வெற்றியைத் தொடர்ந்து பொதுத்தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடனான அரசை ஸ்தாபிப்பதே எமது பிரதான எதிர்பார்ப்பாகும்.

பொதுத் தேர்தலை வழிநடத்தும் முழுப் பொறுப்பும் பொதுஜன பெரமுனவின் நிறுவுநர் பசில் ராஜபக்ஷவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. கூட்டணியமைத்தல் நாடாளுமன்றம் கலைக்கப்பட முன்னர் அமைக்கப்படும் என்பதே பிரதான எதிர்பார்ப்பாகும். என்றார். (எ)

# இசை ஆராதனை

யாழ்ப்பாணம், பெப்.10

யாழ்.இந்தியத் துணைத்தூதுவராலயத்தின் அனுசரணை யுடன், வட இலங்கைச் சங்கீத சபை வழங்கும் சற்குரு ஸ்ரீ தியாகராஜா சுவாமிகளின் 173 ஆவது இசை ஆராதனை இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு வட இலங்கை சங்கீத சபை கலையரங்கத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் செல்வரட்ணம் சந்திரஜரா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.இந்திய துணைத் தூதுவர் சங்கர் பாலச்சந்திரன் ,சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் ஆகியோர் கலந்துகொள்வர். (க)

# பேருந்து விபத்து மாணவி காயம்



யாழ்ப்பாணம், பெப். 10

முல்லைத்தீவு விசுவமடு ஏ35 வீதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் மாணவி படுகாயமடைந்தார்.

12 ஆம் கட்டை புன்னை நீராவியடியைச் சேர்ந்த நவரத்தினம் விருசிகா (வயது 18) என்பவரே படுகாயமடைந்தார்.

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச்சொந்தமான பேருந்து விசுவமடு சந்திக்கு அண்மித்த பகுதியில் தனியார் கல்வி நிலையத்துக்கு சைக்கிளில் சென்ற மாணவியை மோதியது என்று ஆரம்ப விசாரணையில் பொலிஸார் தெரிவித்தனர்.

மாணவி படுகாயமடைந்து தருமபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். புதுக்குடியிருப்புப் பொலிஸார் விசாரணை நடத்தினர்.

முல்லைத்தீவு சாலைக்குரிய பேருந்துடன் சாரதியை புதுக்குடியிருப்புப்பொலிஸார்பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர். (து-19)

# மருத்துவ நிபுணருக்கு அன்பே சிவம் விருது

யாழ்ப்பாணம்,பெப்.10

மகப்பேற்று மருத்துவ நிபுணர் வைத்தியக் கலாநிதி நமசிவாயம் சரவணபவவுக்கு அகில இலங்கை சைவ மகா சபை அன்பே சிவம் விருது வழங்கிக் கௌரவித்துள்ளது.



ஈழத்தில் குழந்தைப் பாக்கியம் தடைப்பட்டிருந்த பல நூற்றுக் கணக்கானவர்களுக்கு, உரிய சிகிச்சை வழங்கியதன் மூலம் அவர்கள் சந்ததி தழைக்க மனிதநேயத்துடன் மகத்தான மருத்துவப் பணி செய்த முதல் மருத்துவர் என்ற ரீதியில் சைவ மகா சபை அவருக்கு இந்த விருதை வழங்கியுள்ளது.

இலங்கைவேந்தன் கலைக் கல்லூரியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்வில் தென்கயிலை ஆதீன சுவாமிகள் அகத்தியர் அடிகளார், சின்மயா மிசன் யாக்ரத சைதன்ய சுவாமிகள் மற்றும் மருத்துவர்கள், கல்விமான்கள் முன்னிலையில் மருத்துவர் சரவணபவவுக்கு யாழ். மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் அன்பே சிவம் விருதை வழங்கினார்.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை, நயினாதீவு பிரதேச வைத்தியசாலை போன்றவற்றின் நிர்வாகத்தினர், யாழ்.மாவட்ட குடும்பநல உத்தியோகத்தர்கள் சங்கம், தியாகி அறக்கொடை நிலைய நிர்வாகத்தினர், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள்,

குழந்தை பாக்கியம் பெற்ற பெற்றோர்கள் என பலர் வருகைதந்து வைத்தியக் கலாநிதி சரவணபவவைப் பாராட்டி வாழ்த்திநினைவுச்சின்னங்கள் வழங்கி அவரது சேவையைக் கௌரவித்தனர்.

நான்காவது குழந்தை பெற்று, அவர்களுக்குத் தமிழ்ப்பெயர் சூட்டிய தாய்மாரும் கௌரவிக்கப்பட்டனர். குழந்தைகளைப்பராமரிப்பதற்கான நிதியுதவி அவர்களின் பெயரில் வைப்புச் செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

அகில இலங்கை சைவ மகா சபையின் அன்பே சிவம் சஞ்சிகையும் வெளியிடப்பட்டது. வைத்தியக் கலாநிதி ஏ.தேவநேசன் சஞ்சிகையை வெளியிட்டு வைக்க தியாகி அறக்கொடை நிறுவுநர் வாமதேவன் முதற்பிரதியைப் பெற்றுக்கொண்டார்.

நிகழ்வில், யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான தொழில்நுட்பப் பீட முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் சி.சிறிசற்குணராசா, கோப்பாய்ஆசிரியர் கலாசாலை ஒய்வுநிலை விரிவுரையாளர் சி.குணசீலன், யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்வை த்தியக் கலாநிதி ஏ. தேவநேசன், சமுதாய மருத்துவத்துறை நிபுணர் வைத்தியக் கலாநிதி இ.சுரேந்திரகுமார், சுதேச மருத்துவ திணைக்கள வடமாகாண ஆணையாளர் வைத்தியக் கலாநிதி திருமதி சி.துரைரத்தினம் உட்பட பலர் கலந்து கொண்டனர். (க)

# நெற் புதிருக்கு அலைந்த மக்கள்

சாவகச்சேரி, பெப்.10

தைப்பூசத்திலன்று வீட்டுக்குள் புதிர் கட்டுவதற்கும், சமைப்பதற்கும் ஒரு பிடி நெல்மணியை எடுப்பதற்கு மக்கள் வயல்களைத் தேடி அலைந்தனர். இயந்திரம் மூலம் வேகமாக அறுவடை இடம்பெற்றதால் நெற்கதிர்களைப் பெற முடியாத நிலைமை ஏற்பட்டது என்று மக்கள் தெரிவித்தனர்.

வயல் விதைப்புச் செய்யாதவர்கள் தைப்பூசத்தினத்தன்று, ஒரு பிடி நெற்கதிரை எடுத்து வந்து அதனை வீட்டின் சாமி அறைக்குள் கட்டி, அதிலிருந்து சில நெல்மணிகளை எடுத்து உரலிலிட்டு அரிசி எடுத்து தைப்பூசதினத்தன்று பொங்கிச் சாப்பிடுவர்.


கடந்த தைப்பூசம் தினத்தன்று வயல்கள் உள்ள இடங்களுக்குச் சென்ற மக்கள் ஏமாற்றம் அடைந்தனர். அனைத்து வயல்களிலும் இயந்திரத்தின் மூலம் அறுவடை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

தைப்பூசம் தினத்தன்றே முதல்முதலாக காய்ந்த நெல்வயல்களில் வழமையாக அறுவடை ஆரம்பமாகும். சிவராத்திரி வரை அறுவடை, சூடு மிதிப்பது போன்றவை இடம்பெறும். இவ்வருடம் நெல் விலை அதிகரிப்பை அடுத்து தைப்பொங்கல் தினத்தன்று இயந்திரம் மூலம் அறுவடை ஆரம்பித்து, தைப்பூசத்துக்கு முன்னர் அனைத்து வயல்களிலும் அறுவடை செய்யப்பட்டுள்ளதை அவதானிக்க முடிந்தது என்று மக்கள் தெரிவித்தனர். (க-9)


# பொன்மொழிகள்

- எல்லோருக்குமே உங்கள் காதைக் கொடுக்கலாம், ஒரு சிலரிடம் மட்டுமே வாயைக் கொடுக்கலாம்.
- உனக்குசிரிப்பதற்கும்,பேசுவதற்கும்நேரம்இல்லையென்றால்,நீஉன்வாழ்வில்முன்னேறிக்கொண்டுஇருக்கிறாய் என்று அர்த்தம் - **அலெக்சாண்டர்**
- காரணமே இல்லாமல் கோபம் தோன்றுவதில்லை; ஆனால்கோபத்தின்காரணம்பெரும்பாலும்நல்லதாய்இருப்பதில்லை.
- ஆண்டவன்உனக்குத்தரநினைக்கும்போதுயாரும்தடுக்க முடியாது,அதேநேரம்ஆண்டவன்அதைப்பறிக்கும்போது யாராலும் அதைத் தடுக்க முடியாது.
- துருப்பிடித்துத் தேய்வதைவிட, உழைத்துத் தேய்வது மேலானது - **விவேகானந்தர்.**
- எவரும் வேண்டும் என்றே தவறு செய்வதில்லை. எது உண்மையிலேயே சரி என்பதை அறியாது அவர் மனம் கருதுவதைச் செய்கிறார் - **சாக்கரட்டீஸ்**
- என்றும் நினைவில் கொள். மனிதனாகப் பிறந்தவன் பயனின்றி அழியக்கூடாது - **கார்ல் மார்க்ஸ்**

## இடைவெளியை நிரப்புவோம்




## மரண அறிவித்தல்



## சோமசுந்தரம் சுந்தரப்பிள்ளை

மண்டைதீவு 4ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், நாரந்தனை கிழக்கு, ஊர்காவற்றுறையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் சுந்தரப்பிள்ளை நேற்று (09.02.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சோமசுந்தரம் யோகம்மா தம்பதிகளின் மகனும் காலஞ்சென்ற மங்கையற்கரசியின் அன்புக் கணவரும் கமலாம்பிகை, சரவணபவன், பார்வதிப்பிள்ளை ஆகியோரின் சகோதரனும் சர்மிளா, பிறம்மிளா, கார்வண்ணன் (புகையிரத நிலைய ஊழியர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற சுரேந்திரன் மற்றும் ஸ்ரீகாந்தன், பமிலா ஆகியோரின் மாமனாரும் சுஜீவன், சாணுகா, சாரங்கா, சஞ்சீவன், சங்கவி, ஸ்ரீபைரவி, ஸ்ரீசங்கரி, ஸ்ரீதிவ்வியா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2020) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மண்டைதீவு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நாரந்தனை கிழக்கு,**
**ஊர்காவற்றுறை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

தொடர்பு:- 077 833 3804



# ஆபத்தில் உதவிடுவோம்

ஓர் சிற்றூரில் கனகராஜ் என்ற வியாபாரி இருந்தார். வியாபாரம் செய்வதற்காக அடிக்கடி வெளியூருக்கு சென்று வருவார். மூட்டைகளை சுமக்க, ஒரு கழுதை வைத்திருந்தார். அத்தோடு அழகிய நாய் ஒன்றையும், அன்புடன் வளர்த்து வந்தார்.

ஒரு நாள் மூடை முடிச்சுகளை கழுதையில் ஏற்றி, வெளியூருக்குப் புறப்பட்டார். நாயும் அவருடன் சென்றது.

பகல் நேரம், கொளுத்தும் வெயில். வியாபாரிக்கு தாகம் எடுத்தது; கழுதையை நிறுத்தி, ஒரு சிறு மூடையைப் பிரித்து, தண்ணீரை குடித்தார். அந்த பகுதியில், பசுமைநிறைந்திருந்ததைக்கண்டுஇளைப்பாறஎண்ணி, ஒருமரத்தடியில்உறங்கினார். பெரும் சுமையால் கஷ்டப்பட்ட கழுதை, பசும் புல்வெளியைக் கண்டதும் மகிழ்ச்சியாக மேயத் தொடங்கியது.

கழுதையின் அருகே சென்ற நாய், “எனக்கு மிகவும் பசிக்கிறது; தலைசுற்றுவது போல் இருக்கிறது. தயவுசெய்து, சிறிது நேரம் தரையில் படுத்துக் கொள். உன் முதுகில்உள்ள, மூடையில், எனக்குதேவையானஉணவுஉள்ளது. அதைதின்று, பசியை போக்கி கொள்கிறேன்; இந்த உதவியை செய்வாயா…?” என்று கேட்டது.

அந்த வேண்டுகோளை கணக்கில் எடுக்கவில்லை கழுதை. அதன் மனதில், “நாய்க்கு பசித்தால் எனக்கு என்ன” என்ற எண்ணமே இருந்தது. கெஞ்சிய நாய்க்கு, இரக்கம் காட்டாமல், புல்மேய்வதில்கவனம்செலுத்தியது. நாய்நச்சரித்ததால்எரிச்சல்அடைந்தகழுதை, “நச்சரித்துஎன்னைமேயவிடாமல்தடுக்கிறாய்; இதை செய்தால், எட்டி உதைத்து உன்னைக் கொன்று விடுவேன்… உனக்கு உணவு தேவை என்றால் உன் எஜமானை எழுப்பி கேள்…” என்றது.

பசியால் வாடிய நாய், எஜமான் அருகே சுருண்டு படுத்துக்கொண்டது.

அப்போது, அந்த வழியாக ஓநாய் ஒன்று, வேகமாக வந்து கொண்டிருந்தது. உணவு தேடிய ஓநாயின் கண்ணில், கழுதை தென்பட்டது.

ஓநாயைக் கண்ட கழுதைக்கு, உதறல் எடுத்தது. அது நாயிடம் மிகப் பணிவாக, “ஓர்ஓநாய்வருகின்றது… அதனிடமிருந்துஎன்னைக்காப்பாற்று…” என்றுகெஞ்சியது.

“கழுதையே… உன் உயிர், ஓநாயின் கையில் உள்ளது; உன்னைக் காப்பாற்ற வேண்டிய எஜமான் தூங்கிக் கொண்டிருக்கிறார்; அவர் எழுந்ததும், உன் கோரிக்கையை சொல்; நிறைவேற்றுவார்…” என்றது நாய்.

“நீ நன்றி உள்ள பிராணி; இப்படிச் சொல்லலாமா…? எப்படியாவது என்னைக் காப்பாற்று…” என்றுகெஞ்சியதுகழுதை. கழுதைதனக்குஉதவிசெய்யவில்லை என்பதை மனதில் வைத்துக் கொள்ளாது நாய் கழுதைக்கு உதவியது. வேகமாக வந்தஓநாயிடமிருந்துகழுதையைக்காப்பாற்றியது. கழுதைநாயின்உணர்வை மதித்து அதற்கு உணவு வழங்கியது.

**உதவி செய்து வாழ வேண்டும் !**

## குட்டி அணில்

கிளைதாவிக் குதிக்கின்றாய்
குட்டி அணில் குட்டி - நீ
தலைகீழே நடக்கின்றாய்
குட்டி அணில் குட்டி

முதுகின்மேல் மூன்றுவரி
குட்டி அணில்குட்டி - நீ
அதை ஏனோ சுமக்கிறாய்
குட்டி அணில் குட்டி

அடை மழையில்
நனைகிறாய்
குட்டி அணில் குட்டி - உன்
குலைவாலைப்
பிடிக்கலையோ
குட்டி அணில் குட்டி


தொட வேண்டும்
நானுன்னை
குட்டி அணில் குட்டி தொட
விடுவாயோ சொல்லெனக்கு
குட்டி அணில் குட்டி

## ஆட்டுக்குட்டி

துள்ளி வரும் ஆட்டுக்குட்டி
தாவி வரும் ஆட்டுக்குட்டி
பள்ளி செல்ல வருவாயோ?
பாடம் சொல்லித் தருவாயோ?
கள்ளம் இல்லை உன் மனதில்
கபடம் இல்லை உன்னிடத்தில்
பள்ளம் மேடு வந்தாலும்
பாய்ந்து ஓடும் ஆட்டுக்குட்டி
தொல்லை இல்லா ஆட்டுக்குட்டி
தோல் கறுத்த ஆட்டுக்குட்டி
சொல்லைக் கேட்டு வீட்டையே
சுற்றி வருமே ஆட்டுக்குட்டி



# மரண அறிவித்தல்கள்



தோற்றம்
14 . 01 . 1953

மறைவு
08 . 02 . 2020

## இராசதுரை துரைசிங்கம்

வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசதுரை துரைசிங்கம் **08.02.2020** சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசதுரை - இரத்தினம் தம்பதிகளின் நான்காவது மகனும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி - சற்குணவதி தம்பதிகளின் மூத்த மருமகனும், காலஞ்சென்ற கோமேஸ்வரியின் அன்புக் கணவரும், கிருத்திகா (லண்டன்), கிருஷாந் (லண்டன்), துஷாந் (பிரான்ஸ்), ஜானுஷாந் (லண்டன்), தனுஷாந் (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுரேஸின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற ஜஸ்மினின் அன்புத் தாத்தாவும், காலஞ்சென்றவர்களான நடராஜா, மகேஸ்வரி, ரவீந்திரன், சிவபாதம் மற்றும் இராஜேஸ்வரி, ஆனந்தராசா, பொன்ராசா, தவனேஸ்வரி, ஜெகதீஸ்வரி, சிவகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும், இரத்தினேஸ்வரி, நாகேந்திரராஜா, மகேஸ்வரி, நந்தினி, ரவீந்திரன், ரவிசங்கர், சுப்பிரமணியம், நிர்மலாதேவி, ஜெயலட்சுமி, பத்மினி (baby), பஞ்சலிங்கம், யசோதரா, லோகேஸ்வரன், கீதா ஆகியோரின் மைத்துனரும் ரகுநாதன், கலாமதி, முத்துலிங்கம், குகதாஸ், கல்பனா, விஜிதா ஆகியோரின் சகலனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று **(10.02.2020)** திங்கட்கிழமை முற்பகல் **10.30** மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**80/1, பத்திரகாளி கோயிலடி,**
**வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.**

**தகவல்:-**
**குடும்பத்தினர்.**

**077 214 1721, 077 610 2945, 077 530 2065**



பிறப்பு
03 . 11 . 1955

இறப்பு
09 . 02 . 2020

## சின்னையா யோகராசா

மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா யோகராசா நேற்று (09.02.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா மற்றும் சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை சிதம்பரம் தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக்கணவரும் யோகராணி, விமலசிறி, தர்மிளா, சுமித்திரா, யாதவன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயந்தன், சோபிஜா, தவக்குமார், பகீரதன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஜெயபிரியன், ஜெயபிருந்தன், ஜெயதர்சன், சுனிஸ்கான், பவிஷா, அக்சனா ஆகியோரின் அன்புப் பேரனும், வள்ளிப்பிள்ளை, நாகராசா, தங்கனேஸ்வரி, இராஜேஸ்வரி, தவராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் நாகராசாவின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2020) திங்கட்கிழமை மு.ப 10.00 மணிக்கு மீசாலை வடக்கு கொடிகாமத்தில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனாம்புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 195 5409**
**மீசாலை வடக்கு, கொடிகாமம்**

**தகவல்: குடும்பத்தினர்**
**யோ.யாதவன்**

# 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் திருமதி
## கதிரவேற்பிள்ளை சாந்தி



மண்ணில்
26.01.1968

விண்ணில்
11.02.2009

11 ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவுகள்
எம்மைவிட்டு நீங்காது அம்மா

**கணவர்- கதிரவேற்பிள்ளை**
**பிள்ளைகள்- விஸ்ணுகாந், ஹேமகாந், விமலகாந்**
இல.45, சோலை பல்லவராயன்கட்டு,
ஜெயபுரம்.

# 31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

அமரர்
## இராசரத்தினம் ஈஸ்வரன்
(லொறி உரிமையாளர்)



அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (11.02.2020) செவ்வாய்க்கிழமை காலை 06.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்று 13.02.2020 வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

புதிய கொலனி
மாங்குளம்

குடும்பத்தினர்
076 041 9488, 077 412 3829

# பதின்நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
12 . 04 . 1953

உதிர்வு
10 . 02 . 2006



அமரர்
## திரு.லோறன்ஸ் அலெக்ஸ்சாண்டர்

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும் அப்பா
மண் விட்டுமறைந்த நீங்கள்
விண்ணோக்கி சென்றாலும்
கண் விட்டு மறையாமல்
எம் உள்ளத்தில் இருப்பீர்கள் அப்பா

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
சகோதரர்கள், சகோதரிகள் பேரப்பிள்ளைகள்

## மொட்டுடன் முண்டும் சு.க.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தலைவர்களின் ஒளிப்படங்களைப் பயன்படுத்தி தேர்தல் பரப்புரைகளில் ஈடுபட வேண்டாம் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் நாடாளுமன்ற உறுப்பினர் தாரக பாலசூரிய தெரிவித்துள்ளார்.

சுதந்திரக் கட்சியினர் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஆகியோரின் ஒளிப்படங்களை தமது பரப்புரைகளுக்குப் பயன்படுத்தி வருகின்றனர். சிறிலங்கா சுதந்திரக் கட்சி தமது தலைவரின் ஒளிப்படத்தை பயன்படுத்தி தேர்தல் பரப்புரையில் ஈடுபட வேண்டும், என்று குறிப்பிட்டுள்ளார். (ஒ.5)

அலுவலக உதவியாளர் தேவை
திருநெல்வேலியில் இயங்கும் முன்பள்ளி நிறுவனத்திற்கு கணினி அறிவுள்ள பெண் அலுவலக உதவியாளர் தேவை.
தொடர்பு:- 077 386 7458

தையல் வேலைக்கு ஆள் தேவை
அனுபவம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.
077 136 7601

## காணாமல் ஆக்க...

கொழும்பு, பெப். 10

இன்று வரையில் இலங்கையானது காணாமற் போனோர் மற்றும் காணாமலாக்கப்பட்டோர் குறித்த விரிவான பட்டியலைத் தயாரித்திருக்கவில்லை. காணாமற்போன ஆள்கள் பற்றிய அலுவலகமானது அதற்கு கிடைத்துள்ள தரவுகளை அடிப்படையாகக் கொண்டு ஒரு தற்காலிக பட்டியலை ஒருங்கிணைக்கின்றது. அதனை உறுதி செய்வதற்காக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களுக்கு, காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய அலுவலகம் அழைப்பு விடுத்துள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய பணியகம் தயாரித்துள்ள பட்டியலானது, பணியகம் நிறுவப்பட்ட பின்னர் நேரடியாகக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையிலும், தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கம், அரசகரும மொழிகள் மற்றும் இந்து சமய விவகார அமைச்சால் மாவட்டச் செயலகங்களின் வாயிலாக பெறப்பட்டு காணமற்போன ஆள்கள் பற்றிய அலுவலகத்துக்கு அனுப்பட்ட முறைப்பாடுகள் மற்றும் காணாமற்போன ஆள்கள் குறித்த அலுவலகத்தின் கோரிக்கையின் பேரில் போர்க் காலத்தில் காணாமற் போனவர்களாக முப்படைகளால் வழங்கப்பட்ட தரவுகள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.

காணமற் போனதாக மற்றும் காணாமலாக்கப்பட்டதாக அறிக்கையிடப்பட்ட ஆள்களின் தற்காலிக பட்டியலானது உறுதிப்படுத்தும் செயன்முறைக்கு உள்ளாக்கப்படவுள்ளது. காணாமற்போன ஆள்கள் பற்றிய அலுவலகமானது காணமற்போனோர் மற்றும் காணாமலாக்கப்பட்டோர் குறித்த விரிவான பட்டியலொன்றினைத் தயாரிப்பதற்காக முன்னைய ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் உள்ளடங்கலாக ஏனைய மூலங்களிலிருந்தும் தரவுகளை சேகரிப்பதில் ஈடுபட்டுள்ளது.

காணாமற்போன மற்றும் காணாமலாக்கப்பட்டோரது குடும்பங்கள் தங்களது காணமற்போன மற்றும் காணாமலாக்கப்பட்ட அன்புக்குரியவர்கள் தொடர்பான விவரங்கள் இந்தத் தற்காலிக பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை உறுதிசெய்து கொள்வதற்காக கிழமை நாள்களில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரையிலான காலப்பகுதியில் காணாமற்போன ஆள்கள் பற்றிய அலுவலகத்தினை பின்வரும் 011 2056504, 0112667108 எனும் தொலைபேசி இலக்கங்களில் தொடர்பு கொள்வதற்கோ அல்லது எமது தலைமை அலுவலகத்துக்கு அல்லது பிராந்திய அலுவலகங்களிற்கு வருகை தரவோ வரவேற்கப்படுகின்றார்கள்.

காணாமற்போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்கள் குறித்த தரவுகள் பட்டியலில் இல்லாமலிருந்தாலோ அல்லது முறையாக இல்லாதிருந்தாலோ அத்தகைய விவரங்களை பதிவு செய்து காணாமற்போன ஆள்கள் பற்றிய அலுவலகத்துக்கு உதவுமாறு குடும்ப உறுப்பினர்கள் பணிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். வேறு ஏதேனும் தகவல்கள் கிடைக்கப் பெறுமானால் அது காணமற்போன ஆள்கள் பற்றிய அலுவலகத்தின் உறுதிப்படுத்தும் செயற்பாட்டிற்கு உதவக்கூடியதாக இருக்குமாகையால் அடுத்த மாதம் 15ஆம் திகதிக்கு முன்னதாக அத்தகைய தகவல்களை அலுவலகத்துடன் பகிர்ந்து கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளது. (ஒ-5)

## மைத்திரிக்கு ...

கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜேபால ஹெட்டியாராச்சி.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு அழைப்பு விடுத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறிலங்கா சுதந்திரக் கட்சியானது, இந்த நாட்டிலுள்ள முற்போக்கு சிந்தனையுடைய மக்களின் மனங்களை வென்ற கட்சியாகும். பௌத்த பிக்குகள், மருத்துவர்கள், ஆசிரியர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் என ஐம்பெரும் சக்திகளை அணிதிரட்டியே அமரர். எஸ்.டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கவால் இக்கட்சி ஆரம்பிக்கப்பட்டது.

முதலாவது பெண் பிரதமர், முதலாவது பெண் ஜனாதிபதி ஆகியோர் சுதந்திரக் கட்சியிலிருந்தே தெரிவானார்கள். ஏன் மஹிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேன போன்ற பலம்பொருந்திய அரசியல்வாதிகளைக் அக்கட்சியே உருவாக்கியது.

ஆனால், இப்படியான கட்சியை விட்டுவிட்டு, மஹிந்தவிடம் வலிந்துசென்று, அமையவுள்ள புதிய அரசியல் கூட்டணியில் இணைத் தலைமைப்பதவியை வழங்குமாறு கெஞ்சுகின்றனர். இதனை மஹிந்த தரப்பு கவனத்தில் எடுப்பதில்லை. மொட்டு சின்னத்தில்தான் போட்டியிடுவோம் எனவும் திட்டவட்டமாக அறிவித்துள்ளனர்.

மொட்டுக் கட்சியிடம் சரணடைந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு சமாதி கட்டாமல், அந்தக் கட்சியை மீட்டெடுப்பதற்காக சஜித் பிரேமதாச தலைமையில் அமையவுள்ள அரசியல் கூட்டணியில் இணையுமாறு மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கின்றேன். அவ்வாறு இல்லாவிட்டால் சுதந்திரக் கட்சி காணாமல்போய்விடும் - என்றார். (ஓ -5 -44)

## புலிகளின் ...

செயற்பட்டனர். அவர்களே இன்றும் செயற்படுகின்றனர். இவ்வாறு குற்றம்சாட்டியுள்ளார் இராஜாங்க அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஏகப் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாகக் கூறி அவர்கள் முன்வைக்கின்ற குற்றச்சாட்டை நாம் ஏற்றுக்கொள்ளவே மாட்டோம். இந்த நாட்டு மக்களும் அதேபோல் தமிழ் மக்களும்கூட ஏற்கமாட்டார்கள். அவர்களால் முன்வைக்கப்படுகின்ற குற்றச்சாட்டுக்களானது செல்லுபடியற்றதாகவே இருக்கும் என்பதே எனது கருத்தாகும்.

இந்த நாட்டில் தமிழ், சிங்களம், முஸ்லீம் மற்றும் பறங்கியர் உள்ளிட்ட மக்களுக்குச் சமவுரிமையைப் பற்றி பேசுவதாயின் இந்த நாட்டின் பெரும்பான்மையினராக உள்ள சிங்கள மக்களை ஏற்றுக்கொள்ள முடியாது என்றால் அது பிழையாகும். இந்தியாவில் பல மொழிகளும், இனத்தவர்களும் வாழ்ந்து வருகின்ற போதிலும் ஒரே மொழியிலேயே தேசிய கீதம் பாடப்படுகின்றது. அதனால் விசேடமாக சம்பந்தன் குழுவினர் இனவாதத்தைத்தூண்டுவதற்காகஏதேதையோபிடித்துக்கொள்கின்றனர். தொடர்ச்சியாக அவர்கள் இனவாதத்தைத் தூண்டிவிடுவதையே செய்கிறார்கள். 2004ஆம் ஆண்டு தொடக்கம் நாடாளுமன்றத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஏகப் பிரதிநிதிகளாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் செயற்பட்டனர். அவர்களே இன்றும் செயற்படுகின்றனர். அவர்களுக்குப் பின்னால் இன்று அரசசார்பற்ற நிறுவனங்களும் செயற்படுவதோடு இந்த நாட்டை அழிப்பதற்கே முயற்சிக்கின்றனர் - என்றார். (ஓ-5-22)




UNIVERSIDAD AZTECA | othm | University of Chichester

BACHELOR OF INFORMATION TECHNOLOGY

தகவல் தொழில்நுட்ப துறையில் சர்வதேச ரீதியிலும் உள்நாட்டிலும் U.G.C அங்கீகாரம் பெற்ற பட்டப்படிப்பாகும். இரண்டு கல்வி ஆண்டுகள் கொண்ட இக் கற்கை நெறியின் ஒரு கல்வி ஆண்டு இரண்டு Semester களை கொண்டதாகும். இக் கற்கைநெறியை பூர்த்தி செய்யும் மாணவர்கள் உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ உயர் ஊதியத்துடன் தொழில்வாய்ப்பு ஒன்றை பெற்றுக் கொள்வதற்கோ அல்லது உலகின் தலைசிறந்த பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டமேற் படிப்பு கற்கைநெறி ஒன்றை தொடர்வதற்கும் அமையும்.

BACHELOR OF INFORMATION TECHNOLOGY
TOP-UP DEGREE (1 YEAR)

UGC Recognized

அரச அல்லது அரச அனுமதிபெற்ற தனியார் உயர்கல்வி நிறுவனங்களில் உயர் தேசிய டிப்ளோமா (H.N.D) அல்லது இதற்கு நிகரான கல்வித் தகைமை உடைய மாணவர்கள் Bachelor of Information Technology பட்டப்படிப்பில் மூன்றாம் வருடத்திற்கு நேரடியாக உள்வாங்கப் படுவார்கள். (அதாவது மூன்று வருட கால பட்டப்படிப்பின் முதல் இரண்டு வருடகாலங்கள் விதிவிலக்கு (exemption) வழங்கப்படும்.

BLC CAMPUS
www.blccampus.edu.lk

உடன் அழையுங்கள்
0777 17 4443 Sapthika
0777 07 4449 Vithya

4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 437 4443
E - info@blccampus.edu.lk

TVEC Approved Centre



# கொரோனா
## இதுவும் கடந்து போகும்!

எஸ்.ராஜ்குமார்

கொரோனா வைரஸ் புயல் சற்று அடங்கி விட்டிருக்கிறது. சீனாவில் சுமார் ஆயிரம் இறப்புக்களை நெருங்கிக் கொண்டிருந்தாலும், அது சீனாவுக்கு வெளியே எதிர்பார்த்த பாதிப்பை ஏற்படுத்தவில்லை. உள்ளூரைப் பொறுத்த மட்டில் சுகாதாரத் துறை மற்றம் தொற்று நோய்ப் பிரிவு, சமுதாய மருத்துவப் பிரிவு போன்ற துறைசார் அதிகாரிகளெல்லாம் மக்களை கலவரமடையவிடாமல் அவ்வப்போது ஆங்காங்கே ஊடக சந்திப்புக்களை நடத்தி உறுதியளித்த போதிலும் அதனைப் பொதுமக்கள் எவரும் நம்பத் தயாராக இருக்கவில்லை. சப்பை மூக்குக்காரர்களைக் கண்டாலே 'துண்டைக் காணோம் துணியைக் காணோம்' என்று தலை தெறிக்க ஓடத் தொடங்கிய நிலைமை போய், உள்ளூர்காரர் ஒருவர் இடைவிடாமல் இருமினாலே அவரைச் சந்தேகக் கண் கொண்டு பார்க்கும் நிலை ஏற்பட்டது.

**பிற்போக்கான நடவடிக்கைகள்**

வேறுசிலரோ, 'ஆளே இல்லாத ஊரில ஆருக்கய்யா ரீஆத்துறா' என்ற கணக்கில் நோயே பரவாத நாட்டில் முகத்துக்குக் கவசம் அணிந்துகொண்டு உலா வந்தனர். இவர்களால் பார்மஸிகளில் தேடுவாரற்றுக் கிடந்த முகக்கவசங்களுக்கு ஏகப்பட்ட கிராக்கி ஏற்பட்டது. ஆறு ரூபா முகக் கவசங்கள் 60 ரூபாவுக்கு விற்கப்பட்டன. ஒரு கட்டத்தில் நாடு முழுவதிலும் முகக்ககவங்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது. அரசு கட்டுப்பாட்டுவிலையில்தான் முகக் கவசங்கள் விற்கப்படவேண்டும் என்று ஆணை பிறப்பிக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. தட்டுப்பாட்டைச் சரி செய்ய முகக்கவசங்களுக்கான ஓடர்கள் சீனாவுக்குப் பறந்தன. இதில் வேடிக்கை கொரோனாவைத் தந்த சீனாவிடமே நாம் அதற்குப் பாதுகாப்புத் தரும் முகக் கவசங்களையும் பெறவேண்டியிருந்தது. சீனாவிலிருந்து வரும் ஆட்களின் மூலம் கொரோனா பரவும் இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருள்கள் மூலம் பரவும் என்கிறார்களே ஒழிய இந்த முகக் கவசத்தின் மூலம் பரவாதா என்று எவரும் கேள்வி கேட்கவில்லை. சாதாரணமாக பார்மஸிகளில் விற்கப்படும் முகக்கவசங்கள் கொரோனா வைரஸ் தாக்குதலில் இருந்து காப்பாற்றப் போதுமானதல்ல. என்95 வகையான கவசங்களே ஏற்புடையவை இல்லாவிட்டால் சாதாரண முகக்கவசங்கள் என்றால் ஒன்றுக்கு இரண்டாக அணிய வேண்டும் என்று தொற்று நோய் சிகிச்சைப் பிரிவினர் காட்டுக் கத்தல் கத்தினால் எவரும் கேட்டுக் கொள்வதாக இல்லை. இது தவிர பார்மஸிகளில் விற்கப்படும் சாதாரண முகக் கவசங்கள் ஒரு தடவை பாவித்தவுடன் எறிந்துவிடும் ரகத்தைச் சேர்ந்தவை. இவற்றைத் தொடர்ந்து ஆறு மணி நேரங்களுக்கு மேல் பயன்படுத்தக் கூடாது. அப்படித் தொடர்ந்து கழற்றி வைத்துவிட்டு மறுபடி அணிந்து கொள்வதனால் வேறு ரகமான வைரஸ்கள் தொற்றக் கூடிய அபாயம் இருக்கிறது என்கிறார்கள் தொற்று நோய் சிகிச்சைப் பிரிவினர். ஆனால் எமது ஆட்களோ கேட்பதாயில்லை. ஆறுரூபாய்க்கு வாங்கி ஆறு மணிநேரம் மட்டுமே பயன்படுத்தக்கூடிய முகக்கவசங்களை ஆறு நாள்களுக்கு மேலாக அணிந்து கொண்டு சுற்றுகிறார்கள். இது சட்டியிலே இருந்து அடுப்புக்குள் விழுந்த கதையாக ஆகிவிடப்போகிறது.

**மருந்துகள் கண்டறியப்படவில்லை**

இது இவ்விதம் இருக்க சீனாவிலும் சரி ஏனைய மேற்குலக நாடுகளிலும் சரி இந்தகொரோனாஎன்றகொடியநோய்க்கு இன்னமும் மாற்று மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை ஆராய்ச்சியாளர்கள் முடியைப் பிய்த்துக்கொண்டு முடிவு எதுவும் எடுக்க முடியாமல் தடுமாறுகிறார்கள். இந்த வைரஸ் எந்த உயிரினத்தில் இருந்து மனிதனுக்குத் தொற்றியது என்பதைக் கண்டுபிடித்தால் மாற்று மருந்து கண்டு பிடிப்பது சுலபம் என்கிறார்கள். ஆனால் வைரஸின் தோற்றுவாய் எதுவென்பது சுத்த சூன்யமாக இருக்கிறது. வௌவால் என்கிறார்கள், காட்டு விரியன் பாம்பு என்கிறார்கள், பூச்சி என்கிறார்கள், புழு என்கிறார்கள் ஆனால் நிச்சயமாக எதனையும் சொல்கிறார்கள் இல்லை. இதனால் 'என்னத்தயடா தின்றீர்கள்' என்ற தோறணையிலும் 'எதையடா விட்டு வைத்தீர்கள்' என்ற ரீதியிலும் ஆய்வுகள் தொடர்கின்றன. இந்த வைரஸ் எப்படி பரவியது என்பதில் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக காரணங்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. நாமெல்லாம் நடப்பன, ஓடுவன, பறப்பன நீந்துவன என்று கட்டுப்பாட்டுடன் சாப்பிட, சீனர்களோ ஊர்வன, நெளிவன, சுருள்வன, மிதப்பன என்று மனிதர்களை தவிர மற்றப்பல உயிர்கள் எதனையும் விட்டு வைக்கவில்லை. பாம்பு, பல்லி, கரப்பான், பூரான், புலுநகச் சிலந்தி, தேள் என்று எல்லாவற்றையும்மென்று மிழுங்கு வார்கள். இதில் ஏதோ ஒன்றிலிருந்துதான் இந்தக் கிருமி சீனர்களைப் போட்டுத் தாக்கியிருக்கிறது. இவர்கள் சூப் வைத்துக் குடித்த வௌவாலிலோ, அல்லது அந்த வௌவாலை வேட்டையாடித் தின்ற பாம்பை. இவர்கள் சூப் வைத்துக் குடித்ததாலோ தான் கொரோனா வைரஸ் மனித உடலில் குடியேறியதாகச் சொல்லப்படுகிறது. நம்மவர்கள் பார்த்தாலே சத்தி (வாந்தி) எடுத்துவிடக் கூடிய உயிரினங்களையெல்லாம் அவர்கள் சத்தான உணவென்று வயிற்றுக்குள் தள்ளியதால் தான் இந்த விதை விதைக்கப்பட்டதாக சொல்லப்படுகிறது.

**இப்படியும் ஒரு விளையாட்டு**

மற்றொரு புறம் மதவாதிகளோ சீனர்கள் கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள். அதனால் கடவுள் இட்ட தண்டனை என்று கொழுத்திப் போடுகிறார்கள். இதிலும் முஸ்லிம் அடிப்படைவாதிகள் வாதம் வேற லெவலிலே இருக்கிறது. சீனாவில் முஸ்லிம் மதத்துக்குக் கட்டுப்பாடுகள் அதிகம். பெண்கள் முகத்தை மூடக் கூடாது. ஆண்கள் தாடி வளர்க்கக் கூடாது என்கிறது சீன அரசு. எவ்வளவோ போராடிப் பார்த்தும் முஸ்லிம்களுக்கு இந்த மதச் சலுகைகள் அனுமதிக்கப்படுவதில்லை. இதனால் தான் இந்த நோய்வந்தது. எமது பெண்களை முகத்தை மூடக்கூடாது என்று கட்டளையிட்ட சீனர்கள் இப்போ தாங்களே முகத்தை மூடிக்கொண்டு திரிய வேண்டிய நிலையை கடவுள் ஏற்படுத்திவிட்டார் என்கிறார்கள்.

இது தவிர, சீனா எதிரிகளை அழிக்கவென உருவாக்கிவரும் உயிராயுதத்தை உருவாக்கும் ஆய்வு கூடங்கள் வுகான் நகரப்பகுதியிலேயே இருப்பதாகவும், நச்சுக் கிருமிகளைப் பரப்பி எதிரிகளை கொல்வதும் சீனாவின் திட்டமெனவும். இது வுகானில் பரிசோதிக்கப்பட்டு வருவதாகவும் அவ்வாறு பரிசோதிக்கப்படும் கிருமிகள் சில ஆய்வு கூடத்தை விட்டுத் தப்பி வந்ததால் தான் இந்த வினை ஏற்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. ஆனால் சீன அரசு இதனை மறுக்கிறது.

உள் நாட்டிலோ கொரோனா நோய் என்று அடையாளம் காணப்பட்ட சீனப் பெண் அங்கொடை வைத்தியசாலையில் தேறிவருகிறார். ஆனால் அவர் இலங்கைக்கு வந்து எங்கெல்லாம் நோயைப் பரப்பித் தொலைத்தாரோ என்ற ரீதியில் பாண் வாங்கிய பேக்கறியில் இருந்து படுத்து உறங்கிய ஹோட்டல் வரை எல்லா இடங்களும் ஆய்வு செய்யப்படுகின்றன. சீனாவில் இருந்து மாணவர்கள் அனைவரும் பொட்டலங்களாக் கட்டப்பட்டு கூட்டி வரப்பட்ட நிலையில் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். பரிசோதனைகளில் அவர்களுக்கு நோய் தொற்று இல்லை என்று சொல்லப்படுகிறது. நமது ஜனாதிபதி இந்த மாதம் சீன செல்ல இருந்தார். அவரும் கொரோனா காரணமாக தனது பயணத்லதத் தள்ளிவைத்துவிட்டார்.

**வரும் ஆனா வராது**

இவ்வாறாக உள்நாடு சுமூகமாகப் போய்க்கொண்டிருந்தாலும் உள்ளூரிலே சீனாவினால் மேற்கொள்ளப்பட்டுவரும் பாரிய அபிவிருத்தித் திட்டங்களில் தொழிலாளிகளாக கடமையாற்றும் சீன பிரஜைகளில் பெரும்பாலானவர்கள் புதுவருடதினத்தைக் கொண்டாடுவதற்காக சீன சென்றுள்ளனர். சுமார் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இவர்கள் இனிவரும் நாள்களில் இலங்கை திரும்ப இருக்கிறார்கள். இவர்கள் வரும்போது கொரோனா வைரஸையும்தம்முடன் கொண்டுவந்து விடுவார்களோ என்று கதிகலங்கிப் போயிருக்கிறார்கள் இங்குள்ள அதிகாரிகள். இது தவிர இலங்கைக்கு வரும் உல்லாசப் பயணிகளிலும் பெருமளவானோர் சீனாவிலிருந்து தான் வருகிறார்கள். அவர்களும் இங்கு கொரோனாவைக் கொண்டுவராமல் தடுக்க, படாதபாடுபட்டு வருகிறார்கள். ஏனென்றால் கட்டுநாயக்க விமான நிலை யத்தில் உள்ள 'தேமல் ஸ்கீரினிங்' இயந்திரம் கொரோனா வைரஸ் தொற்றில் நோயாளியை அடையாளம்காண சிறந்த ஒன்றாக இல்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது. 'ஏழைக் கேத்த எள்ளுருண்டை' என்று ஏதோ இருப்பதை வைத்து இழுத்தடிக்கிறோம் என்கிறார்கள் விமான நிலைய சுகாதாரப் பரிசோதகர்கள்.

இவையெல்லாவற்றுக்கும் மேலாக, கொரோனா வைரஸ் என்பது உடனடியாக நோயாளியிடம் அடையாளம் காணப்படக் கூடிய ஒன்றல்ல எனவும் தெரிவிக்கப்படுகிறது. கிட்டத்தட்ட அது 10 நாள்கள் முதல் இரண்டு வாரங்கள் வரை நோய் தொற்றிய ஒருவரின் உடலில் உறங்கு நிலையில் இருக்கும் என்றும் அதற்குப் பின்னரே தனது வேலையைக் காட்டும் என்றும் சொல்லப்படுகிறது. இந்த நிலையில் குறிப்பிட்ட காலத்துக்கு முன் 'ஸ்கேனிங்' இயந்திரம் மூலம் நோயாளியை அடையாளம் காண்பது சிரமமானது என்கிறார்கள் மருத்துவத்துறை சார்ந்தவர்கள். இவ்வாறான பாதகநிலைகள் பல இருக்கும் போதும் இது போன்ற கொடிய நோய்கள் இலங்கையைத் தாக்கினால் நாடு தாங்குமா என்ற கேள்வியும் முன்வைக்கப்படுகிறது. நோய் பரவாமல் தடுக்க ஏகப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் அறிவிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. நோய் பரவாமல் தடுக்க மக்கள் ஒத்துழைப்பும் கோரப்படுகிறது. ஏற்கனவே கோழிக் காய்ச்சல், பன்றிக் காய்ச்சல், 'சார்ஸ்', 'எபோலா' என்று ஏகப்பட்டதை பார்த்த நாம் இதுவும் ஒருநாள் கடந்து போகும் என்று ஆறுதல்பட்டுக்கொள்வோம்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# எதிர்க்கடை சரிவருமா?

கீரைக்கடைக்கும் எதிர்க்கடை வேண்டும் தான். ஏனெனில் தனித்து இருந்தால், எப்படியும் எங்களிடம் தானே வாங்கவேண்டுமென்ற 'மிதப்பில்' விலையைக் கூட்டியும், தரமற்ற பொருள்களைத் தலையில் கட்டியும் கீரைக்கடைக்காரர் ஒரு வழி பண்ணிவிடுவார். ஆனால் அதற்குப் போட்டியாக இன்னொரு கடை முளைக்குமாயின், வியாபாரப் போட்டி காரணமாக வாடிக்கையாளர் கவனிப்பு நன்றாக இருக்கும். விலையும் கட்டுப்படியானதாகவும், தரமான கீரையாகவும் இருக்கும். இவற்றில் ஏதேனும் ஒன்று விடுபட்டால்கூட வாடிக்கையாளர்கள் எதிர்க்கடையிடம் இழக்கவேண்டிய நிலை வந்துவிடும். இதனால் நன்மையடைப்போவதென்னவோ, வாடிக்கையாளர்கள் தான்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு , தமிழீழ விடுதலைப் புலிகள் வகுத்த வழியில் தமிழ்த் தேசியப் பாதையில் பயணித்து, தமிழர்களின் ஏகோபித்த அரசியல் சக்தியாக உருவெடுத்திருக்கிறது. இருப்பினும் ," வீட்டுச் சின்னத்தில் விளக்குமாற்றை வேட்பாளராக்கினால் கூட வெற்றி பெறும்' என்கிற அளவுக்குக் கிடைக்கும் தொடர்ச்சியானமக்கள் ஆதரவு, கூட்டமைப்புக்குள்ளே சிலரிடம் ஒரு எண்ணத்தை உண்டாக்கியிருந்தது. இதன் தொடர்ச்சியாக நிகழ்ந்த சில சம்பவங்களும், மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் கூட்டமைப்பு காட்டிய அசமந்தமும் மக்களிடையே ஒருவித அதிருப்தி நிலையை உண்டாக்கியிருந்தது. இதனால், கூட்டமைப்பைத் தவிர்த்து மக்கள் பலமுள்ள தமிழ்த் தேசியத்தின் பக்கம் நிற்கக் கூடிய இன்னொரு மாற்று சக்தி வராதா எனத் தமிழர்கள் ஏங்கினர். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் தமிழ்த் தேசியத்தின் பாதையில் பயணித்தாலும், பெரும்பாலான தேர்தல்களில் அந்தக் கட்சியை கூட்டமைப்புக்கு மாற்றாக மக்கள் பலரும் கருதவில்லை.

இந்த நிலையில் தான் கூட்டமைப்புக்குள் நடந்த உட்கட்சிப் பூசல், பதவிக் கவிழ்ப்புச் சதி , ஓரங்கட்டப்படல் போன்ற பல காரணிகளால் கூட்டமைப்பிலிருந்து வெளியேறிய , வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன், கவர்ச்சி மிக்க ஜனவசியம் கொண்ட ஒரு மாற்றுசக்தி தலைவராக ஆரம்பத்தில் அடையாளப்படுத்தப்பட்டார். இருப்பினும் தன்னுடைய மேட்டுக்குடித்தன அரசியல் பாணியாலும், வாய்க்கு வந்ததை 'அடித்து விடும்' காகிதப்புலித்தனத்தாலும் அவரின் விம்பம் சடுதியாகச் சரிந்தது. ஒரு கட்டத்தில் விக்னேஸ்வரன்தலைமையில் கூட்டமைப்பையேமிஞ்சக்கூடியளவுக்கு ஒருஅரசியல்கூட்டுச்சக்தி எழுச்சி பெறும் என்ற நிலை, மெல்ல மெல்ல மாறி இப்போது விக்னேஸ்வரன் தரப்பு நாடாளுமன்றத் தேர்தலில் ஒரு ஆசனத்தையாவது பெற்றாலே பெரிய வெற்றி என்னுமளவுக்கு தேய்ந்து போய்விட்டது.

இந்த நிலையில் தான், தன்னைப் போலவே கூட்டமைப்பில் இருந்து துரத்திவிடப்பட்டவர்கள் அல்லது விலகியவர்களை ஒன்றிணைத்து, புதிய அரசியல் கூட்டணி ஒன்றை தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியை நேற்று ஆரம்பித்துள்ளார் விக்னேஸ்வரன். ஆனால் அபத்தம் என்னவெனில், "கூட்டமைப்பில் எந்த அதிகாரம் தலைவிரித்தாடுகிறது, அங்கு கொள்கைகள் சுயலாப அரசியலுக்காக பலியிடப்பட்டு விட்டது" என்றெல்லாம் சொன்னவர்களே, இப்போது அதே அதிகாரவெறி பிடித்தவர்களாகவும், ஆசனப்பங்கீட்டுக்காக கொள்கையைத் தூக்கி குப்பையில் போட்டவர்களாகவும் மாறியே இந்தப் புதிய கூட்டணியில் கூட்டமைப்புக்கான எதிர்க் கீரைக்கடையில் இணைந்துள்ளார்கள். ஆசனப்பங்கீட்டுக்கான 'அடிபாட்டுடனேயே' இந்தக் கூட்டணி உதயமாகியுள்ளது. முதல் கோணல் முற்றும் கோணல் என்பார்கள். தேர்தல் அரசியலை மட்டுமே நோக்காகக் கொண்டு, வேறெந்தக் கொள்கையும் அற்றுப்போய் உருவாக்கப்பட்டுள்ள இந்தக் கூட்டும் முற்றும் கோணலாகுமா, இல்லையேல் அதைச் சரிசெய்து உண்மையான மக்கள் அரசியலுக்கான சக்தியாக எழுச்சி பெறுமா என்பது , அந்தக் கூட்டணியில் உள்ளவர்களின் கையிலேயே உள்ளது.



# புத்தாண்டுக்கு முன்னர் தேர்தல் நடத்த விடோம்

## சஜித் பிரேமதாச போர்க்கொடி



**கொழும்பு, பெப்.10**
**நாடாளுமன்றத்தை முன்கூட்டியே கலைத்துப் பொதுத் தேர்தலை நடத்தும் யோசனைக்கு ஒருபோதும் ஆதரவளிக்கமாட்டோம் என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.**

நாட்டின் பொருளாதாரம் ஆட்டம் கண்டுள்ளதுடன், மக்களின் வாழ்க்கைச்செலவும் உச்சம் தொட்டுள்ளது. இந்த நிலைமை தொடர்ந்தால் ஆட்சிக்கு ஆபத்து ஏற்பட்டுவிடும் என்பதாலேயே முன்கூட்டியே தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது எனவும் எதிர்க் கட்சித் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் பொதுத் தேர்தலை நடத்துவதற்கு அரசு முயற்சித்து வருகின்றது எனவும், அதற்கு ரணில் தரப்பும் பச்சைக்கொடி காட்டியுள்ளது எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அண்மையில் நடைபெற்ற ஆளுங்கட்சியின் நாடாளுமன்றக்குழுக் கூட்டத்திலும் இது தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது என அறியமுடிகின்றது. 'ஈஸ்டர்' தாக்குதல் நடத்தப்பட்டு எதிர்வரும் ஏப்ரல் 21 ஆம் திகதியன்று ஓராண்டு பூர்த்தியாகின்றது. ஏப்ரல் இறுதி வாரத்தில் பொதுத் தேர்தல் நடத்தப்படுமானால் அது ஏதேனும் ஒரு விதத்தில் தமது கட்சிக்கு பின்னடைவை ஏற்படுத்தும் என்பதால் ஏப்ரல் முதல் வாரத்தில் தேர்தலை நடத்துவதற்கு ரணில் தரப்பும் பச்சைக்கொடி காட்டியுள்ளது என தெரிய வருகின்றது.

அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்தின் படி நான்கரை ஆண்டுகளுக்குப் பின்னரே நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கு இருக்கின்றது. எனினும், நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் தீர்மானமொன்றை நிறைவேற்றினால் முன்கூட்டியே நாடாளு மன்றை கலைக்க முடியும் என்றும், இதன்பிரகாரம் அதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படலாம் எனவும் தகவல் வெளியாகியுள்ளன.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்ததாவது:

நான்தான் எதிர்க்கட்சித் தலைவர். எமது தரப்பு எவருடனும் 'டீல்' பேசவில்லை. குறித்தொதுக்கப்பட்ட காலப்பகுதியில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

பொருளாதார நெருக்கடியை முகாமை செய்யமுடியாமல் அரசு திண்டாடுவதுடன், புத்தாண்டுக்கு மக்களுக்கு நிவாரணங்களை வழங்க முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது. இந்த நிலை தொடர்ந்தால் மக்கள் அதிருப்தியடைவார்கள் என்பதாலேயே மார்ச் 2ஆம் திகதிக்கு முன்னர் நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு முயற்சிக்கின்றனர்.

அவ்வாறு செய்வதாக இருந்தால் நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை அவசியம். அதற்கான ஒத்துழைப்பை ஐக்கிய தேசிய முன்னணி வழங்காது- என்றார். (எ-44)

# மாம்பிராய் வைரவருக்கு 30 ஆண்டுகளின் பின் தேர்

யாழ்ப்பாணம், பெப்.10

காங்கேசன்துறை, மாம்பிராய் ஞானவைரவர் ஆலயத்தின் தேர்த்திருவிழா 30 ஆண்டுகளின் பின்னர் நேற்று சிறப்புற நடைபெற்றது.

1990 ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கை காரணமாக, 28 ஆண்டுகள் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் உயர்பாதுகாப்பு வலயமாக இந்தப் பிரதேசம் காணப்பட்டது.

2018 ஆம் ஆண்டு மக்கள் மீள் குடியேற்றத்துக்கு அனுமதிக்கப்பட்டனர். அதன் போது மாம்பிராய் ஞானவைரவர் ஆலயம் இடித்து அழிக்கப்பட்டிருந்தது.

அழிக்கப்பட்ட ஆலயத்தை மக்கள் தமது சொந்த முயற்சியில், புலம்பெயர் நாடுகளில் வாழ்ந்து வரும் தமிழர்களதும் நிதிப் பங்களிப்பிலும் புதுப் பொலிவுடன் கட்டி முடித்தனர். ஆலயத்தில் கடந்த 29 ஆம் திகதி எண்ணைக் காப்பு சாத்தி மறுநாள் கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பமானது. நேற்று தேர்த் திருவிழா மிகக் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. (க-160)




# கண்காணிப்பு ராடருக்குள் கொழும்பு துறைமுகம்!

கொழும்பு, பெப்.10

கொழும்பு துறைமுகத்தை கண்காணிப்பதற்காக முழுமையான அளவில் 'சி.சி.டி.வி.' கட்டமைப்புகள் விரைவில் பொருத்தப்படவுள்ளன. துறைமுக அதிகார சபையால் முன்வைக்கப்பட்ட இதற்கான யோசனைக்கு அமைச்சரவையும் ஒப்புதல் வழங்கியுள்ளது.

துறைமுகத்தின் பிரதான வாயில்கள், உப வாயில்கள், கட்டடங்கள், களஞ்சியசாலைகள், வீதிகள், பாதுகாப்பு வேலிகள் உட்பட அனைத்து பகுதிகளிலும் கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தப்படவுள்ளன. அதற்கான விலை மனு கோரப்படவுள்ளது என்றும் இவ்வாறு கண்காணிப்பு கமராக்களை பொருத்துவதன் ஊடாக துறைமுகத்தில் இடம்பெறும் சில அநாவசிய சம்பவங்களை தடுக்ககூடியதாக இருக்கும் எனவும் கூறப்படுகின்றது. (எ-44)



# பிரெக்சிட்

## பிரிட்டனுக்கு வரமா? சாபமா?

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து ஜனவரி 31ஆம் திகதி இரவு 11 மணிக்கு அதிகாரபூர்வமாகவே வெளியேறிவிட்டது பிரிட்டன். உலகின் 80க்கும் மேற்பட்ட நாடுகளைத் தன்னுடைய காலனியாக ஒரு காலத்தில் வைத்திருந்த 'சூரியன் மறையாத பேரரசு', தோளில் ஏறிக்கொண்ட கிழவனிடமிருந்து தப்பித்த சிந்துபாத்தைப் போல இதை மகிழ்ச்சியாகக் கொண்டாடியது. பிரிட்டனின் பிரதமர் போரிஸ் ஜோன்சன், 'பிரெக்ஸிட்' கட்சித் தலைவர் நைஜல் பாரேஜ் ஆகியோர் கொண்டாடியவர்களில் முக்கியமானவர்கள். பிரிட்டனின் நாடாளுமன்ற உறுப்பினர்களிலும் வாக்காளர்களிலும் பெரும்பாலானவர்கள் 'பிரெக்ஸிட்'டைப் பொறுத்தவரையில் கருத்தளவில் எதிரெதிர் நிலையிலேயே இருக்கின்றனர்.

'நட்புணர்வுடன் கூடிய ஒத்துழைப்பில் புதிய சகாப்தம் தொடங்கியிருக்கிறது' என்று போரிஸ் ஜோன்சன் குறிப்பிட்டிருக்கிறார். 'புதிய கொள்கைகளை வகுக்கவும், வெளிநாட்டவர் குடியேறுவதைக் கட்டுப்படுத்தவும், வரியற்ற சுதந்திரமான துறைமுகங்களை உருவாக்கவும், நம்முடைய தொழிலைக் கட்டுப்பாடுகளிலிருந்து விடுவிக்கவும், தடையற்ற வர்த்தக உடன்பாடுகளை விருப்பம்போலச் செய்துகொள்ளவும் நமக்கு அதிகாரம் கிடைத்திருக்கிறது' என்று 'பிரெக்ஸிட்' ஆதரவாளர்கள் குதூகலிக்கின்றனர். ஆனால், பிரிட்டிஷ்வாசிகள் எல்லோரும் இப்படி மகிழ்ந்துவிடவில்லை. ஸ்காட்லாந்தின் 'முதலாவது அமைச்சர்' என்று அழைக்கப்படும் நிகோலா ஸ்டர்ஜன் பிரெக்ஸிட்டைக் கொண்டாடவில்லை.

'மீண்டும் ஐரோப்பிய ஒன்றியத்துக்குள் பிரிட்டன் வந்துவிடும்' என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார். ஒன்றியத்திலிருந்து விலகியிருந்தாலும் பிரிட்டனுடன் சுமுக உறவையே விரும்புவதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆணையர் தலைவர் உருசுலா வொன்டர் லேயன் தெரிவிக்கிறார். பிரிட்டனுக்கான ஐரோப்பிய ஒன்றியத் தூதர் ஜோவோ வேலா டி அல்மெய்டாவும் இதே கருத்தை எதிரொலிக்கிறார்.

### மீண்டும் வருமா தாட்சரின் காலம்?

இந்த விலகல்கூட உடனடியாக நடைமுறைக்கு வந்துவிடாது. மேலும் சில மாதங்களுக்கு இப்போதுள்ள ஏற்பாடுகள்தொடரும். வரியற்றசுதந்திரமான ஒரே சந்தை, சரக்குகள், சேவைகள், மூலதனம், தொழிலாளர்கள் தடையில்லாமல் ஐரோப்பிய நாடுகளுக்குள் சென்றுவரும் உரிமை, ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றத்துக்குக் கட்டுப்பட்ட நிலை ஆகியவை 'பிரெக்ஸிட்' டுக்கு முந்தைய நிலையாகும். 2022ஆம் ஆண்டில்தான் 'பிரெக்ஸிட்' முழுமை பெறும் என்று தெரிகிறது. 'பிரெக்ஸிட்' ஆதரவாளர்கள் உடனடியாக எல்லா வகையிலும் வெளியேறிவிடத் துடிக்கிறார்கள்.

'பிரெக்ஸிட்' ஆதரவாளர்கள் அனைவரும் ஒரே குழு அல்லது பிரிவைச் சேர்ந்தவர்கள் அல்லர்.

அவர்களிலும் எதிரெதிர் கொள்கைகளும் இலட்சியங்களும் நோக்கங்களும் உள்ளவர்கள் உள்ளனர். அரசியல் ரீதியாக ஆதரிப்போர், இனரீதியாக எதிர்ப்போர், வியாபார நோக்கில் வரவேற்போர், தேசிய அடிப்படையில் பிரிட்டன் பழைய நிலைக்கு வரவேண்டும் என்று நினைப்போர் என்று இவர்கள் பலதரப்பட்டவர்கள்.

'பிரெக்ஸிட்'டிலிருந்து பிரிட்டன் வெளியேறிவிட்டாலே பிரிட்டனுக்குள் சந்தைகள் மீதான கட்டுப்பாடுகள் தளர்ந்துவிடும், வரிவிகிதங்கள் குறைந்துவிடும், யார் வேண்டுமானாலும் எதை வேண்டுமானாலும் தயாரித்து விற்றுக்கொள்ள வழியேற்பட்டுவிடும் என்றெல்லாம் சிலர் பேசுகின்றனர். பிற ஐரோப்பிய நாடுகளிலிருந்து பிரிட்டனுக்குள் வேலைதேடி வருவோரைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று பிரிட்டிஷ் தேசியவாதிகள் விரும்புகின்றனர்.

ஐரோப்பிய ஒன்றியம் தலையிட்டு, எமக்குக்கட்டளை இடுவது நிறுத்தப்பட வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்துகின்றனர். 1945ஆம் ஆண்டு முதல் 1979ஆம் ஆண்டு வரையில் நிலவிய உயர் வருமான, ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரம் மீண்டும் ஏற்பட வேண்டும் என்று உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்த வெள்ளைக்காரர்கள் விரும்புகின்றனர். மார்கரெட் தாட்சர் காலத்தில் அப்படி இருந்தது. அதை ஐரோப்பியநாடுகள்கேட்டபோது, 'என் நாட்டில் தொழில் துறை மீதான கட்டுப்பாடுகளை நீக்கினேன், வரிகளைக் குறைத்தேன், அதனால் பிரிட்டனில் வளம் சேர்கிறது, அதைக் கேட்க நீங்கள் யார்?' என்று தாட்சர் அவர்களைப் பார்த்து எதிர்க்கேள்வி எழுப்பினார். தனியார் துறைக்கு பிரிட்டிஷ் அரசு அப்போது தந்த நிதி மானியத்தால் முழு வேலைவாய்ப்பு நிலை ஏற்பட்டது.

### உண்மை நிலை என்ன?

இப்படி பிரிட்டிஷ் தேசியர்கள் அந்த நாட்களை நினைத்து உருகி உருகிப் பேசினாலும், ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒற்றைச் சந்தையால்தான் பிரிட்டனால் தாக்குப்பிடிக்க முடிந்தது என்பதே உண்மை. பிரிட்டன் ஏற்றுமதி செய்யும் 45 வீதச் சரக்குகளையும் சேவைகளையும் ஐரோப்பிய நாடுகள்தான் வாங்கிக்கொள்கின்றன. எனவே, அந்தச் சந்தை இல்லாவிட்டால் பிரிட்டனின் பாடு திண்டாட்டம்தான்.

35 ஆயிரம் கோடி டொலர்கள் மதிப்புள்ள உணவுப் பண்டங்கள், மருந்து மாத்திரைகள், வாகனங்கள், நிதிச் சேவைகள் ஆகியவற்றை பிரிட்டன் ஆண்டுதோறும் ஏற்றுமதி செய்கிறது. ஒன்றியத்திலிருந்து முற்றாக விலகிய பிறகு, பிரிட்டனுக்கு அங்கே செல்வாக்கு இருக்காது. விருப்பப்படி பொருட்களை விற்க முடியாது. ஐரோப்பிய ஒன்றியத்தின் விதிகளுக்குக் கட்டுப்பட வேண்டும்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் விதிகளை உருவாக்குவதில் முக்கியப் பங்கு வகித்த பிரிட்டன், இனி வெளியில் நின்றுகொண்டு அவர்களிடம் சலு




கைக்காக மன்றாட வேண்டும். ஐரோப்பிய ஒன்றியத்தின் தரக் கட்டுப்பாடுகளை மீற முடியாது. ஏற்றுமதி மதிப்புக்கும், அளவுக்கும் கட்டுப்பாடுகள் வரக்கூடும். எனவே, அதன் சந்தை குறைவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இந்தியா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, கனடா ஆகிய நாடுகளுக்கு விற்று ஐரோப்பியச் சந்தையில் இழப்பதை ஈடுகட்டிவிட முடியும் என்று பிரிட்டன் நினைக்கிறது.

இந்த நாடுகள் முன்பிருந்த மாதிரி காலனி நிலையில் இப்போது இல்லை. 'பிரிட்டனுடன் மனித ஆற்றல் துறையில் கொடுக்கல் வாங்கல் வைத்துக்கொண்டால், ஆஸ்திரேலிய சுகாதாரத் துறையில் உள்ள மருத்துவர்களையும் தேர்ந்த செவிலியர்களையும் பிரிட்டன் அழைத்துச் சென்றுவிடும், அதன் தேசிய சுகாதாரத் துறைக்கு எப்போதும் ஆள் பற்றாக் குறை இருந்துகொண்டே இருக்கிறது' என்கிற அச்சம் ஆஸ்திரேலியாவுக்கு இருக்கிறது.

கனடாவுக்கு அது தயாரிக்கும் பொருட்களை விற்கும் சந்தையாக அமெரிக்கா அதன் வீட்டு வாசலிலேயே அமைந்திருக்கிறது. பிரிட்டன் வரை வந்து விற்க அதுமெனக்கெட வேண்டியதில்லை. இந்தியாவுடன் வர்த்தக உறவு வைத்துக் கொள்ள விரும்பினால், தன் நாட்டிலிருந்து தொழிலாளர்களையும் மாணவர்களையும் வரம்பின்றி பிரிட்டன் ஏற்றுக்கொள்வதாக இருந்தால்தான் சலுகை தர முடியும் என்று இந்தியா வலியுறுத்தக்கூடும். காலம் பதில் சொல்லும் ஆஸ்திரேலியா, கனடா, நியூஸிலாந்து நாடுகளின் மொத்த பொருளாதார உற்பத்தி மதிப்பு 3.3 இலட்சம் கோடி டொலர்கள் மட்டுமே. இது பிரிட்டனின் மொத்த உற்பத்தி மதிப்பைவிட 55,000 கோடி டொலர்கள்தான் அதிகம்.

இந்தச் சந்தைக்காக ஐரோப்பாவை இழப்பது பிரிட்டனுக்குத்தான் தீங்காக அமையும். இந்தியாவின் மொத்த உற்பத்தி மதிப்பு பிரிட்டனுக்குச் சமமானதுதான். எனவே, இந்திய வர்த்தக உறவால் பிரிட்டனுக்குப் பெரிய லாபம் ஏற்பட்டுவிடப் போவதில்லை. அதே வேளையில், ஐரோப்பாவின் மொத்த உற்பத்தி மதிப்பு 18.7 லட்சம் கோடி அமெரிக்க டொலர்கள்.

எனவே, பக்கத்துவீட்டுக்காரரைப் பிடிக்க வில்லை என்பதற்காக பக்கத்துத் தெருக்காரர்களின் சகவாசத்தை நாடுகிறது பிரிட்டன். அவை பிரிட்டனை வரவேற்கும் மனநிலையில் உள்ளனவா என்பதும் சந்தேகம்தான். அதைவிட முக்கியம், இந்த நாடுகள் தனக்கு ஒரு காலத்தில் காலனியாக இருந்தவை என்பதாலும் காமன்வெல்த் அமைப்பில் தொடர்வதாலும் சொன்னால் கேட்டுக்கொள்ளும் என்ற ஆதிக்க மனோபாவம் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களிடம் இன்னமும் காணப்படுகிறது.

இந்த நாடுகளின் ஜனநாயக முதிர்ச்சியும் பொருளாதார வளர்ச்சியும் ஆதிக்கங்களைத் தொடர்ந்து ஏற்கும் மனநிலையை அவற்றுக்குத் தராது. பிரிட்டனுக்கு சமமாகத்தான் அவை அமர்ந்து பேரங்களில் ஈடுபடும். எல்லா நாடுகளிலுமே வேலையில்லாத் திண்டாட்டமும் உற்பத்திக்கான வாய்ப்புகளும் குறைவாகவே இருக்கின்றன. எல்லா நாடுகளுமே ஏற்றுமதிக்கு சந்தைகளைத் தேடுகின்றன. பிரிட்டன்கையிலிருந்தவெண்ணெயை வீசிவிட்டு, வேறெங்கோ நெய்யைத் தேடுகிறதோ என்றும் உலக அரசியல் பார்வையாளர்கள் சந்தேகப்படுகிறார்கள். செயற்கை நுண்ணறிவு, இயந்திரமயமாக்கல் என்று தொழில் துறை உற்பத்தி முறைகள் மாறிவிட்ட நிலையில், எல்லா நாடுகளும் பரஸ்பர சந்தைகளாக இருந்தால்தான் சாத்தியம். பிரெக்ஸிட் பிரிட்டனுக்கு வரமா, சாபமா? காலம் பதில் சொல்லும். ■

# முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு சு.கவினரை சந்திக்கும் பஸில்

**கொழும்பு, பெப்.10**

**மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உயர்மட்டப் பிரமுகர்களுக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபனக்ஷவுக்குமிடையில் விரைவில் முக்கியமானதொரு சந்திப்பு நடைபெறவுள்ளது.**

ஜனாதிபதித் தேர்தலின்போது கோத்தாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கிய ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை ஓரங்கட்டும் வகையிலும், கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையைமீறும்விதத்திலும்ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் சரமாரியாகக் கருத்துகளை வெளியிட்டுவரும் சூழ்நிலையில் இரு அணிகளினதும் உயர்மட்ட பிரமுகர்கள் நேரில் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளமை அரசியல் வட்டாரத்தில் முக்கியத்துவம்மிக்கதாகக் கருதப்படுகின்றது.



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையில் அமையும் பரந்துபட்ட அரசியல் கூட்டணியின் தலைவர், பொதுச் செயலாளர், பொருளாளர் ஆகியபதவிகளைவிட்டுக்கொடுப்பதற்குத் தீர்மானித்துள்ள சுதந்திரக் கட்சி, பொதுத்தேர்தலில் இணைந்து போட்டியிட 30 வீத ஆசன ஒதுக்கீட்டை கோரியுள்ளதுடன், கூட்டணியிலும் சில பதவிகளை எதிர்பார்த்து காத்திருக்கின்றது.

எனினும், இணைத் தலைமைப்பதவி உட்பட உயர்பதவி எதனையும் வழங்க முடியாது என்றும், 30வீத ஒதுக்கீடுகூடசாத்தியமில்லைஎன்றும் தனித்துப் போட்டியிடுவதே சுதந்திரக்கட்சிக்குச் சிறந்தது என்றும் மொட்டுக்கட்சிகாரர்கள் அறிவிப்புகளை விடுத்து வருகின்றனர். அதனால் சுதந்திரக்கட்சிக் காரர்கள் கடும் அதிருப்தியில் இருக்கின்றனர். மறுதரப்பினர் மொட்டுச் சின்னத்தையும் கைவிட முடியாது என இடித்துரைத்துவருகின்றனர்.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே பஸில் ராஜபக்ஷவை சந்தித்து முக்கியமான சில விடயங்கள் தொடர்பில் மைத்திரிபால சிறிசேன தலைமையிலான குழுவின் கலந்துரையாடுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஜனாதிபதித் தேர்தலை மொட்டுச் சின்னத்திலும், பொதுத் தேர்தலை கதிரைச் சின்னத்திலும் எதிர்கொள்வதற்கு இரு தரப்புகளும் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்தன. (எ-44)



## முன்பள்ளி திறந்து வைப்பு

யாழ்ப்பாணம். பெப்.10

இருபாலை கிழக்கு பாரதி கலாமன்ற சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் முன்பள்ளி திறந்து வைக்கப்பட்டுள்ளது. நேசதுரை திருநேசன் ஞாபகார்த்தமாக அவரது மகன் நேசனின் நிதியுதவியுடன் இந்த முன்பள்ளி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் யாழ். கல்வி வலய முன்பள்ளி உதவிக்கல்விப்பணிப்பாளர் எஸ். கணேசலிங்கம், கோப்பாய் கோட்ட முன்பள்ளி இணைப்பாளர் திருமதி.ப.நாகேஸ்வரி, ஈரோஸ் இயக்கத்தின் முக்கியஸ்தர் மற்றும் கிராம அலுவலர் நகுலேஸ்வரன், பெற்றோர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ந)

## திருநெல்வேலி சந்தைக்கு விரைவில் சி.சி.ரி.வி கமரா

யாழ்ப்பாணம்,பெப்.10



நல்லூர் பிரதேச சபையின் ஏற்பாட்டில் திருநெல்வேலிச் சந்தைக்கு விரைவில் கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தப்படவுள்ளன.

சந்தைச் சுற்றாடல் மற்றும் உட்புறப் பகுதிகளில் கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தப்படவுள்ளன. சந்தை வளாகத்தில் இடம் பெற்று வரும் திருட்டு மற்றும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் வகையில் கண்காணிப்புக் கமராக்கள் விரைவில் பொருத்தப்படும் என்று பிரதேச சபையினர் தெரிவித்தனர்.

சந்தை வளாகத்தில் மரக்கறிகளைச் சிலர் தந்திரமாகக் களவாடிச் செல்கின்றனர். அதனைவிட வியாபாரிகள் மரக்கறிகளைக் கொள்வனவு செய்து மூடைகளாக சந்தை உட்புறத்தில் பாதுகாப்பாக வைக்க முடியாத நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

அதனால் கண்காணிப்புக் கமராக்களைப் பொருத்துமாறு சந்தை வியாபாரிகள் பிரதேச சபையினரிடம் கோரிக்கை விடுத்திருந்தனர். அதற்கமைவாக பிரதேச சபை நடவடிக்கை எடுத்துள்ளது. (17)

## குளங்களுக்குள் மீன்குஞ்சுகள்

முல்லைத்தீவு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 28 குளங்களுக்குள் தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையால் மீன் குஞ்சுகள் விடப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்ட நீரியல்வள விரிவாக்கல் உத்தியோகத்தர் குமாரசிங்கம் சங்கீதனின் கண்காணிப்பில் கடந்த வெள்ளிக்கிழமை இந்த மீன் குஞ்சுகள் விடப்பட்டன.

துணுக்காய் பிரதேசத்தில் ஆலங்குளத்தில் 15 ஆயிரம் மீன்குஞ்சுகளும், கரம்பைக்குளத்தில் 16 ஆயிரம் மீன்குஞ்சுகளும், முருங்கன்குளத்தில் 15 ஆயிரம் மீன்குஞ்சுகளும், அனிச்சங்குளத்தில் 10 ஆயிரம் மீன்குஞ்சுகளும் இவ்வாறு விடப்பட்டன.

நன்னீர் மீன்பிடியை ஊக்குவிக்கும் வகையிலும், மீனவர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடனும் இவ்வாறு மீன்குஞ்சு கள் விடப்பட்டு வருகின்றன. இவ்வாறு விடப்பட்டுள்ள மீன்குஞ்சுகள் மூலம் ஜூலை மாதமளவில் 10 மெற்றிக்தொன் அறுவடையை மேற்கொள்ளலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ-6)

## காணிகளை விடுவிக்கக்கோரி மக்கள் பிரதிநிதிகளிடம் மனு

முல்லைத்தீவு,பெப்.10



கேப்பாபிலவு நிலமீட்புப் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள், படையினர் வசமுள்ள தங்களது காணிகளை விடுவிக்குமாறு கோரி, நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவர் ச.கனகரத்தினம் ஆகியோரிடம் மனுக்களைக் கையளித்தனர்.

கேப்பாபிலவு கொட்டடி விநாயகர் ஆலயத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான காதர் மஸ்தான், சாந்தி சிறீஸ்கந்தராசா மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவர் ச.கனகரத்தினம் மற்றும் வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் ஆ.புவனேஸ்வரன், புதுக்குடியிருப்பு பிரதேச சபை உப தவிசாளர் க.ஜனமேஜயந் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது நீண்டகாலமாகத் தங்கள் காணிகளை விடுவிக்கக் கோரிப் போராட்டம் மேற்கொண்டும், இதுவரை காணிகள் விடுவிக்கப்படவில்லை. மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில்தான் காணிகள் படையினரால் அபகரிக்கப்பட்டன என்பதை நினைவுபடுத்திய மக்கள், தங்கள் காணிகளை விடுவிக்க மக்கள் பிரதிநிதிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். அவர்களிடம் மனுக் கையளித்தனர்.

இதற்குப் பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் "காணிகள் விடுவிப்புப் பூரணப்படுத்தப்படவில்லை. காணிகளை விடுவிப்பதற்கான உரிய முயற்சிகளை எடுப்பேன். போருக்கு முன்னர் எவ்வாறு மக்கள் வாழ்ந்தார்களோ அவ்வாறு வாழ வைக்க வேண்டிய பொறுப்பு அரசிடம் இருக்கின்றது. அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்வேன்" என்றார்.

"நீண்டகாலமாக நாங்கள் வாழ்ந்த பூமியை விடுவிக்குமாறு கோரிக்கை விடுத்தும், ஒரு பகுதி காணி த்தான் விடுவிக்கப்பட்டுள்ளது. இன்னுமொரு பகுதி காணி விடுவிப்பதற்கான தொடர் கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. விரைவில் மக்களின் காணிகள் விடுவிக்கப்பட்டு, மக்கள் தங்கள் சொந்த நிலத்தில் பயனடைய வேண்டும்." என்று நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா தெரிவித்தார். (க-19)

## அரியாலை கிழக்கில் கழிவு சேகரிப்பு நிலையம்

யாழ்ப்பாணம்,பெப்.10

திண்மக் கழிவுகள் சேகரிப்பு நிலையத்தை அரியாலை கிழக்குப் பிரதேசத்தில் விரைவில் அமைப்பதற்கான நடவடிக்கைகளை நல்லூர் பிரதேச சபையினர் எடுத்துள்ளனர்.

இதற்கான காணி கொள்வன்வு செய்யப்படும். சபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் அகற்றப்படும் திண்மக் கழிவுகள் யாவும் இந்தச் சேகரிப்பு நிலையத்தில் வைத்துத் தரம் பிரிக்கப்படும்.

அதேவேளை கழிவுகளில் உக்கக்கூடிய கழிவுகளைக் கொண்டு சேதனப் பசளையைத் தயாரிக்கவும் சபையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

தற்போது சபையினால் அகற்றப்படும் திண்மக் கழிவுகள் யாவும் காக்கைதீவில் உள்ள திண்மக் கழிவுகள் சேகரிப்பு நிலையத்தில் கொட்டப்படுகின்றன.

சபைக்கென தனியானதொரு திண்மக்கழிவுகள் சேகரிப்பு நிலையத்தை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாக அரியாலை கிழக்குக் கடற்கரையை அண்டிய பகுதியில் புதிதாக காணியைக் கொள்வனவு செய்து மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-17)





படங்கள்:ஐ.சிவசாந்தன்

# 286ஆவது புதிர் விழா



யாழ்ப்பாணம்,பெப்.10
நல்லூர்க் கந்தன் ஆலயத்தின் நெற்புதிர் அறுவடை விழா கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இந்தப் புதிர் விழா 286ஆவது ஆண்டாக இந்த ஆண்டு கொண்டாடப்பட்டது.

தைப்பூசத்தினத்துக்கு முதல் நாள் கொண்டாடப்படும் இந்தப் பண்பாட்டு விழாவில், ஆலயத்துக்குச் சொந்தமான மட்டுவிலில் உள்ள வயலில் கோவில் அறங்காவலரும் சிவாச்சாரியாரும் முதலாவது புதிரை அறுவடை செய்தனர்.

அந்தவயலில் அறுவடை செய்யும் நெல்லில் இருந்து அமுது தயாரித்துக் கந்தனுக்குப் படையல் செய்து பூசைகள் நடைபெற்றன. அதனைத் தொடர்ந்து பக்தர்களுக்கும் அமுது வழங்குதல் , பண்பாட்டு விழா வாகக் கொண்டாடப்பட்டது. (க)

# 40 ஆயிரம் தமிழ் பௌத்தர்கள் தற்போது இலங்கையில்!

## வடக்கு முன்னாள் ஆளுநர் சுரேன் ராகவன் தெரிவிப்பு




கொழும்பு, பெப்.10
இலங்கையில் தான் உட்பட 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் பௌத்தர்கள் வாழ்கின்றனர் என்று வடக்கு மாகாண முன்னாள் ஆளுநர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

சிங்கள மொழி இணையத்தளம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
பௌத்தம் தொடர்பாகப் பேசும் போது சிங்களவர்கள் பௌத்த சமயம் அவர்களுடையது என நினைப்பதே பிரதான பிரச்சினையாகும். புத்தர் சிங்களவர் அல்லர் எனக் கூறினால் மாரடைப்பு ஏற்படக் கூடியவர்கள் இருக்கின்றனர். விஜயன் சிங்களவர் அல்லர் எனக் கூறினால், எங்களுடன் சண்டைக்கு வருபவர்களும் இருக்கின்றனர்.
பௌத்தத்தை சிங்க ளவர்களின் சொத்தாக மாற்றிக் கொள்ளாமல், பௌ த்தம் என்பது வடக்கு, தெற்கு கிழக்கு, மேற்கு என அனைவருக்கும் சொந்தமான உலக தர்மம், வாழ்க்கை முறை என மாற்ற சிங்களவர்கள் தலையிடும் நாளில்தான் இதனை விட சிறந்த சமூகத்தை கட்டியெழுப்ப முடியும்.
கடந்த ராஜபக்ஷ அரசு வடக்கில் அபிவிருத்தி களை செய்தாலும் அரசியல் நெருக்கடியை தீர்க்க காட்டிய அசமந்தப் போக்கு பாரதூரமான குறைபாடு. வடக்கு மக்கள் ராஜபக்ஷ ஆட்சி நிராகரிப்பதற்கு தெளிவான காரணம் இருக்கின்றது. ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் வடக்கில் வீதிகள் அமைக்கப்பட்டன. இலங்கையில் ஏனைய இடங்களைவிட அபிவிருத்திகள் நடந்தன. ஆனால் முன்னர் இருந்த புண்ணுக்கு தீர்வு கிடைக்கவில்லை. தமிழ் மக்களின் அரசியல் சிந்தனையில் இருக்கும் காயம் அப்படியே இருக்கின்றது.
உண்மையில் அபிவிருத்தியை செய்யும் அதேவேளையில் அரசியல் தீர்வை வழங்கியிருக்க வேண்டும். எனினும் அது நடக்கவில்லை. இது மிகவும் பாரதூரமான தவறுதல் என்றே நான் காண்கின்றேன். எவ்வாறாயினும் மைத்திரிபால சிறிசேன வடக்குக்கு சிறப்பான சேவைகளை செய்தார்- என்றார். (எ)

# சேவை நிலைய கடிதங்கள் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப்.10
அண்மையில் புதிதாக நியமனம் பெற்ற இலங்கை அதிபர் சேவையின் தரம் 3 அதிபர்களுக்கான நிலையக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு, இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.
வடக்கு மாகாண தமிழ் மற்றும் சிங்கள மொழி மூலப் பாடசாலைகளில் காணப்படும் அதிபர் வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதற்காக கடந்த வருடம் நடைபெற்ற போட்டிப் பரீட்சையின் மூலம், இலங்கை அதிபர் சேவை தரம் 3 அதிபர்களாகப் பலர் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களுக்கான நேர்முகத் தேர்வு இடம்பெற்று அண்மையில், நியமனக் கடிதங்களும் வழங்கப்பட்டன. எனினும் அவர்களுக்கானசேவைநிலையங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.
இவ்வாறு நியமனம் வழங்கப்பட்ட அதிபர்களுக்கான சேவை நிலையக் கடிதம் வழங்கும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் ஆளுநரின் பங்குபற்றலுடன் இடம்பெறவுள்ளது.
காலை 8.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கு தமது அடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடிய ஆவணத்துடன் (தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு) வருகை தருமாறு குறித்த அதிபர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.
எனவே அழைக்கப்பட்ட அதிபர்கள் (பெண்கள் இள வர்ண சாறியுடனும் ஆண்கள் கறுப்பு வர்ண நீள் காற்சட்டை மற்றும் வெள்ளை நிற சட்டையும் (சேட்) அணிவதுடன் கழுத்துப் பட்டி அணிதல் வேண்டும்.) குறித்த நேரத்துள் தவறாது யாழ்.இந்து மகளிர் கல்லூரிக்கு சமுகமளித்து தங்களுக்குரிய கடிதங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு வடமாகாண கல்வி அமைச்சின் செயலர் அறிவித்துள்ளார். (ந)




# இரத்த தானமும் மரக்கன்று நடுகையும்

வவுனியா,பெப்.10
நாட்டின் சுதந்திர தினத்தை முன்னிட்டு, யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக முஸ்லிம் அமைப்பின் ஏற்பாட்டில், முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் இரத்ததானம் வழங்கல் மற்றும் மரக்கன்றுகள் நடுகை செய்யும் நிகழ்வுகள் நடைபெற்றன.
நிகழ்வுக்கு அணிவகுப்பு மரியாதையுடன் விருந்தினர்கள் வரவேற்கப்பட்டனர்.
தேசிய கீதம் இசைக்கப்பட்டு, தேசியக் கொடியேற்றப்பட்ட பின்னர், மாணவர்களால் இரத்ததானம் வழங்கப்பட்டது.
முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டன.
இரத்ததானம் வழங்கியோருக்கு நினைவுப்பரிசும் வழங்கப்பட்டது.
முஸ்லிம் மகா வித்தியாலய அதிபர், பல்கலைக்கழக முஸ்லிம் அமைப்பினர் மற்றும் மதகுருமார், நகரசபை உறுப்பினர்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர். (க-402)

# இந்திராபுரம் மக்களுக்கு பல்வேறு உதவிகள்

பளை,பெப்.10
ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டப் பிரிவினரால், பளை இந்திராபுரம் கிராமத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.
வேம்பொடுகேணி கிராம செயலர் பிரிவில் மீளக் குடியமர்வு தொடர்பாக பளை பிரதேச செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலில் இந்தத் தகவல் தெரி விக்கப்பட்டது.
இந்தத் திட்டத்தின் அடிப்படையில் மீளக்குடியமர்ந்துள்ள 75 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள், பொது நோக்கு மண்டபம் மற்றும் பயிற்சி நிலைய உட்கட்டுமானம், 3 கிலோமீற்றர் நீளமான உள்ளக வீதிகள், 10 குடும்பங்களுக்கு கிணறுகள் அமைப்பு உள்ளிட்டவற்றுக்கான நிதி உதவிகள் வழங்கப்படவுள்ளன. அத்துடன் வேலையற்றோருக்கு வாழ்வாதாரப்பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.
அதேவேளை ரகமா (Rahama) நிறுவனத்தினர் 20 தற்காலிக வதிவிடங்கள், 20 மலசலகூடங்கள், பொதுக்கிணறு உட்பட 10 கிணறுகளை அமைத்து வழங்க முன்வந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (க-9)

# சிறப்புத் தேவையுடையோரை ஒதுக்குவதைத் தவிருங்கள்!

## ‘தேனீ’ சிறப்புத் தேவையுடையோர் அமைப்பு வேண்டுகோள்

**மன்னார், பெப். 10**

**மன்னாரில் சிறப்புத் தேவையுடையவர்களாக இருக்கும் தாங்கள் புறமொதுக்கப்படுகின்றோம். ஓர் அலுவலுக்காக அரச அல்லது தனியார் நிறுவனங்களுக்கு அல்லது திணைக்களங்களுக்குச் சென்றால் திரும்பிக்கூடப் பார்க்கிறார்களில்லையே” என்று சிறப்புத் தேவையுடையவர்கள் கவலை தெரிவித்தனர். “தங்களை வஞ்சிக்காமல் தமக்கு உதவி செய்ய அதிகாரிகள் தங்கள் அலுவலர்களுக்குப் பணிக்கவேண்டும். புரியவைத்தல் வேண்டும்” என்றும் அவர்கள் கோரினர்.**



மன்னாரிலுள்ள ‘தேனீ’ மாற்றுத் திறனாளிகள் அமைப்பினர் இந்தத் தகவலை கவலையுடன் தெரிவித்தனர். மன்னார் மாவட்டச் செயலக மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளின் ஒன்றுகூடலில் அவர்கள் இந்த விட யத்தைக் கூறிக் கவலை தெரிவித்தனர். அறிவுறுத்தக் கோரினர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

**ஏளனமாக பார்க்காதீர்கள்**

எமக்கு அவையவங்கள் பாதிக்கப்படாமல் இருந்திருந்தால் நாங்கள் யாரையும் எதிர்பார்த்திருக்கப்போவதில்லை. ஆனால் இன்று நாங்கள் இன்னுமொருவரின் சரீர மற்றும் பொருள் உதவிகளை நம்பியே வாழ வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். எங்களுடைய சமூகத்தில் உள்ளவர்களை நம்பி வாழ வேண்டியவர்களாக நாங்கள் இருக்கின்றோம். அப்படி நாங்கள் நம்பிக்கை வைக்கும் சிலர் மாற்றுத் திறனாளிகளை ஏளனமாகப் பார்க்கின்றனர். இதுகவலையளிக்கின்றது.

**எங்களுக்கு இரட்டிப்புத் தேவை**

சாதாரண மனிதர்களைவிட எமக்கு இரண்டு மடங்கு தேவைகள் உள்ளன.நாங்கள் அனைத்தையும்கேட்கவில்லை எங்களை மனிதராக மதியுங்கள் என்றுதான் கேட்கின்றோம். மாற்றுத்திறனாளிகளுக்கான நிகழ்வுகளில் எங்களுக்கு உதவிசெய்ய வேண்டும் என்று மேடைகளில் மட்டும் புகழப்படும் வார்த்தைகள் எதுவும் அதன்பின் கடைப்பிடிக்கப்படுவதில்லை.

வங்கிகள், அலுவலகங்களுக்குச் சென்றால் எமக்கு விட்டுக் கொடுப்புக்களை, உதவிகளைச் செய்ய எவரும் முன்வருவதில்லை.

சுயதொழில் மூலம் எமது பொருள்களைக் கடைத் தெருக்களுக்குக் கொண்டு செல்வதற்கு முச்சக்கர வண்டிச்சாரதிகள் முன்வருவதில்லை. அவசரத் தேவைகளுக்குத் தொடர்பு எடுத்தால்கூட தொலைபேசியைத் துண்டித்து விடுகிறார்கள்.

**பேருந்துகள்**

தனியார் பேருந்துகள் சிறப்புத் தேவையுடைய எங்களைக் கண்டவுடன் நிற்காமல் வேகமாகச் சென்று விடுகின்றன.

வீதிகளில் மீன்பிடிக்கும் வலைகளைக் காயப்போட்டுவிட்டுச் சென்று விடுகிறார்கள். நாங்கள் சக்கர நாற்காலியில் செல்லும்போது அவற்றுக்குள் சிக்குப்பட்டு எமது பிரயாணம் பாதிக்கப்படுகின்றது.

**அலுவலகங்கள்**

முக்கியமாக அரச அலுவலகங்களில் மாற்றுத்திறனாளிகள் சக்கர நாற்காலிகளில் செல்வதற்குப் படிக்கட்டுகள்(அணுகும்வசதி) இல்லை. இதனால் ஏனையவர்களின் உதவியை நாடி அவர்களையும் சிரமப்படுத்த வேண்டியுள்ளது.

அரச, அரசசார்பற்ற நிறுனங்களின் கட்டடங்களில் மாற்றுத்திறனாளிகள் செல்லும் இலகு வசதி முறை உருவாக்கப்பட்டிருக்க வேண்டும் என்று 2010ஆம் ஆண்டு நாடாளுமன்றில் சட்டமாக முன்மொழியப்பட்டுள்ளது என்று அவர்கள் தெரிவித்தனர்.

இவ்வாறு வசதிகள் இல்லாத நிலையில் பொருள்கள் வாங்குவதற்கு சக்கர நாற்காலியில் நின்றபொழுது சிலர் யாசகம் கேட்பதாக நினைத்து பணம் கொடுத்துவிட்ட சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன என்றும் சிறப்புத் தேவையுடையவர்கள் கவலையுடன் தெரிவித்தனர்.

**அலுவலர்களே!**

அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள், திணைக்களங்களின் உயர் அதிகாரிகள் மாற்றுத்திறனாளிகள் விடயத்தில் கரிசனைகொண்டு அவர்களுக்கான தேவைகளை முன்னுரிமை அடிப்படையில் செய்துகொடுப்பதற்கு அதிகாரிகள் ஒவ்வொருவரும் தங்கள் நிறுவன அல்லது திணைக்கள அலுவலர்களுக்குப் பணிப்புரை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். (த-213)



## மயிலிட்டியில் சிறப்புற்ற கலை, விளையாட்டுக்கள்

மயிலிட்டி, பெப்.10

தமிழர் திருநாள் தைப்பொங்கலை சிறப்பிக்கும் வகையில் மயிலிட்டி திருப்பூர் இளைஞர் நற்பணி ஒன்றியத்தினரின் ஒன்றுகூடல் மற்றும் கலை, விளையாட்டு நிகழ்வுகள் மயிலிட்டி திருப்பூர் கடற்கரை சூழலில் கடந்த 30ஆம் திகதி சிறப்பாக நடைபெற்றன.

மயிலிட்டி திருப்பூரைச் சேர்ந்த முயற்சியாண்மையாளர்களின் அனுசரணையுடன் நடைபெற்ற இந்த நிகழ்வில் இளையோர் மற்றும் பெரியோர் கலந்து சிறப்பித்தனர்.

ஒன்றியச் செயலாளரும் அபிவிருத்தி அலுவலருமான தி.மோகன் வரவேற்புரை நிகழ்த்தினார். ஒன்றியத்தின் பொருளாளரும் சாவகச்சேரி இந்துக்கல்லூரி ஆசிரியருமான ச.வசந்தராஜ் தலைமையுரை நிகழ்த்தினார்.

பின்னர் கலை கலாசார நிகழ்வுகள், விவாதமேடை மற்றும் சிறுவர், பெரியவர்களுக்கான விளையாட்டுக்கள் நடைபெற்றன. வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன.

மயிலிட்டி பகுதி மக்கள், போரால்1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் இடம்பெயர்ந்திருந்தனர். 28 ஆண்டுகளின் பின்னர் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே அந்தப் பகுதி மக்களிடம் விடுவிக்கப்பட்டிருந்தது. சுமார் 30 வருடங்கள் மீள்குடியமர்வின் பின்னர் திருப்பூர் கடற்கரையில் ஊர்மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து கொண்டாடிய பெரும் நிகழ்வாக இது நடைபெற்றது என்று தெரிவிக்கப்பட்டது. (த-159)



## விழிப்புணர்வுக் கருத்தரங்கும் பயிற்சிப் பட்டறையும்

நாவற்குழி,பெப்.10

நாவற்குழி மகாவித்தியாலய மாணவர்களுக்கு விழிப்புணர்வுக் கருத்தரங்கும்,சித்திரப் பாட பயிற்சிப் பட்டறையும் பாடசாலையில் அண்மையில் நடைபெற்றன.

சாவகச்சேரி பிரதேச செயலகமும் தென்மராட்சி கலாசார அதிகாரசபையும் இணைந்து இந்த நிகழ்வை நடத்தின.

“மது மற்றும் போதை ஒழிப்பு”,”நஞ்சற்ற உணவும் போசாக்கும்”,‘சிறுவர் துஷ்பிரயோகம்” ,“ஜீவகாருண்யமாக வாழுதல்”,“பொலித்தீன் பாவனையிலிருந்து மீளுவோம்”, எனும் ஐந்து விடயங்களில் கருத்தரங்கு நடைபெற்றது.

சாவகச்சேரி பிரதேச செயலக உதவிப்பிரதேச செயலர் திருமதி.வினோஜிதா கௌசிகன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நாவற்குழி மகாவித்தியாலய பாடசாலை அதிபர்,கலாசார அதிகாரசபை உறுப்பினர் சு. நிதர்சன், கலாசார உத்தியோகத்தர்கள், பழைய மாணவர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

திறம்பட ஓவியங்களை வரைந்த மாணவர்களுக்கு பரிசில்களும், பங்குபற்றிய அனைத்து மாணவர்களுக்கும் சித்திரப்பாடம் தொடர்பான கருவிகளும் வழங்கப்பட்டன.

நிகழ்வில் கலைஞானி கே .ரீ. குமரநாதன் வளவாளராக கலந்து கொண்டார். (ஐ-159)

## பரிசு,விருது வழங்கல்

பளை, பெப்.10



கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நிதி அனுசரணையுடன், பச்சிலைப்பள்ளிப் பிரதேச கலாசார அதிகார சபை மற்றும் ஊழியர் நலன்புரி சங்கம் இணைந்து நடத்திய பரிசளிப்பு மற்றும் கௌரவிப்பு நிகழ்வு பிரதேச செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் கலாசாரப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்குப் பரிசில்கள், க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் அதியுயர் புள்ளி பெற்று மாவட்டத்தில் முதல் பத்து இடங்களுக்குள் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் மற்றும் ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகள் பெற்ற பிரதேச செயலக அலுவலர்களின் பிள்ளைகள் ஆகியோருக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

பிரதேச செயலர் திருமதி ஜெயராணி பரமோதயன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்டச் செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், சிறப்பு விருந்தினராக மாவட்ட உதவித் திட்டமிடல் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (க-9)

## மெய்வன்மைப் போட்டி

வவுனியா,பெப்.10

வவுனியா மறவன்குளம் பாரதிதாசன் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் 14 ஆம் திகதி கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் நா.இந்திரகுமாரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா வடக்கு பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. தே.உமாதேவன்,சிறப்பு விருந்தினர்களாக ஓமந்தை கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.சசிக்குமார், வவுனியா வடக்கு உடற்கல்வி உதவிப் பணிப்பாளர் கு.செந்தில்குமரன் உட்பட பலர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஐ-222)

# மன்னார் கல்வி வலயத்தில் 21வீத ஆசிரியர் பற்றாக்குறை

## கல்விப் பணிப்பாளர் கூறுகின்றார்

தலைமன்னார், பெப்.10

“மன்னார் கல்வி வலயத்தில் ஆசிரியர் பற்றாக்குறை நீடிக்கின்றது. இவ்வாறு 21 வீத வெற்றிடம் நிலவுகின்றது. ஆசிரிய பற்றாக்குறை மட்டுமன்றி, 7ஆயிரம் தளபாடங்கள் குறைவாக இருக்கின்றன. அவ்வாறிருப்பினும்கூட, ஆசிரியர்கள் நிறைந்துள்ள யாழ்ப்பாண மாவட்டத்தைவிட மன்னார் மாவட்டம் முன்னணியிலேயே இருக்கின்றது” என்று மன்னார் கல்வி வலயப் பணிப்பாளர் கே.ஜெ.பிறட்லி தெரிவித்தார்.



மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினர் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வழமையாக விளையாட்டு என்றால் பிள்ளைகளுக்கு மகிழ்ச்சி. தங்கள் பிள்ளைகளின் விளையாட்டுக்களை கவனிப்பதில் பெற்றோருக்கு மகிழ்ச்சி.

இவ்வாறு பல்வேறு தரப்பினருக்கும் பல்வேறான மகிழ்ச்சி. இந்த மகிழ்ச்சி மனித வரலாற்றில் நீண்ட காலத்தேடல். மன்னார் மாவட்டத்தில் ஒரு லட்சத்து 65ஆயிரம் மக்கள் வாழ்கின்றனர்.

வங்கிச் சேவைகள் வர்த்தக நிலையங்கள் விரிவடைகின்றன. இங்குள்ள மக்களின் மகிழ்ச்சிக்காக பலதரப்பட்டவர்கள் தங்கள் கடமைகளை மேம்படுத்தி வருகின்றனர். 1981க்கும் 2012 க்குமிடையே புள்ளி விவரத்தின்படி 15 வீதத்திலிருந்து 20 வீதமாக வீட்டு வசதிகள் உருவாகியுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

மேல் மாகாணத்தில் மொத்த தேசிய உற்பத்தியில் 36 வீதம் வழங்க மன்னார் மாவட்டம் 3 வீதமான பங்களிப்பையே வழங்குகின்றது.

எனவே நாம் முன்னோக்கி வளர்ச்சி அடைய வேண்டிய தேவையுள்ளது. ஆனால் கல்வி பொது தராதர சாதாரணம், உயர்தரத்தில் மன்னார் மாவட்டம் நாங்கள் வளர்ச்சிப் பாதையில் தொடர்ந்து நகர வேண்டுமானால் எல்லாம் எங்கள் கைகளில்தான் உள்ளது.

நெல்சன் மண்டேலா “கல்விதான் மாற்றத்தை ஏற்படுத்தும் சக்தியாக இருக்கிறது” என்கின்றார். இது சமூகத்துக்கு மாத்திரமல்ல உங்கள் தனிப்பட்ட வாழ்க்கைக்கும் பெரும் உதவியாக இருக்கும். மாணவர்கள் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் - என்றார். (த-60)

# எழுதாரகையை சேவையில் ஈடுபடுத்துவதற்கு முயற்சி

யாழ்ப்பாணம், பெப். 10

எழுதாரகைப் படகை வீதி அபிவிருத்தி அதிகார சபை பொறுப்பேற்கும் முயற்சிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன என்று வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் தெரிவித்தனர். யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே இந்தத் தகவல் வெளியிடப்பட்டது.

காரைநகர் - ஊர்காவற்றுறை இடையே இடம்பெறும் பாதை சேவையை அதிகரித்துத் தரவேண்டும். தற்போது நாள் ஒன்றுக்கு 12 தடவைகள் நடைபெறுகின்றது. அவை பொருத்தமான நேரத்தில்தான் இடம்பெறுகின்றது. அதை இரண்டு அல்லது மூன்று தடவைகள் அதிகரித்து வழங்கினால் உதவியாக இருக்கும் என்று காரைநகர்பிரதேசசெயலர்கோரிக்கை விடுத்திருந்தார். சாத்தியம் இருந்தால் அதனைச் செய்வதற்குத் தயாராக இருப்பதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் பதிலளித்தனர். ‘எழுதாரகைப் படகு நல்ல நிலையில் உள்ளது. அதனை வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிப்பதற்கு மாவட்டச் செயலர் ஊடாக பல தடவைகள் முயற்சிகள் எடுக்கப்பட்ட போதும் சாத்தியப்படவில்லை’ என்று பிரதேச செயலர் தெரிவித்தார்.

அதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையினர், எமது தலைமையகத்தில் அதிகார சபைத் தலைவருக்கும், கடற்படையினருக்கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றது. கடற்படையினரின் உதவியுடன் நெடுந்தாரகைப் படகை இயக்குவது தொடர்பில் பேசப்பட்டது. இருப்பினும் அது சாத்தியப்படவில்லை என்று கூறினார்.

எங்களிடம் பயிற்றப்பட்டவர்கள் 5 பேர் உள்ளனர். இப்போது சேவை இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. அதை இலவசமாகச் செய்யவேண்டும் என்று பிரதேச செயலர் குறிப்பிட்டார். சரியான முறையில் வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டால் அதனை முன்னெடுத்துச் செல்வதில் எங்களுக்குப் பிரச்சினையில்லை. இதனை நாங்கள் பொறுப்பேற்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டுதான் இருக்கின்றோம் என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் குறிப்பி ட்ட னர்.

இதேவேளை, காரைநகர் ஊர்காவற்றுறைக்கு இடையில் 450 மீற்றர் பாலம் அமைப்பதற்கு 2 ஆயிரம் மில்லியன் ரூபா தேவை. கோரிக்கைகளை தலைமை அலுவலகத்துக்கு நாம் முன்வைத்துள்ளோம். இருப்பினும் நிதி ஒதுக்கீடு இன்னமும் கிடைக்கவில்லை என்று வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் தெரிவித்தனர். (ஒ.5)

## மெய்வன்மைப் போட்டி

கரணவாய்,பெப்.10

கரணவாய் மணியகாரன் தோட்ட அ.த.க.பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறும். வித்தியாலய அதிபர் கு.பாஸ்கரன் தலைமையில் நடைபெறும் நிகழ்விழ் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் உ. சுரேஸ்குமார் கலந்து கொள்வர். (க-108)



# மணல் அகழ்வுப் பாதிப்புக்களை அறிக்கையிட மன்று பணிப்பு

மன்னார், பெப். 10

மன்னார் அச்சங்குளம் அருவியாற்றுப் பகுதியில் மணல் அகழ்வதால் கிராமத்தின் இயற்கை வளங்கள் எந்த வகையில் பாதிக்கப்படுகின்றன?, மக்களுக்கு எவ்வாறான பாதிப்புக்கள் ஏற்படுகின்றன என்று காலந்தாழ்த்தாது அறிக்கை சமர்ப்பிக்குமாறும் அவை எந்தெந்தத் திணைக்களங்களுக்கு உரித்தானவை என்ற விவரங்களையும் இணைத்து அனுப்புமாறும் மன்னார் நீதிமன்று நானாட்டான் பிரதேச செயலருக்குக் கட்டளையிட்டுள்ளது.

மன்னார் அச்சங்குளம் புனித சூசையப்பர் மீனவர் சங்கத்தினர் சட்டவிரோத மணல் அகழ்வுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு மன்னார் நீதிமன்றில் கடந்த புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அதன்போதே நீதிவான் மா.கணேசராஜா இவ்வாறு கட்டளை பிறப்பித்தார்.

அச்சங்குளம் கிராமம் தாழ்வான பகுதி. மழைக்காலத்தில் வெள்ளம் தேங்குகின்றது.

கடற்கரைக்கு அருகிலுள்ள கிராமம் என்பதால் கடல்நீர் எளிதில் கிராமங்களுக்குள் புகுந்து விடுகின்றது. அச்சங்குளம் அருவியாற்றுப் பகுதியில் மணல் அகழ்வதற்கு மன்னார் நீதிமன்று ஏற்கனவே தடைவிதித்துள்ளது. எனினும், நீதிமன்ற உத்தரவை மீறி சிலர் இரவுபகலாக மணல் அகழ்வில் ஈடுபட்டுவருகின்றனர். இதனால் கிணற்றுத் தண்ணீர் உப்பாகி விட்டது என்று மீனவ சங்கம் சார்பில் மன்றில் சுட்டிக்காட்டப்பட்டது.

மணல் அகழ்வதால் பெரிய பள்ளங்கள் ஏற்பட்டுள்ளன. அவற்றில் தண்ணீர் தேங்குகின்றது மேய்ச்சலுக்காகச் செல்லும் கால்நடைகள் அவற்றினுள் வீழ்ந்து தத்தளித்து இறந்துவிடுகின்றன. இதனால் பெரும் பொருளாதார இழப்பும் ஏற்படுகின்றது.

மணல் கொண்டு வருவதற்கு இலகுவாக சட்ட விரோதமாக ஆற்றை மறித்து மணல் மூடைகளை அடுக்கி பாதை அமைத்துள்ளார்கள்.

அந்தப் பாதையை அகற்றி ஆற்றை ஆழப்படுத்த வேண்டும், மணல் அகழ்வை முற்றாகத் தடைசெய்ய வேண்டும் என்று மீனவ சங்கத்தினர் மன்றில் கேட்டுக் கொண்டனர். சட்டவிரோத மணல் அகழ்வால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை மீனவர் சங்கத்தினர் ஒளிப்படம் எடுத்து மன்றில் சமர்ப்பித்திருந்தனர்.

அது பற்றிய விசாரணையின் பின்னர், நீதிவான் மேற்கண்டவாறு கட்டளை பிறப்பித்தார். வழக்கு எதிர்வரும் 19ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. அச்சங்குளம் மீனவர் சங்கம் சார்பாக சட்டத்தரணி த.வினோதன் முற்பட்டிருந்தார். (த-213)

## 4,299 பேர் மீளவும் படைகளில்

கொழும்பு, பெப்.10

சட்டத்துக்குப் புறம்பாக சேவையிலிருந்து வெளியேறிய நான்காயிரத்து 299 முப்படையினர் பொதுமன்னிப்பு காலப்பகுதி நிறைவடைவதற்குள் மீண்டும் சேவையில் இணைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சேவைக்குத் திரும்பாமல் உள்ள முப்படையினர், சட்டரீதியாக தமது சேவையிலிருந்து விலகுவதற்கு அல்லது மீண்டும் சேவையில் இணைந்து கொள்வதற்கு கடந்த 5ஆம் திகதி முதல் எதிர்வரும் 12 ஆம் வரை பொதுமன்னிப்பு காலம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த செப்ரெம்பர் மாதம் 30 திகதிக்கு முன்னர் தமது சேவையிலிருந்து சட்டத்துக்குப் புறம்பாக விலகியுள்ள முப்படையினருக்கே இந்த பொதுமன்னிப்பு காலம் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையின் 72 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இந்த பொதுமன்னிப்பு காலம் வழங்கப்பட்டது. (எ)

# இடர்களுக்கு மத்தியிலும் நீடிக்கும் மருத்துவ சேவை

## ஆளணியை நியமிக்கக் கோரிக்கை

சாவகச்சேரி, பெப். 10

**ப**ளை பிரதேச மருத்துவமனையில் பதில் மருத்துவ அதிகாரிகள் இல்லாததால் கடந்த 7 மாதங்களாக விடுமுறை பெறாமல், மருத்துவ அதிகாரிகளும் குடும்பநல சேவையாளரும் கடமையாற்றி வருகின்றனர்.

பளை பிரதேச மருத்துவமனைப் பொறுப்பதிகாரி கடந்த ஓகஸ்ட் மாதம் கைதுசெய்யப்பட்டு இதுவரை விடுவிக்கப்படாதமையாலும் பதில் கடமைக்கு மருத்துவர்கள் இல்லாதமையாலும் பகல் மருத்துவ அதிகாரியும் இரவு பெண் மருத்துவரும் தொடர்ச்சியாக விடுமுறை பெறாது கடமையாற்றி வருகின்றனர். அத்துடன் மருத்துவமனையில் உள்ள பிரசவ விடுதியிலும், பதில் கடமைக்கு ஆள்கள் இல்லாதமையாலும் ஒரேயொரு குடும்பநல அலுவலரே இரவு பகலாகக் கடமையாற்றி வருகின்றார்.

மருத்துமனைக்கு நாளாந்தம் சராசரியாக 150க்கும் மேற்பட்டோர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற வருகின்றனர். காய்ச்சல், பாம்புக்கடி, தாக்குதல் சம்பவங்கள் மற்றும் விபத்துக்களில் காயமடைவோர் எனத் தினமும் பலர் விடுதிகளில் சேர்க்கப்படுகின்றனர்.

வெளிநோயாளர் பிரிவு மாலை 4 மணிவரை நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் சிகிச்சை பெற வருவோரின் எண்ணிக்கை அதிகரிப்பால் மாலை 6 மணிவரை பிரிவு நடத்தப்படுகின்றது.

பளைப் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி வாரத்தில் ஓரிரு நாள்களும் கிளிநொச்சி மருத்துவமனையிலிருந்து மருத்துவ அதிகாரி மாதத்தில் ஒருநாளும் கிளினிக்குகளுக்காக வருகின்றனர்.

மருத்துவமனையில் 9 பணியாளர்கள் பணியாற்றுகின்றனர். வெளிநோயாளர் பிரிவு கிளினிக் விடுதிகள் மற்றும் இடங்களில், கட்டடங்கள் காணப்படுகின்றன. அவற்றைத் துப்புரவாக வைத்திருப்பதில் பணியாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மருத்துவர்களை நியமிப்பதில் சுகாதார அமைச்சு உரிய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

16 கிராம அலுவலர் பிரிவுகளைப் கொண்ட பளைப் பிரதேசத்தில் இயங்கும் பளை மருத்துவமனையில் வடமராட்சி கிழக்கு பகுதி மக்களும் தென்மராட்சி கிழக்குக் பிரதேசத்தின் ஒரு பகுதி மக்களும் சிகிச்சை பெற வருகின்றமையால் இந்த மருத்துவமனையின் அபிவிருத்தி கருதி அங்கு காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து மக்களுக்குச் சேவை வழங்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோருகின்றனர். (து-9)



# கம்பர்மலை அ.த.கவின் மெய்வன்மைப் போட்டி

கரணவாய்,பெப்.10

வடமராட்சி கம்பர்மலை அ.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.

வித்தியாலய அதிபர் எஸ். ரமணசுதன் தலைமையில் நடைபெற்ற போட்டியில் பிரதம விருந்தினராக வடமராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் உ. சுரேஸ்குமார் கலந்துகொண்டார். (ஐ-108)



# மெய்வன்மைப் போட்டி

மருதங்கேணி,பெப்.10

வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் கடற்கரை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் கு. கண்ணதாசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய உடற்கல்வி உதவிப் பணிப்பாளர் ச. செல்வகுமரன் கலந்துகொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக நாகர்கோவில் மேற்கு கிராம அலுவலகர் எஸ். தோமஸ் ஜூட் ,நாகர்கோவில் கிழக்கு கிராம அலுவலகர் அ. விமலேசன், பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் ஆ. சுரேஷ்குமார் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

விளையாட்டுப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன.

இளங்கோ இல்லம்(சிவப்பு), பாரதி இல்லம்(பச்சை), வள்ளுவன் இல்லம்(மஞ்சல்) ஆகியவற்றுக்கு இடையில் நடைபெற்ற போட்டியில் பாரதி இல்லம் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. (ஐ-160)



# கூட்டுத் தலைமை, அமைதிக்கான கலந்துரையாடல்

வவுனியா, பெப். 10

பன்முக கலந்துரையாடல்கள் மூலம் அமைதி மற்றும் கூட்டுத் தலைமைத்துவத்தை உருவாக்குதல் எனும் தொனிப்பொருளிலான செயலமர்வு யாழ்ப்பாண நகர விடுதி ஒன்றில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் மகளிர் பிரிவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தச் செயலமர்வில் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் அரசியல் பிரதிநிதிகள், அரச ஊழியர்கள் மற்றும் பொது அமைப்பினர் கலந்துகொண்டனர். (து-110)



நாட்டின் 72 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு, யாழ்.பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ருவன் வணிகசூரியவின் வழிகாட்டலில், வயாவிளான் மத்திய கல்லூரியில் இராணுவத்தினரால் கடந்த வெள்ளிக்கிழமை சிரமதானம் முன்னெடுக்கப்பட்டது. (க)

# மதிப்பீட்டுத்திணைக்கள அலுவலகம் திறப்பு

வவுனியா,பெப்.10

மதிப்பீட்டுத் திணைக்களத்தின் வன்னி மாவட்டங்களுக்கான அலுவலகம் வவுனியா வைரவ புளியங்குளத்தில் திறக்கப்பட்டுள்ளது.

வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களுக்கான அரச திணைக்களத்தினருக்கும், மக்களுக்கும் மதிப்பீடு தொடர்பான பிரச்சினைகளை இலகுபடுத்துவதற்காக இந்த அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது.


இந்த அலுவலகத்தின் ஊடாக வீடு, காணி, சோலைவரி உள்ளிட்ட மதிப்பீடுகளுக்கான சேவைகளைப் பெறமுடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# தொழில் ஆலோசனைக்கு நடமாடும் பஸ் பயணம்

கொழும்பு,பெப்.10

தொழில் ஆலோசனைகளை வழங்குவதற்காக, அமெரிக்காவின் நிதியுதவியுடன் “தொழில் ஆலோசனை பஸ்” கடந்த வெள்ளிக்கிழமை முத லாவது பயணத்தை தெய்வேந்திரமுனையில் ஆரம்பித்தது. தொழில் வழிகாட்டல் நிபுணர்களை அணுகுவதற்கு மட்டுப்படுத்தப்பட்ட வாய்ப்புக்களைக் கொண்ட கிராமிய இளைஞர்களுக்கு தொழில்முறை,வேலை வாய்ப்பு, ஆலோசனை சேவைகள் இந்த பஸ் ஊடாக வழங்கப்படவுள்ளன. தொழில் பயிற்சி அதிகார சபையினர் மற்றும் தனியார் துறையினர் இந்தத் திட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

தொழில் பற்றிய நேரடி ஆலோசனைக்கான மேசைகளும் பஸ்ஸில் அமைக்கப்பட்டுள்ளன. ஒலி – ஒளி காட்சி கூடாரமொன்றில் தொழில் தெரிவுகள் மற்றும் தொழில்முனைவு பற்றிய தகவல்களும் வழங்கப்படும். தத்தமது தொழில் ஆளுமை விவரத்தின் அச்சுப் பிரதியொன்றை அந்த இடத்திலேயே பெற்றுக் கொள்வதற்கும், இலத்திரனியல் 'ரப்' உபகரணங்களை அணுகக் கூடிய வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கிழக்கு, தெற்கு, வடக்கு, சப்ரகமுவ, ஊவா மற்றும் வடமத்திய மாகா ணங்களின் 30 க்கும் மேற்பட்ட நகரங்கள் மற்றும் கிராமங்களில் இந்த பஸ் நிறுத்தப்படும். எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி பருத்தித்துறையில் பஸ் சேவை நிறைவடையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)





## தமிழ், சிங்கள நூல்களுக்கு விருது

யாழ்ப்பாணம்,பெப்.10

2019 ஆம் ஆண்டுக்கான கொடகே கையெழுத்துப் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட சிங்களம், தமிழ் நூல்களுக்கான பரிசளிப்பு விழா எதிர்வரும் 13 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு, கொழும்பு7 மகாவலி கேந்திர நிலையக் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

விழாவில் பேராசிரியர் சமன் சந்தரணசிங்க சிறப்புரை ஆற்றுவார். சிங்களம், தமிழ் மொழிகளிலான தெரிவு செய்யப்பட்ட நூல்களுக்கு விருதும், சான்றிதழும், பணப்பரிசும் வழங்கப்படும்.

தமிழ் நூல்களில் சிறுகதைத் தொகுப்பாகத் தெரிவு செய்யப்பட்ட, அண்மையில் மறைந்த மக்கள் எழுத்தாளர் மல்லிகை சி. குமாரின் 'வேடத்தனம்' எனும் நூலுக்கும், சிறந்த கவிதைத் தொகுதியாக பதுளையைச் சேர்ந்த 'எஸ்.திலகவதி'யின் 'நான்காம் சுவரில் தொங்கும் படம்' எனும் கவிதை நூலுக்கும் விருதுகள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# பகிடிவதைகளை களையவேண்டும்

### யாழ். போதனாவின் பணிப்பாளர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், பெப். 10

"யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில் இடம்பெற்ற மிக மோசமான பகிடிவதைச் செயற்பாடுகள் வன்மையான கண்டனத்துக்குரியவை. இந்தச் செயற்பாடுகள் மிகுந்த கவலையை ஏற்படுத்தியுள்ளது" என்று கிளிநொச்சி கல்வி வளர்ச்சி அறக்கட்டளையின் தலைவரும் யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைப் பணிப்பாளருமான த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

"நாம் அனைத்துவிதமான வன்முறைகளுக்கும் எதிரானவர்கள். வன்முறைச் செயற்பாடுகள் சமூகத்திலிருந்து முற்றாகக் களையப்படல் வேண்டும். நீண்டகாலப் போர் அதன் காரணமாக ஏற்பட்ட உடல், உள ரீதியான வடுக்கள் என்பனவற்றிலிருந்து இன்னமும் முழுமையாக மீட்சி பெறாத ஒரு சமூகத்துக்குள் பகிடிவதை என்ற போர்வையில் இடம்பெறுகின்ற வக்கிர செயற்பாடுகளை அனுமதிக்க முடியாது.

எதிர்காலச் சமூகத்தில் பொறுப்புக்களை ஏற்கவுள்ள, சமூகத்தை வழிநடத்தவுள்ள இன்றைய படித்த இளம் சமூகத்துக்குள் காணப்படும் இவ்வாறான வன்முறை எண்ணங்கள் தமிழ்ச் சமூகத்துக்கு ஆரோக்கியமானதாக இருக்கமாட்டா.

வலிந்துதவும் தொண்டு நிறுவனமான எமது கல்வி வளர்ச்சி அறக்கட்டளை, பல்கலைக்கழக மாணவர்களின் உயர் கல்விக்காகப் புலம்பெயர் எம் உறவுகளின் உதவியுடன் வருடந்தோறும் பெருமளவு நிதியைச் செலவழித்து வருகின்றது.

விழுமியங்கள் நிறைந்த, பண்பான, ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்கும் எண்ணத்துடன் நாம் இந்தப் பணியை சிரமங்களுக்கு மத்தியில் மேற்கொண்டு வருகின்றோம்.

அந்தவகையில் நாம் இந்தப் பகிடிவதை என்ற போர்வையில் இடம்பெறுகின்ற வன்முறைகளை மிக வன்மையாகக் கண்டிக்கின்றோம். இதற்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகளுக்கு நாம் என்றும் எமது ஆதரவை வழங்குவோம்.

பகிடிவதை என்ற பெயரில் குறிப்பாக மாணவிகள் மீது இடம்பெறுகின்ற உடல், உள ரீதியான வன்முறைகள் உடன் நிறுத்தப்படவேண்டும் என்பதை ஆணித்தரமாக வலியுறுத்துகின்றோம். பல்கலைக்கழக மாணவர்கள் சமூகத்தின் முன்மாதிரிகளாக, சமூகத்தை வழிநடத்துகின்றவர்களாக இருக்க வேண்டும். வன்முறைக் கலாசாரங்கள் எப்போதும் ஆரோக்கியமான எதிர்காலத்துக்கு ஆபத்தானவை.

பல்கலைக் கழகத்தில் பகிடிவதையில் ஈடுபடும் மாணவர்களின் பெற்றோர்களும், அவர்கள் வாழ்கின்ற சமூகங்களும் பொறுப்புக்கூறுபவர்களாகவும் இருக்க வேண்டும்- என்றுள்ளது. (த-22, 214)





## மட்டுவில் அ.த.கவின் செயற்பட்டு மகிழ்வோம்

சாவகச்சேரி,பெப்.10

மட்டுவில் வடக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வுகள் அண்மையில் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றன.

அதிபர் ச.கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர். ஈ.சரவணபவன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் சி.சிவதாசன், மதிப்புறு விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் செ.பிரதாப், மட்டுவில் மோகனதாஸ் சனசமூக நிலையத் தலைவர் சி.இரகுநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். (க -9)

## திட்டங்கள் மாற்றியமை பற்றிய விசேட கூட்டம்

### வலி.கிழக்கு சபையில் விரைவில்

அச்சுவேலி, பெப். 10

வலி.கிழக்குப் பிரதேச செயலக பிரிவில் மக்கள் பங்கேற்புடன் தீர்மானிக்கப்பட்ட நிறைவான கிராமம் (சுப்பிரிகம) வேலைத் திட்டங்களை மாற்றி அமைப்பது தொடர்பில் விவாதிக்க வலி. கிழக்குப் பிரதேச சபையில் சிறப்புக் கூட்டம் நடைபெறவுள்ளது.

"நிறைவான கிராமம் வேலைத் திட்டங்களை மாற்றி அமைத்தமை தொடர்பாக விவாதிப்பதற்கு வலி.கிழக்கு பிரதேசசபை கூட்டம் நடத்தப்பட வேண்டும்" என்று 15 உறுப்பினர்கள் கையொப்பம் வைத்து தவிசாளர் நிரோஷ் தியாகராசாவிடம் மனுக் கையளித்துள்ளனர்.

சிறப்புக் கூட்டம் தொடர்பாக வலி.கிழக்குப் பிரதேச சபை தவிசாளர் நிரோஷ் தகவல் தெரிவிக்கையில்,

"சபை உறுப்பினர் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்களுக்குக் குறையாத தொகையினர் கையொப்பம் வைத்து சிறப்புக் கூட்டத்துக்கு கோரிக்கை விடும்போது கூட்டம் கூட்டப்பட வேண்டும். அந்தவகையில் சிறப்புக் கூட்டம் அடுத்தவாரம் நடைபெறும்." என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜனே நிறைவான கிராமம் வேலைத் திட்டங்களை மாற்றியமைத்தார் என்று பலரும் கூறினர். இறுதியில் அவர் அதனை ஏற்றுக்கொண்டிருந்தார். பாதிக்கப்பட்ட மக்கள் சிலர் முறைப்பாடு செய்தமையால் தான் அவ்வாறு மாற்றினேன் என்று திட்டங்களை மாற்றியமைக்கு அவர் காரணம் கூறியிருந்தார். (த-11)

## கோப்பாய் மருத்துவமனையில் பூந்தோட்டம் திறந்து வைப்பு

கொடிகாமம், பெப். 10

கோப்பாய் அரசினர் மருத்துவமனையில் அழகான மங்கையொருத்தியின் சிலையும், பூந்தோட்டமும் அமைத்துத் திறந்து வைக்கப்பட்டுள்ளது. மருத்துவமனை அத்தியட்சகர் மகேந்திரனின் வேண்டுகோளுக்கிணங்க கோப்பாய் இராச வீதியிலுள்ள நவமங்கை நிர்வாகத்தினர் அதை அமைத்துக்கொடுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

நவமங்கை நிர்வாக நிறுவுநர் சுவர்ணா நவரட்ணம் அதை அண்மையில் திறந்து வைத்தார். கோப்பாய் பிரதேசசபைச் செயலாளர் சுபாசினி மதியழகன், புத்தூர் பிரதேச சபைச் செயலாளர் ஜலீபன், யாழ்ப்பாணம் தேசிய



கல்வியியற் கல்லூரி பீடாதிபதி பரமானந்தம், நிர்வாகச் செயலாளர் முரளிதரன் உள்ளிட்ட பலரும் குறித்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர். (த-159)

# முன்மாதிரி அரசியல் கலாசாரம் அவசியம்

## கரு ஜயசூரிய தெரிவிப்பு



கொழும்பு, பெப்.10
பொதுத் தேர்தலுக்குப் பின்னர் முன்மாதியான அரசியல் கலாசாரமொன்றை உருவாக்க அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும் என்று சபாநாயகர் கருஜயசூரிய தெரிவித்துள்ளார்.

கண்டியில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது
இலங்கையில் புதிய அரசியல் கலாசாரமொன்றை ஏற்படுத்த நான் பெரும் பங்காற்றியுள்ளேன். அதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

அடுத்த நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர், அனைத்து அரசியல் வாதிகளும் ஒன்றிணைந்து நாட்டுக்காக சேவையாற்ற வேண்டும் என்பதுதான் எனது நோக்கமாகும். நாடொன்று முன்னேற்றமடைய வேண்டுமெனில் இன, மத, அரசியல் ஐக்கியம் முக்கியமாகும்.

சுதந்திரத்துக்கு முன்னரான காலத்தில் நாம் வாழவில்லை. இப்போது, மிகவும் மகிழ்ச்சியாகவும் ஐக்கியமாகவும் வாழலாம்.

இந்த நிலைமையை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். அதற்காக ஊடகங்களின் பங்களிப்பும் தேவைப்படுகிறது.

எனது அடுத்தக்கட்ட அரசியல் நகவு குறித்து நான் இன்னும் யோசிக்கவில்லை. மக்களின் தேவைக்கு இணங்க நான் செயற்படத் தயாராகவே இருக்கிறேன். என்னால் ஏதேனும் ஒரு சேவை வேண்டுமெனில், அதனை நிறைவேற்ற நான் தயாராகவே இருக்கிறேன். மக்களும் நாடாளுமன்றத் தேர்தலுக்கு தகுதிவாய்ந்தவர்களை அனுப்ப வேண்டும். மதிப்புக்குரிய நாடாளுமன்ற உறுப்பினர் என்ற சொல்லுக்கு தகுந்த நபர்களைத் தான் மக்கள் தெரிவு செய்ய வேண்டும்.

அதேபோல், ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளில் நான் தலையிட்டது கிடையாது. இருப்பினும், இவை அனைத்தும் விரைவில் தீர்க்கப்பட வேண்டும் என்பது தான் எனது நோக்கமாக இருக்கிறது.

நான் சபாநாயகராக நாட்டுக்கும் நாடாளுமன்றுக்கும் சேவையாற்றியுள்ளேன். எனது கடமைகளை சரியாக நிறைவேற்றியுள்ளேன் என்றே கருதுகிறேன்-என்றார். (எ)

# சு.கவுக்கு டிலான் எச்சரிக்கை

கொழும்பு, பெப்.10
ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் ஒழுக்காற்று நடவடிக்கை, கட்சிக்குள் முரண்பாட்டைத் தோற்றுவிக்கும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா எச்சரித்துள்ளார். ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் கூடிய ஒழுக்காற்று குழுவில் முன்னிலையான பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது
ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியில் எனக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஆனால் ஐக்கிய தேசிய கட்சியுடன் தொடர்பு வைத்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை முன்னெடுக்கப்படாமை முரண்பாட்டை தோற்றுவிக்கும். என்றார். (எ)

# அடிக்கல் நடும் நிகழ்வு



யாழ்ப்பாணம், பெப்.10
புன்னாலைக் கட்டுவன் உப தபாலகத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு, துர்க்கா சனசமூக நிலையத்துக்கு அருகில் தபால் அலுவலத்துக்கு என ஒதுக்கப்பட்டுள்ள காணியில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண அஞ்சல் மாஅதிபர் திருமதி மதுமதி வசந்தகுமார் கலந்து கொண்டு, அடிக்கல்லை நட்டு வைத்தார். இந்த நிகழ்வில் சனசமூக நிலைய உறுப்பினர்கள் மற்றும் குமரன் விளையாட்டுக் கழக உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்தக் கட்டிடம், கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையத்தினதும், குமரன் விளையாட்டுக்கழகத்தினதும் உயர்த்தும் கரங்கள் செயற்றிட்டத்தினூடாக கனடா வாழ் குமரன் விளையாட்டுக் கழக நண்பர்களின் நிதி அனுசரணையில் கட்டப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரு-222)

# அர்ஜூனவை அழைத்துவர துரித நடவடிக்கை எடுங்கள்

## ஐ.தே.க. எம்.பி. பாலித கோரிக்கை



கொழும்பு, பெப்.10
உதயங்க வீரதுங்க, அர்ஜூனமகேந்திரன்போன்ற சந்தேகநபர்களை இலங்கைக்கு அழைத்துவர அரசு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின்நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.
புத்தளத்தில் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது
ஆட்சிக்கு வரும் முன்னர், அனைத்து அரசியல்வாதிகளும் ஊழலை ஒழிப்போம் என்றுதான் கூறுகிறார்கள். ஆனால் ஆட்சிக்கு வந்தவுடன் சட்டத்தை நடைமுறைப்படுத்த எவரும் தீவிரம் காட்டுவதில்லை. வெளிநாட்டில் இருக்கும் உதயங்க வீரதுங்க. இந்நாட்டின் தலைவர்களை சந்தித்து கலந்துரையாடல்களில் ஈடுபடுகிறார்.

ஆனால், அவரை இந்த நாட்டுக்குள் அழைத்துவர எவரும் முயற்சிப்பதில்லை. அர்ஜூன மகேந்திரனும் இங்குள்ளவர்களுடன் நெருங்கியத் தொடர்பில் இருக்கிறார். இவ்வரையும் நாட்டுக்குள் அழைத்துவர முடியாதுள்ளது.

ஜாலிய விக்ரமசூரியவையும் நாட்டுக்குள் அழைத்து வர முடியாத நிலைமையே காணப்படுகிறது. அதிலிருந்த குற்றவாளிகள் எல்லாம் ஆட்சியாளர்களுடன் மிக நெருங்கிய தொடர்பில்தான் இருக்கிறார்கள் என்பது நன்றாகத் தெரிகிறது.

திருடர்களைப் பிடிக்கத்தானா மக்கள் ஆணை வழங்கினார்கள் என்ற சந்தேகம்கூட எழுகிறது. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச இது தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும். சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் எந்தத் தரப்பினராக இருந்தாலும் பாரபட்சம் காட்டாது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்றார் (எ)

# ரஞ்சன் மீது விரைவில் குற்றப் பத்திரிகை


கொழும்பு, பெப்.10
நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க மற்றும் மேல்நீதிமன்ற நீதிபதி கிஹான் பிலப்பிட்டிய ஆகியோருக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதற்கு சட்டமா அதிபர் டப்புள்ள டி லிவேரா தீர்மானித்துள்ளார். இருவருக்குமிடையிலான சர்ச்சைக்குரிய தொலைபேசி உரையாடல்களை அடிப்படையாகக் கொண்டே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

நீதித்துறை மீதான தலையீடு, சதித் திட்டம் உட்பட மேலும் சில விடயங்களின்கீழ் இருவர் மீதும் குற்றப்பத்திரி கைகளை தாக்கல் செய்ய சட்டத்தில் இடமுள்ளது எனசட்டமா அதிபர் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

அத்துடன், நீதிபதி ஒருவரின் பணியில் தலையீடு செய்ததற்காக அரசமைப்பை மீறிய குற்றச்சாட்டின் அடிப்படையிலும் வழக்கு தொடர முடியும் என்றும், இதன்படி இவர்கள் இருவர்மீதும் மேல்நீதிமன்றத்தில் விரைவில் குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (எ-44)

# நாயால் விபத்து

தென்மராட்சி எழுதுமட்டுவாழ் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற, விபத்து ஒன்றில் கனடா நாட்டுப் பிரஜை ஒருவர் காயமடைந்தார். ஏ9 வீதியில் அப்பாச்சி ரக மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது நாய் குறுக்கிட்டமையால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. விபத்தில் காயமடைந்த நபர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். விசுவமடுவில் இடம்பெற்ற மாட்டு வண்டி சவாரியைப் பார்வையிடச் சென்றவேளையிலேயே குறித்த விபத்து இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ரு)




தைப்பூச தினத்தை முன்னிட்டு, முல்லைத்தீவு மாவட்ட மாட்டு வண்டிச் சவாரி சங்கத்தினர் நாடாத்திய, மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி விசுவமடு தொட்டியடி சவாரித்திடலில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. ஐந்து பிரிவுகளில் நடத்தப்பட்ட போட்டியில் வடக்கின் பல பிரதேசங்களில் இருந்து 73 சோடி மாடுகள் பங்குபற்றின. (க)

## மீள்குடியமர அனுமதிக்கப்பட்ட பகுதியில்

# மண் குவியல்களில் வெடிக்காத மிதிவெடி

பளை, பெப்.10

*மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் மண் குவியல்களில் இருந்து வெடிக்காத நிலையில் வெடி பொருள்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன. அவற்றைக் குடியிருப்பாளர்கள் அடையாளம் கண்டு, வெடி பொருள்கள் அகற்றும் பிரிவினருக்குத் தகவல் வழங்கியுள்ளனர்.*



பளை வேம்பொடுகேணி கிராம அலுவலர் பிரிவில் வெடி பொருள்கள் அகற்றப்பட்ட 100 ஏக்கர் காணிகளுக்கான அனுமதி, கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்டச் செயலரிடம், வெடிப் பொருள்கள் அகற்றும் நிறுவனத்தினரால் கையளிக்கப்பட்டது. அங்கு 83 குடும்பங்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டனர்.

விடுவிக்கப்பட்ட காணிகளில் மக்கள் வீடுகள் அமைக்கும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். நேற்று ஞாயிற்றுக்கிழமை பெருமளவானோர் வருகை தந்து காணிகளைத் துப்பரவு செய்யும் பணிகளில் ஈடுபட்டனர். அங்கிருந்த மண்குவியல்கள் வாகனங்கள் மூலம் துப்புரவு செய்யப்பட்டது. அங்கு புதையுண்ட நிலையில் மிதிவெடி காணப்பட்டன. அதனை வெடியொன்று பொருள்கள் அகற்றும் பிரிவினர் அகற்றிச் சென்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. விடுவிக்கப்பட்ட 100 ஏக்கர் பகுதியில் 4 ஆயிரம் மிதிவெடிகள் ஏற்கனவே மீட்கப்பட்டன. சிலவேளைகளில் அகற்றப்பட்டது. தவறவிடப்பட்ட வெடிப் பொருள்கள் காணப்படின் தமக்கு அறிவிக்குமாறு வெடி பொருள்கள் அகற்றும் பிரிவினர் காணிகள் கையளிக்கும் தினத்தன்று தெரிவித்திருந்தனர்.

போர்க் காலத்தில் வேம்பொடுகேணியில் விடுதலைப்புலிகள் அமைப்பினர் தமது கட்டுப்பாட்டிலிருந்த பகுதிகளில் மண்குவியல்களை (பண்ட்) அமைத்து பெருமளவு மிதிவெடி களைப் புதைத்திருந்தனர். அந்த மண்குவியல்களில் இருந்து 4 ஆயிரம் மிதிவெடிகள் ஏற்கனவே மீட்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு-9)

## கரணமடித்த சொகுசு கார்



யாழ்ப்பாணம், பெப். 10

நாவற்குழிச் சந்தியை அண்மித்த பேக்கரியடி பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் சொகுசு கார் கரணமடித்து மின் கம்பத்துடன் மோதி வீழ்ந்து கடுமையாகச் சேதமடைந்தது. குறித்த விபத்து கடந்த வெள்ளிக்கிழமை இரவு சுமார் 7 மணியளவில் இடம்பெற்றது. அதில் நான்கு பேர் பயணித்துள்ளனர். அதில் 'எயார் வாக்' இருந்ததால் அவர்கள் படுகாயங்களின்றி உயிர் தப்பினர். எனினும், 'எயார் வாக்' கூட உடைந்து போயிருந்தன. வேகக் கட்டுப்பாட்டை இழந்து பயணித்ததால்தான் விபத்து இடம்பெற்றது என்று அங்கு நின்றிருந்தவர்கள் தெரிவித்தனர். வேகக்கட்டுப்பாட்டை இழந்து ஹன்ரர் வாகனத்தில் தட்டுப்பட்டே சொகுசு கார் கரணமடித்து வீழ்ந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர். சாவகச்சேரிப் பொலிஸார் சம்பவ இடத்தில் விசாரணை நடத்தினர். (து)


**வீடு வாடகைக்கு**

யாழ்.நல்லூர் அரசடி முதலாம் ஒழுங்கையில் மேல்மாடி வீடு வாடகைக்குண்டு. 2 அல்லது 3 பேர் விரும்பத்தக்கது. தரகர் தேவையில்லை. தேவையானவர்கள் மட்டும் தொடர்புகொள்ளவும்.

(CS/31162)(11,17)

**077 482 4410**


# நாசமாகக்கூடாது என்றே ஒளியூட்டல் மைதானங்கள்

## சிவமோகன் எம்.பி. தெரிவிக்கிறார்



மன்னார், பெப். 10

இளைஞர்கள் தீய பழக்கங்களை நாடிச் சென்றுவிடக் கூடாது என்பதனாலேயே ஒளியூட்டல் மைதானங்களை அமைத்துக் கொடுக்கின்றோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் அண்மையில் தனது ஆதரவாளர்களைச் சந்தித்து சமகால அரசியல் நிலை பற்றிய கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வேலைகளுக்குச் செல்லும் இளைர்கள் மாலை ஆறு மணியின் பின்னர் விடு திரும்பிவிளையாடுவதற்குஆரம்பிக்கமுன்னரே இரவாகி விடுகின்றது.

இதனால் இளைஞர்களின் சிந்தனை புகை, போதைவஸ்து பாவித்தல் போன்ற தீயபழக்கங்களைநாடிசெல்லும்நிலையில் இருப்பதை அவதானித்தேன்.

அதன்பின் எனது சிந்தனையில் தோன்றியதுதான் இரவு நேர ஒளியூட்டல் மைதானம். இந்த போதை வஸ்து பாவனை திட்டமிட்டு தமிழ் இளைஞர்களை உருக்குலைப்பதற்காக மேற்கொள்ளப்பட்டு வருகிறதா என்னும் சந்தேகம் எழுகிறது. ஏனென்றால் எங்கேனும் போதை வஸ்து பாவனையோ அல்லது விற்பனைப் புழக்கமோ நடைபெறுகிறது என்று நாங்கள் பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்தால் அந்தத் தகவல் போதை வஸ்து கடத்தல் காரர்களுக்கு தெரிந்துவிடுகின்றது. அவர்கள் தப்பித்து விடுகிறார்கள்.

இது திட்டமிட்ட செயல். இளைஞர்களின் நல்வாழ்வை உருக்குலைப்பதற்காக பல வழிகளிலும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இந்த விடயங்களில் இளைஞர்களும் பெற்றோர்களும் மிக அவதானமாகச் செயற்பட வேண்டும்–என்றார்.

இந்தச் சந்திப்பில் விளையாட்டுக் கழகங்கள், ஆலய நிர்வாகம், மாதர் சங்கம் போன்றனவற்றின் நிர்வாகிகளும், தையல் பயிற்சி பெறும் பெண்களும், முன்பள்ளி ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். (து-213)


**கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ சட்டத்தின்**

**16(2ஈ) பிரிவின் கீழான அறிவித்தல்**

**பருத்தித்துறை கடற்றொழில் துறைமுக அபிவிருத்தி செய்யும் செயற்றிட்டம்**

**சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை**

1988ஆம் ஆண்டின் 64ஆம் இலக்க மற்றும் 2011ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க ஒழுங்குவிதிகளின் மூலம் திருத்தப்பட்ட 1981ஆம் ஆண்டின் 57ஆம் இலக்க கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ சட்டத்தின் 16(1)ஆம் பிரிவின் நியதிகளுக்கு அமைவாக கொழும்பு 15, றொக் ஹவுஸ் ஒழுங்கை இல. 15, எனும் முகவரியிலுள்ள இலங்கை துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட பருத்தித்துறை துறைமுகம் அபிவிருத்தி செய்யும் செயற்றிட்டத்துக்கு சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை பொதுமக்களின் பரிசீலனைக்காக கீழ் குறிப்பிடப்படும் இடங்களில் நாள் முழுவதும் முற்பகல் 8.30 மணி முதல் பிற்பகல் 4.15 மணிவரை 2020.02.10 ஆந் திகதி முதல் 30 நாள்களுக்கு வைக்கப்பட்டிருக்கும். (வார இறுதி மற்றும் அரச விடுமுறை நாள்களைத் தவிர).

இதற்கு மேலதிகமாக கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையதளமான www.coastal.gov.lk இல் மும்மொழிகளிலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

01. கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம் - புதிய செயலகம், 4வது மாடி, மாளிகாவத்த, கொழும்பு 10.
02. நகர சபை - பருத்தித்துறை
03. மாவட்ட செயலாளர் அலுவலகம் - யாழ்ப்பாணம்
04. பிரதேச செயலாளர் அலுவலகம் - வடமராட்சி வடக்கு
05. கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களம் - மாவட்ட அலுவலகம் யாழ்ப்பாணம்.
06. மத்திய சுற்றாடல் அதிகார சபை - இல. 104, "பரிசர பியச" டென்சில் ' கொப்பேகடுவ மாவத்த, பத்தரமுல்ல.

இந்த உத்தேச கடற்றொழில் துறைமுக அபிவிருத்தி செயற்றிட்டத்தினால் சுற்றாடலுக்கு ஏற்படும் தாக்கம் தொடர்பான அறிக்கை சம்பந்தமாக பொதுமக்களின் கருத்துக்களை 2020.02.10 ஆந் திகதி முதல் 30 நாள்களுக்கு கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கு எழுத்து மூலமாகச் சமர்ப்பிக்குமாறு அறியத்தருகிறேன்.

**பீ.கே. பிரபாத் சந்திரகீர்த்தி**
**பணிப்பாளர் நாயகம்**
**கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம்,**
**4வது மாடி, புதிய செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு 10**
**தொலை பேசி இல. 011-2449 754, 011-2387 922, 011-2449 197**
**தொலை நகல் இல. 011-2438 005, 011-2472 623.**

(C/34219)(11,17)



A member of the IDOL family

**UV Water Solution**
water science technologies
Right solution for water issues

நீர் தொடர்பான சகல பிரச்சினைகளுக்கான தீர்வுகளுக்கு

**T.P: +94775092737**





# பாரம்பரியத்தை எடுத்தியம்பிய மாபெரும் பொங்கல் கலைவிழா

கைதடி, பெப்.10

யாழ்ப்பாணம், கைதடி குமரநகர் சன சமூக நிலையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பொங்கல் விழா நிகழ்வின் இறுதிநாள் நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் கைதடி நாவலன் கலையரங்கத்தில் பாரம்பரிய முறைப்படி சிறப்பாக இடம்பெற்றன.

நிகழ்வை யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் ஆரம்பித்து வைத்தார்.

நாடாளுமன்ற உறுப்பினரின் பாரியார் திருமதி யசோதை சரவணபவன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் செ.பிரதாப் ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் குமரநகர்ப் பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றில் வழிபாடுகள் இடம்பெற்று விருந்தினர்கள் அங்கிருந்து பாரம்பரிய முறைப்படி மாட்டுவண்டிலில் நிகழ்வு ஆரம்பிக்கும் இடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

கூத்து உள்ளிட்ட பாரம்பரிய நிகழ்வுகளுடன், கலை நிகழ்வுகளும் பொங்கல் விழாவில் கோலாகலமாக நடைபெற்றன. (ப)



கொழும்புத்துறை மேற்கு விநாயகர் மற்றும் பழனியாண்டவர் ஆலயங்களின் வருடாந்த மணவாளக்கோலத்திருவிழா கடந்தவெள்ளிக்கிழமை நடைபெற்றது. அன்றைய தினம் பிற்பகல் சுவாமி பூஞ்சப்பறத்தில் வீதி வலம் வந்தார். (க-17)

## அறநெறி பாடசாலைக்கு அடிக்கல்

வவுனியா, பெப்.10

நாகேந்திரம் சுபாதர்சன் ஞாபகார்த்த அறநெறிப் பாடசாலைக்கான அடிக்கல் நடும் நிகழ்வு, வவுனியா ஆதிவிநாயகர் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

ஆலய நிர்வாகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், வவுனியா நகரசபை உறுப்பினர் சு.காண்டீபன், ஆலயத்தலைவர், செயலர், நாகதம்பிரான் அறநெறி பாடசாலையின் பொருளாளர் மற்றும் சுபாதர்சனின் உறவினர்கள் உட்பட பலர் கலந்துகொண்டு கட்டடத்துக்கான அடிக்கல்லை நட்டனர்.

குறித்த ஆலயத்துக்கு அறநெறிப் பாடசாலை ஒன்று தேவை என ஆலயநிர்வாகத்தினரால் நகரசபை உறுப்பினர் சு. காண்டீபனிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக அவரது ஒழுங்கமைப்பில் அமரர் நாகேந்திரம் சுபாதர்சனின் உறவினர்களால் 6 இலட்சம் ரூபா செலவில் குறித்த கட்டடம் அமைக்கப்படவுள்ளமைகுறிப்பிடத்தக்கது. (ரு-110)

# தற்போது ஆளும் அரசுக்கு பெரும்பான்மை கிடைக்காது!

## ஜே.வி.பி. கூறுகின்றது

**கொழும்பு, பெப்.10**

**நாட்டைத் தற்போது ஆளும் தரப்புக்கு எதிர்வரும் பொதுத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஒருபோதும் கிடைக்காது என்று ஜே.வி.பியின் அரசியல் குழு உறுப்பினரான லால்காந்த தெரிவித்துள்ளார்.**



கண்டியில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் 69 இலட்சம் பேரின் எதிர்ப்பார்ப்பு கொஞ்சம் கொஞ்சமாக இல்லாமல் போய்க் கொண்டிருக்கிறது.

தம்பி நல்லவர், அண்ணன் கெட்டவர், பசில் இப்படியானவர் என்ற விமர்சனங்கள்தான் வெளிவந்துக் கொண்டிருக்கின்றன.

அதனால் நாட்டுக்கு எந்தவொரு நன்மையும் கிடையாது. அவர்களால் நாட்டை நிர்வகிக்கவும் முடியாது. நாட்டில் தற்போது நிலவிக் கொண்டிருக்கும் பிரச்சினைகளுக்கு இவர்களால் ஒருபோதும் தீர்வைக் காணவும் முடியாது என்பது தெளிவாகிவிட்டது.

அடுத்து இடம்பெறவுள்ள பொதுத் தேர்தலில், மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக்கூட ஆளும் தரப்பால் பெற்றுக் கொள்ள முடியாது. ஜே.வி.பி.யினர் ஆகிய நாம் தற்போதுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையை விட அதிகமான உறுப்பினர்களை நாடாளுமன்றில் உள்ளீர்க்கவே செயற்பட்டு வருகிறோம் -என்றார். (எ)

# வயல் விழா

முல்லைத்தீவு,பெப்.10

முல்லைத்தீவு மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில், வயல் விழா கொல்லவிளாங்குளத்தில் விவசாயப் போதனாசிரியர் கி.கீர்திகன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கொல்லவிளாங்குள திட்டத்தின் ஊடாக சிறந்த விதை நெல் உற்பத்தி செய்யும் நோக்கில் நெல் நாற்று நடுகைஇயந்திரம் மூலம் நாற்று நடப்பட்ட வயல் நிலத்தின் அறுவடை விழா நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா, சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார்,பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பூ.உகநாதன்,விதை மற்றும் நடுகை பொருட்கள் பிரதிப் பணிப்பாளர், கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்(பாண்டியன்குளம்),புள்ளி விபரவியல் உத்தியோகத்தர்,நீர்ப்பாசன தொழிநுட்ப உத்தியோகத்தர்கள், பாடவிதான உத்தியோகத்தர்கள்,விவசாய போதனாசிரியர்கள்,பாடசாலை மாணவர்கள்,விவசாயிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (க-19)



# அநாதரவாக 1,094 வீடுகள்!

## மன்னார் மாவட்ட மேலதிக செயலர் கவலை

**மன்னார், பெப். 10**

**மன்னார் மற்றும் முசலிப் பிரதேசங்களில் அமைக்கப்பட்டுள்ள நூற்றுக் கணக்கான வீடுகளில் மக்கள் எவருமே குடியமரவில்லை. இந்தத் துர்ப் பாக்கியமான சூழ்நிலை, வேதனையளிக்கின்றது என்று மன்னார் மாவட்ட மேலதிக செயலர் எஸ்.குணபாலன் தெரிவித்தார்.**

மன்னார் முள்ளிக்குளத்தில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முள்ளிக்குளம் மக்கள் நீண்டகால இடப்பெயர்வால் துன்பங்களையும் துயரங்களையும் சந்தித்துள்ளனர். விரைவான அபிவிருத்தியை நோக்கி இந்தப் பகுதி முன்னேற்றப்பட வேண்டும். அதற்கான முயற்சிகளை நாம் எடுத்துள்ளோம்.

இந்தப் பகுதி முழுமையாக விடுவிக்கப்பட்ட பின்னரும் மக்கள் இந்த இடத்துக்கு வந்து குடியமர்வதில் பல குறைபாடுகள் உள்ளன.

இங்கு வழங்கப்படுகின்ற 50 வீட்டுத்திட்டத்திலும் மக்கள் குடிய மர்வார்களா என்பதும் சந்தேகமே. 2020 ஆம் ஆண்டின் வேலைத் திட்டங்களிலேயே பல்வேறுபட்ட அபிவிருத்திகளை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும். எத்தனையோ இடங்களிலே வீடுகளை அமைத்து வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுத்தபோதும் மக்கள் மீள் குடியமராத நிலையில் அதற்கான நடவடிக்கைகள் தோல்வியடைந்துவிடு கின்றன.

முசலிப் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட 594 வீடுகளில் இதுவரை எவருமே குடியமரவில்லை. மன்னார் நகரப் பகுதியில் 500க்கும் மேற்பட்ட வீடுகளில் மக்கள் குடியமராத நிலை காணப்படுகின்றது என்று மேலும் தெரிவித்தார். (த-56)



## விவாதச் சமரில் யாழ்.இந்து வெற்றி

யாழ்ப்பாணம், பெப். 10

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் பாடசாலை மாணவர்களிடையே நடத்திய தமிழறிஞர் கலாநிதி க.சிவராமலிங்கம் பிள்ளை நினைவு விவாதச்சமரில், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி வெற்றிக்கிண்ணத்தைச் சுவீகரித்தது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் இரவு 7.30 மணி வரை போட்டி நடைபெற்றது.

யாழ்ப்பாணத்தின் பிரபல விவாத அணிகளைக் கொண்ட பாடசாலைகளுடன் கிளிநொச்சி, வவுனியா, திருகோணமலை, கொழும்புப் பிரதேசப் பாடசாலைகளும் இணைந்து மொத்தமாக 22 அணிகள் போட்டியில் பங்கேற்றன.

'தம்பர்' மண்டபத்தில் இரவு நடைபெற்ற இறுதிப்போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியை எதிர்கொண்டது. ஏழு நடுவர்கள் மத்தியில் ஐந்துக்கு இரண்டு என்ற கணக்கில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி வெற்றிக்கிண்ணத்தைச் சுவீகரித்தது.

போட்டியின் இரண்டாம் இடத்தை தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும், மூன்றாம் இடத்தை வவுனியா சைவப் பிரகாச மகளிர் கல்லூரி மற்றும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி என்பனவும் பெற்றுக்கொண்டன.

போட்டித் தொடரில் 'கனவான்' தன்மையுடன் நடத்தைகளை வெளிக்காட்டிய அணிக்கான விருதும் வழங்கப்பட்டது. இதனை திருகோணமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரி பெற்றுக்கொண்டது.

மிகச்சிறந்த விவாதத்துக்கான விருதை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி விவாத அணித்தலைவர் கு.மோகிதன் பெற்றுக்கொண்டார்.


மாணவ நடுவர்களுக்கான போட்டியும் நடைபெற்றது. இதில் பதினாறு பேர் பங்கேற்றிருந்தனர். போட்டிகள் முடிவடைந்த பின்னர் நடுவர்கள் முன்னால் வெற்றி பெறும் அணி எது என்பதைத் தமது நியாயப்படுத்தல்களுடன் இவர்கள் வெளிப்படுத்தினர். இதன் அடிப்படையில் யாழ்ப்பாண இந்துக்கல்லூரி மாணவன் ச.அபினாத் முதற்பரிசைப் பெற்றார். நாற்பதுக்கும் மேற்பட்டோர் நடுவர்களாகச் செயற்பட்ட இந்த நிகழ்வில் நடுவர்களாகப் பங்கேற்றோருக்கு நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டன. கடந்த ஆண்டு நடத்தப்பட்ட இதே போன்ற போட்டியின்போதும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணியே வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (த)

## பிரதேச செயலர்களுக்கும் விரைவில் இடமாற்றம்

யாழ்ம்பாணம்,பெப்.10

வடக்கில் இடம்பெற்று வரும் நிர்வாக அதிகாரிகள் இடமாற்ற வரிசையின் அடுத்த கட்டமாக சில பிரதேச செயலர்களுக்கு நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் இடமாற்றம் வழங்கப்படவுள்ளது.

அதன் அடிப்படையில் உடுவில் பிரதேச செயலர் எஸ். ஜெயகாந்தன் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கும், கரைச்சிப் பிரதேச செயலர் த.முகுந்தன் உடுவில் பிரதேச செயலகத்துக்கும், மடுப் பிரதேச செயலாளர் பி.ஜெயக்ரன் கரைச்சிப் பிரதேச செயலகத்துக்கும், புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் இ. பிரதாபன் நெடுங்கேணி பிரதேச செயலகத்துக்கும் இடமாற்றப்படவுள்ளனர். அத்துடன் வடக்கின் மேலும் பல பிரதேச செயலர்கள் இட மாற்றப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-105)



## காடுகளை அழிப்பதால் பெரும் பிரச்சினைகள்

### கடற்றொழில் அமைச்சின் செயலாளர் தெரிவிக்கிறார்

காடுகளின் அடர்த்தி துரிதமாக வீழ்ச்சியடைந்து வருவதால் பெரும் இடர்களை எதிர்கொள்ளவேண்டியுள்ளது. இது நாம் எதிர்கொள்ளும் பெரும் பிரச்சினை என்று கடற்றொழில் அமைச்சின் செயலாளர் திருமதி இந்து இரத்நாயக்க தெரிவித்தார்.

இதனால் வறட்சி, வெள்ளம், மண்சரிவு உள்ளிட்ட சுற்றாடல் இடர்களை அண்மைக்காலங்களில் சந்திக்க நேர்ந்துள்ளது. அதற்குப் புறம்பாக பயிர்ச்செய்கைக்காக காடுகளை அழித்தல், நகர மயமாக்கல், குடியிருப்புத் திட்டங்கள், அபிவிருத்தித் திட்டங்கள், முறையற்ற காணிப் பராமரிப்பு, காடுகளுக்குத் தீ வைத்தல், மரக் கடத்தல் மற்றும் அதனுடன் இணைந்த வர்த்தகம் உள்ளிட்ட காரணங்களால் நாட்டின் வனவளம் துரிதமாக வீழ்ச்சியடைந்து வருகின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதி கோத்தாபயவின் 'சுபீட்சத்தின் நோக்கு' எனும் எண்ணக்கோட்பாட்டின் பிரகாரம் அமைச்சின் வளாகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மர நடுகை நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்துவெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார் - என்று அமைச்சின் செய்திக் குறிப்பிடப்பட்டுள்ளது. (த)

## வாழ்வாதாரம் வழங்கிவைப்பு

புதுக்குடியிருப்பு, பெப்.10


முல்லைத்தீவு புதுக்குடியிருப்புப் பிரதேசத்துக்கு உட்பட்ட, திம்பிலி கிராமத்தில் வசித்துவரும் குடும்பம் ஒன்றுக்கு வாழ்வாதார உதவிகள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன.

7அங்கத்தவர்களைக் கொண்ட வறுமை கோட்டின் கீழ் வாழும் குறித்த குடும்பத்தின் அடிப்படைத் தேவையைக் கருத்தில் கொண்டு இவ் உதவிகள் வழங்கப்பட்டன.


பிரான்ஸ் நாட்டில் வசித்துவரும் உமாபதிசிவம் பரராஜசேகரத்தின் நிதி உதவியில் முன்னாள் கிராம சேவையாளரும் அகில இலங்கை சமாதான நீதிவானுமாகிய வே.பரமலிங்கத்தின் ஏற்பாட்டில் ரூ.75 ஆயிரம் பெறுமதியான மலசலகூடமும், ரூ.26 ஆயிரம் பெறுமதியான ஆடுகள் இரண்டும் வழங்கிவைக்கப்பட்டுள்ளன. (ரு-19)



# திருக்கணித சனிப்பெயர்ச்சி பலன்கள்



## துலாம்



துலாம் ராசிக்காரர்களுக்கு மூன்றாம் இடத்திலிருந்து இதுவரை ஓரளவு நற்பலன்களைக் கொடுத்துக் கொண்டிருந்த சனிபகவான், இப்போது 4ஆம் இடத்துக்குச் செல்கிறார். 4 ஆம் இடம் என்பது அர்த்தாஷ்டம சனி என்று சொல்லக்கூடிய அமைப்பில் வரும். பொதுவாக, மூன்றாம் இடத்துக்கு சனி பகவான் வரும்போது நல்ல பலன்கள் நிகழ வேண்டும். ஆனால், துலாம் ராசிக்காரர்களுக்கு கடந்த 3 ஆண்டுகளாகப் பெரிய அளவில் நன்மைகள் கிடைக்கவில்லை.

இப்போது அவர் இருக்கக்கூடிய 4ஆம் இடம் துலாம் ராசிக்காரர்களுக்கு நல்ல பலன்களைத் தரக்கூடியதாக அமையும். அதற்குக் காரணம் துலாம் ராசிக்காரர்களுக்கு சகல யோகங்களையும் வழங்கக்கூடிய ராஜ யோகாதிபதியாக சனி பகவான் இருக்கிறார். அவர் தனது சொந்த வீடான மகர ராசிக்குப் பிரவேசிப்பது, துலாம் ராசிக்காரர்களுக்கு மிகவும் அனுகூலமான பலன்களைத் தரும். ராஜயோகமான கிரகம் 4ஆம் இடத்துக்கு வரும்போது உபயோகமான பலன்களே கிடைக்கும் என்பது ஜோதிட விதி.

அடுத்த ஒரு வருடத்தில் குருவுடன் சேர்ந்து சுபத்துவ சூட்சும பார்வை பெறுவதால், இவர்களுக்கு வீடு, வாகனம், ஆகிய விஷயங்களில் நல்ல லாபகரமான நன்மைகள் கிடைக்கும். இதுவரை சொந்தவீடு அமையாமல் இருந்தவர்களுக்குச் சொந்த வீடு அமையும். புதிய வாகனங்கள் வாங்கி, அதில் பயணிப்பார்கள்.

இந்த ஆண்டின் பிற்பகுதியில் இந்தப் பலன்கள் எல்லாம் நிகழத் தொடங்கும். தாயாரின் உடல்நலம் சீராகும். உடல் ஆரோக்கியம், நல்ல நிலைக்கு வரும். கோயில், குளம் எனக் குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றி வருவார்கள்.

**திருக்கணிதப்படி கடந்த 24.1.2020 சனிப்பெயர்ச்சி நடந்துள்ளது. வாக்கிய பஞ்சாங்கப்படி 26 டிசெம்பர் 2020 அன்றே சனிப்பெயர்ச்சி நடைபெறும் எனக் கூறப்பட்டுள்ளது**

தாயாருடன் இருந்துவந்த கருத்து வேறுபாடுகள், சண்டை சச்சரவுகள் யாவும் இப்போது நீங்கப் பெறும். அவருடன் இணக்கமான ஓர் உறவு இவர்களுக்கு நிலவும்.

அஷ்டம சனி என்பது பொதுவாக வேலை வாய்ப்பு, தொழில் ஆகியவற்றில் தடைகளை ஏற்படுத்துவார். ஆனால், இந்த முறை துலாம் ராசிக்காரர்களுக்கு அப்படி அவர் செய்ய மாட்டார். வேறு எந்த வகையிலும் துலாம் ராசிக்காரர்களுக்கு சனியால் கெடுதல் நடைபெறாது. காரணம் சனி பகவானுக்கு ரிஷபமும் துலாமும் நட்பு வீடுகள்.



### இந்த ஆண்டின் பிற்பகுதியில் நல்ல பலன்கள் எல்லாம் நிகழத் தொடங்கும்

கடந்த 3 ஆண்டுகளாக சனிபகவான், குருவின் வீட்டில், தன்னுடைய மகர ராசிக்குப் பன்னிரண்டாம் வீட்டில் இருந்ததால் உங்களுக்குக் கடந்த 3 ஆண்டுகளாக நற்பலன்கள் நிகழவில்லை. ஆனால், இப்போது அதற்கெல்லாம் சேர்த்து வட்டியும் முதலுமாக நற்பலன்கள் கிட்டும்.

திருமணம் தடைப்பட்டு வந்த துலாம் ராசிக்காரர்களுக்கு இப்போது திருமணம் நடைபெறும். குழந்தை பாக்கியம் கிடைக்காமல் இருந்தவர்களுக்குக் குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். வேலை இல்லாமல் கஷ்டப்பட்டு வந்தவர்களுக்கு, புதிய இடத்தில் நல்ல வேலை அமையும்.

துலாம் ராசிக்காரர்கள் அர்த்தாஷ்டமச் சனியை எண்ணிப் பயப்படத் தேவையில்லை. அவர்கள் தங்களின் உழைப்புக்கேற்ற ஊதியமும், தங்களுடைய திறமைக்கு ஏற்ற அங்கீகாரமும் கிடைக்கப் பெறுவார்கள் என்பது நிச்சயம்.

துலாம் ராசியில் பிறந்த ஊழியர்கள், தொழிலாளர்கள் பணிக்குச் செல்லும் பெண்கள் என்று பலதரப்பட்டவர்களுக்கும், இதுவரை பணியில் இருந்து வந்த நெருக்கடியான சூழ்நிலைகள் விலகி ஒரு சுமுகமான சூழ்நிலை உருவாகும். பணியில் பாராட்டும் பதவி உயர்வும் இவர்களை வந்து சேரும்.

35 வயதுக்குட்பட்டவர்களுக்குத் தொழிலில் ஒரு மேன்மையான நிலையை இந்தச் சனிப்பெயர்ச்சி ஏற்படுத்தித் தரும். பண விஷயங்களில் இவர்கள் சற்றுக் கவனமாக இருப்பது நல்லது. எதையும் ஒரு முறைக்கு இருமுறை யோசித்துச் செய்ய வேண்டும். தங்கள் வீட்டிலிருக்கும் பெரியவர்களிடம் ஒரு முறைக்கு இருமுறை ஆலோசனை பெற்று எதையும் செய்வது நல்லது.

## தினம் ஒரு சிந்தனை

### பொறாமை தவிர்ப்போம்

பொறாமை என்றால் என்ன என்பதைப் பார்ப்போம். பொறாமை என்றால் உங்களுக்குப் பிடித்த, ஆனால் உங்களிடம் இல்லாத ஒரு பொருள் மற்றவரிடம் இருக்கும்போது ஏற்படும் உணர்வு. உங்களிடம் இருப்பதை விட அதிகமாக மற்றொருவரிடம் இருக்கும் போது ஏற்படுவது அல்லது உங்களுக்குள் இருக்கும் ஒருவித குறைபாட்டினால், இன்னொருவரைப் பார்த்தால் தன்னைப் பற்றிய போதாமை உணர்வு மேலோங்குவதுதான் எரிச்சல் அல்லது பொறாமை.

நீங்கள் ஆனந்தமான உணர்வில் இருந்தால் எவரையும் பார்த்துப் பொறாமைப்பட மாட்டீர்கள். உங்களைவிட இன்னொருவரிடம் ஏதோ ஒன்று அதிகம் உள்ளது போலவும் நீங்கள் ஏதோ ஒருவிதத்தில் குறைந்தவர் போலவும் உணர்வதால்தான் இந்தப் பொறாமை உணர்வு வருகிறது. உங்களை விட உயர்ந்தவர் ஒருவர் இருக்கும் இடத்தில் தான் உங்களிடம் பொறாமை இருக்கும். இங்கு நீங்கள் மட்டும் இருந்தால் உங்களுக்கு பொறாமை உணர்வு இருக்காது.

நல்ல குணம் பொருந்தியவராக இருக்க வேண்டும் என்ற தூண்டுதல் இருப்பதால் இப்புவியில் சில விஷயங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அதே நேரத்தில் அறிவுபூர்வமாக இருக்க வேண்டும் என்ற தூண்டுதல் எப்போதும் இல்லை. நல்ல மனிதனாக இருக்க வேண்டும் என்பதையே எப்போதும் இந்த சமூகம் ஊக்குவிக்கிறது. ஆனால் ஒன்றை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். தம்மை நல்லவன் என்று நம்பிக்கொண்டிருப்பவருடன் வாழ்வது மிகவும் கடினம். அவர் நல்லவர்தான், ஆனால் கடினமான மனநிலையுடன் இருப்பார். நல்லகுணம் இருக்க வேண்டும் என்ற எண்ணம்தான் பரிதாபம், அனுதாபம் போன்ற தேவையற்ற விஷயங்களை மனிதனிடம் ஊக்குவிக்கின்றது.

இந்த உலகில் உண்மையில் விவேகம்தான் தேவைப்படுகிறது. விவேகமுள்ளவர்கள் தான் தேவை, நல்ல மனிதர்கள் அல்ல. ஆனால் இந்தச் சமுதாயத்தில் குழந்தை பிறந்ததிலிருந்து, நல்லவனாக இரு என்றே சொல்லி வளர்க்கிறோம். விவேகத்துடன் இரு என்று அவனுக்குச் சொல்லித் தருவதில்லை. என் வாழ்வில் ஏதோ சரியாக நடக்கவில்லை என்றால் நிச்சயமாக நான் சரியான செயல் செய்யவில்லை என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். இந்த அடிப்படையைப் புரிந்து உள்வாங்கிக் கொண்டால், எல்லோருக்கும் தேவையான வழிகள் பிறக்கும்.

## நாளை 11.02.2020

செவ்வாய்க்கிழமை

**விகாரி - தை 28**

திதி: துதியை மு.ப. 9.36 வரை
நட்சத்திரம்– பூரம் மா 5.54 வரை

**ராகுகாலம்- 03.34- 05.04 வரை**
**சுப நேரம்- 11.04 -12.34 வரை**
**எமகண்டம்- 09.34 - 11.04 வரை**

## 45 வயது...

திட்டத்தின் கீழ் விண்ணப்பிப்பதற்கான வயதெல்லை 45ஆக உயர்த்தப்பட்டுள்ளது. முன்னர் இவ்வயதெல்லை 35 ஆக மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. பலரின் கோரிக்கைக்கு அமைவாக இந்த மாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழிலை எதிர்பார்த்துள்ளவர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள முதலாவது பட்டப் படிப்பொன்றை அல்லது அதற்கு சமமான தகைமையாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள டிப்ளோமா பாடநெறியை கடந்த டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி முன்னர் பூரணப்படுத்தியிருக்க வேண்டும். (ஒ-5)

## இராணுவ அதிகாரி...

சிறப்பு அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். 5 இராணுவத்தினரில் லெப்டினண்ட் கேணல் தர அதிகாரி ஒருவரும் உள்ளடங்குவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி தருமபுரம், இராமநாதபுரத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

அதிநவீன ஸ்கானர் கருவிகளைப் பயன்படுத்தி, தமிழீழ விடுதலைப் புலிகளால் புதைத்து வைக்கப்பட்டதாகக் கூறப்படும் புதையல் தேடப்படுவதாக சிறப்பு அதிரடிப்படையினருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது.

இதுதொடர்பில் சிறப்பு அதிரடிப் படையினரின் அணி ஒன்று முன்னெடுத்த தேடுதலில் 21 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களில் மூன்று உள்ளூர்வாசிகளும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சந்தேகநபர்கள் அனைவரும் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் முற்ப டுத்தப்பட்டதுடன், அவர்களிடம் கைப்பற்றப்பட்ட அதிநவீன ஸ்கானர் கருவிகளும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டன.

(ஒ-5-105-214)

## டில்லியின்...

'இலங்கை தொடர்பான இந்தியாவின் நிலைப்பாட்டை ஏற்கனவே புதுடில்லி சென்றிருந்த ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச விடமும் நரேந்திர மோடி தெரிவித்திருந்தார். ஆனால், அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாது என்று ஜனாதிபதி கோத்தாபய கூறி வருகின்றார். ஆனால், மீண்டும் இந்தியா தனது நிலைப்பாட்டை கோத்தாபயவின் சகோதரரான பிரதமர் மஹிந்த ராஜபக்ச விடமும் எடுத்துரைத்துள்ளது. எனவே, இந்த நிலைப்பாட்டை ராஜபக்ச அரசு உதாசீனம் செய்ய முடியாது' எனவும் இரா.சம்பந்தன் சுட்டிக்காட்டினார்.

'இலங்கையில் தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையில் அவர்களின் பிரச்சினை திறந்த மனதுடன் பேசப்படவேண்டும். ஐக்கிய இலங்கைக்குள் தமிழர்களுக்கு நீதி 'சமத்துவம்' சமாதானம் வழங்கப்பட வேண்டும். இதுவே இந்தியாவின் நிலைப்பாடு. இதனைப் பூர்த்தி செய்யும் வகையில் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை இலங்கை அரசு முழுமையாக நடைமுறைப்படுத்தும் என்று நாம் நம்புகின்றோம், என்று புதுடில்லி சென்றுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்சவிடம் இந்தியாவின் பிரதமர் நரேந்திர மோடி நேரில் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார். (ஒ-5-22)

## படை...

299 பேர் மீண்டும் சேவையில் இணைந்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இராணுவத்தைச் சேர்ந்த 2 ஆயிரத்து 974 பேரும் கடற்படையைச் சேர்ந்த 537 பேரும் விமானப்படையைச் சேர்ந்த 788 பேரும் மீண்டும் சேவையில் இணைந்து கொண்டுள்ளனர்.

72 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு, சேவையை கைவிட்டுச் சென்ற முப்படையினருக்கு பொதுமன்னிப்பு காலம் வழங்கப்பட்டுள்ளது. கடந்த செப்ரெம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் சேவையை கைவிட்டுச் சென்றவர்களுக்கு இந்த மன்னிப்பு காலம் வழங்கப்பட்டுள்ளது. பொது மன்னிப்பு காலம் நாளை மறுதினம் வரை வழங்கப்பட்டுள்ளது. (ஒ-5)

## தமிழ் அரசுக்...

போட்டியிட வேண்டும் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நிர்வாகச் செயலர் கூட்டமைப்பின் தலைவருக்கும் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கும் கடிதம் அனுப்பியுள்ளார்.

இலங்கைத் தமிழர்கள் இன்று வடக்கு கிழக்குக்கு வெளியிலும் 50 சதவிகிதம் வாழ்வதனால் இலங்கை தமிழ் அரசுக் கட்சி வடக்கு, கிழக்கு மாகாணத்துக்கு வெளியிலும் போட்டியிட வேண்டும் என்று 2015ஆம் ஆண்டு இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலின்போதும் நான் உட்பட சிலர் ஒப்பமிட்டு கோரிக்கை விடுத்தபோதும் அது அப்போது கைகூடவில்லை.

கொழும்பு, புத்தளம் ஆகிய மாவட்டங்களில் தமிழ் அரசுக் கட்சி போட்டியிட்டமை தாங்கள் அறியாத வரலாறும் அல்ல. எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சி வடக்கு கிழக்கு மாகாணத்தில் போட்டியிடும் அதேநேரம் அதற்கு அப்பால் குறித்த மூன்று மாவட்டங்களிலும் போட்டியிட்டு அங்கு வாழும் தமிழர்களைப் பிரதிநிதித்துவம் செய்ய வேண்டும், எனவும் கோரியுள்ளார். (ஒ-5-105)

## திருகோணமலை...

மறு அறிவித்தல் வரை பல்கலைக்கழக கற்கைநெறிகளில் ஈடுபடவோ, வளாகங்களுக்குள் நுழையவோ முடியாதவாறு இடைக்காலத் தடை நேற்று விதிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தின் தொழில்நுட்ப பீடத்தின் இரண்டாம் வருட மாணவர்கள் சிலர் புதுமுக மாணவிகள் சிலர் மீது மோசமான பகிடிவதையில் ஈடுபட்டதாக பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு கிடைத்த தகவலையடுத்து முன்னெடுக்கப்படும் ஒழுக்காற்று குழு விசாரணைகளின் அடிப்படையில் இரண்டாவது மாணவனுக்கும் உள்நுழைவதற்கான தடை விதிக்கப்பட்டுள்ளது. விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் பகிடிவதை தொடர்பில் சான்றாதாரங்கள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் மேலும் சில மாணவர்களுக்கு உள்நுழைவதற்கான தடை விதிக்கப்படும் என்று பல்கலைக்கழக நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. முதல்கட்ட விசாரணைகளின் அடிப்படையிலேயே இந்த உள்நுழைவதற்கான தடைவிதிக்கப்படும் நிலையில் சம்பந்தப்பட்ட மாணவர்கள் தொடர்பில் விசாரணைகளின் அடிப்படையில் குற்றச் சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் கடுமையான தண்டனைக்கு உள்ளாகுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-5)

## இராணுவ உதவி...

னப்படை தளபதி எயார் சீப் மார்சல் முஜாஹிட் அன்வர் கான் தெரிவித்துள்ளார். பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்சவை நேற்றுமுன்தினம் சந்தித்தபோதேஅவர் இதனைக் குறிப்பிட்டார்

பாதுகாப்பு தொடர்பான சகல உதவிகளும் இலங்கைக்கு வழங்கப்படும் என்றும் அவர் உறுதியளித்தார். இரண்டு நாடுகளும்தமது ஒத்துழைப்பைபலப்படுத்திக்கொள்ள இந்தச்சந்திப்பின்போது இணங்கியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-5)

## வடக்கு...

மைப்பு போன்ற தமிழர் அரசியல் கட்சிகள் வளர்ச்சியை விரும்பவில்லை. அதிகாரப் பகிர்வு, இனப் பிரச்சினைக்குத் தீர்வு என்றே அவர்கள் பேசி வருகின்றனர். இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச இந்தியாவில் வைத்துத் தெரிவித்தார்.

இந்துஸ்தான் ரைம்ஸ் செய்திச் சேவைக்கு வழங்கிய செவ்வியிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தியாவும் பாகிஸ்தானும் இலங்கையின் 30 ஆண்டுகால உள்நாட்டுப் போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கு உதவிஉள்ளன. விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரில் எங்களுக்கு ஆயுதங்களையும் விமானங்களையும் பாகிஸ்தான் அளித்தது. இந்தியாவும் கூட இலங்கைக்கு உதவி செய்தது. ஆனால் அதை நாங்கள் பகிரங்கப் படுத்தவில்லை. இந்தியாவின் உதவி மட்டும் இல்லாமல் இருந்திருந்தால் விடுதலைப் புலிகளுடனான போரில் நாங்கள் வெற்றி பெற்றிருப்போம் என நினைக்கவில்லை.

இலங்கையில் இஸ்லாமிய பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுள்ளதாக இந்தியா முன்னரே எச்சரிக்கை விடுத்தது. ஆனால் அப்போது இலங்கையில் இருந்த அரசு கண்டுகொள்ளாமல் விட்டுவிட்டது. இதுதொடர்பாக விசாரணைகளை நடத்தி வருகிறோம்.

எங்களைப் பொறுத்தவரையில் நாங்கள் இந்தியாவின் உள்விவகாரங்களில் ஒரு போதும் தலையிடமாட்டோம். எங்களுடன் நட்பாக இருக்கும் நாடுகளுக்கு ஒவ்வொரு பார்வை இருக்கலாம். ஆனால் இந்திய விவகாரங்களில் தலையிடுவதில்லை என்பது எங்கள் நிலைப்பாடு. ஏனெனில் இந்தியா எங்களது உறவு நாடு. மற்றவை நட்பு நாடுகள். இதைநான் பல முறை குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறேன்.

போரால் இலங்கை மிக மோசமாக பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டது. ஆகையால் நாட்டை பொருளாதார ரீதியாக கட்டியெழுப்ப வேண்டிய அவசியம் எங்களுக்கு இருக்கிறது. இதற்கு சீனா உதவ முன்வரும் போது அதை நாங்கள் தவிர்க்க முடியாது - என்றார். (ஒ-5)

## வாரணாசியில் மஹிந்த



வாரணாசி காசி விஸ்வ்நாதர் ஆலயத்துக்கு மஹிந்த ராஜபக்ஷ நேற்றுக் காலை சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார்.

## புரிந்துணர்வு...

தொடக்கம் 11.30 மணி வரையிலான சுப நேரத்தில், ரில்கோ விடுதியில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

தமிழ் மக்கள் கூட்டணியின் சார்பில் விக்னேஸ்வரனும், ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் சுரேஸ் பிரேமசந்திரனும், தமிழ்த் தேசியக் கட்சி சார்பில் ந.சிறிகாந்தாவும், ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகம் சார்பில் திருமதி அனந்தி சசிதரனும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

(ஒ-5-20)











# இன்றைய நாள்

**மேடம்:** சிலரது பேச்சால் மனம் சங்கடப்படும். எவருக்கும் வாக்குறுதி தர வேண்டாம். தொழிலில் உற்பத்தி, விற்பனை சீரான அளவில் இருக்கும். பணவரவைவிட, செலவு அதிகரிக்கும்.

**இடபம்:** முக்கிய பணி நிறைவேற அனுகூலம் உருவாகும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்திப்பணி செய்வீர்கள். உற்பத்தி, விற்பனை அதிகரித்து பொருளாதாரம் செழிக்கும்.

**மிதுனம்:** அடுத்தவர் மீதான நம்பிக்கை குறையும். தொழில், வியாபாரத்தில் உருவாகும் குறுக்கீடுகளைச் சரிசெய்வீர்கள். அளவான பணவரவு கிடைக்கும்.

**கடகம்:** மனதில் உற்சாகமும், கலையுணர்வும் அதிகரிக்கும். எல்லோரிடமும் அன்பு பாராட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி திருப்தி கரமாக இருக்கும். தாராள பணவரவு கிடைக்கும்.

**சிம்மம்:** விழிப்புணர்வுடன் செயல்படுவது அவசியமாகும். தொழில், வியாபாரத்தில் உருவாகும் குளறுபடிகளை புதிய யுக்தியால் சரி செய்வீர்கள். அளவான பணவரவு கிடைக்கும்.

**கன்னி:** பணிகளில் அக்கறையுடன் செயல்படுவீர்கள். மனதில் புதிய நம்பிக்கை உருவாகும். தொழில், வியாபாரம் சிறந்து லாபம் அதிகரிக்கும். அந்தஸ்து மிக்கவரின் நட்புக் கிடைக்கும்.

**துலாம்:** குடும்பத்தினர் அதிக பாசம் கொள்வர். நம்பிக்கையுடன் பணிபுரிவீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க தகுந்த யுக்திகளை பின்பற்றுவீர்கள். உபரி வருமானம் கிடைக்கும்.

**விருச்சிகம்:** சிலர் உங்களது பேச்சைத் தவறாகப் புரிந்து கொள்வர். தொழில், வியாபாரத்தில் சில குறுக்கீடுகள் வந்து சரி யாகும். சேமிப்புப் பணம் முக்கிய செல வுக்கு பயன்படும்.

**தனுசு:** பழகுபவர்களிடம் தேவையற்ற கருத்துக்களை பகிர வேண்டாம். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணி செய்வதில் தாமதம் ஏற்படலாம். புதிய செயல்களால் செலவு அதிகரிக்கும்.

**மகரம்:** செயல்களில் பொறுமைக் குணம் வெளிப்படும். தொல்லை கொடுத்தவர் இடம் மாறிப் போவர். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய சாதனை ஏற்படும். பணவரவுடன் நன்மையும் அதிகரிக்கும்.

**கும்பம்:** மனதில் தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். நற்செயல் அனைத்தும் இனிதாக நிறைவேறும். உபரி பணவருமானம் கிடைக்கும்.

**மீனம்:** மாறுபட்ட சூழ்நிலையை எதிர்கொள்ளும் வாய்ப்பு வரும். செயல்களில் பெருந்தன்மைக் குணம் வெளிப்படும். தொழில், வியாபாரத்தில் வேலைப்பளு அதிகரிக்கும்.



## 2019இனை விட 2020இல்

# வேகமாக அழிகிறது அமேசன்

பிரேசிலியா, பெப். 10

உலகின் நுரையீரல் என்று வர்ணிக்கப்படும் அமேசன் காடுகள், கடந்த ஆண்டில் மிகப்பெரும் அழிவை எதிர்கொண்டன. இந்த நிலையில் கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டில் அமேசன் இரண்டு மடங்கு வேகமாக அழிவடைகிறது என்று தகவல் வந்துள்ளது.

தென்னமரிக்கக் கண்டத்தில் உள்ள பிரேசில், பெரு, வெனிசுலா நாடுகளில் அதிக அளவில் அமேசன் மழைக்காடுகள் காணப்படுகின்றன. அதிக அளவில் ஒக்சிஜனையும் மழைப்பொழிவையும் தரும் மழைக்காடாக அமேசன் உள்ளது. அமேசன் மழைக்காடுகளில் முன்னெப்போதும் இல்லாத வகையில் கடந்த ஆண்டு மிகப்பெரிய அளவில் காட்டுத்தீ ஏற்பட்டது. இது உலக நாடுகளைக் கவலையடைய செய்தது. இந்த காட்டுத்தீயில் சிக்கி பல்லாயிரக்கணக்கான அரியவகை வன உயிரினங்கள், மரங்கள் அழிந்தன.

அமேசன் மழைக்காடுகளின் பெரும்பகுதி பிரேசிலில் இருக்கும் நிலையில், அந்த நாட்டின் அதிபர் போல்சனரோ தலைமையிலான அரசு, காட்டைப்பாதுகாக்க தவறிவிட்டதாகவும், காடழிப்பை ஊக்குவிப்பதாகவும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் குற்றம் சாட்டினர். இந்த நிலையில், பிரேசிலின் அமேசன் மழைக்காடுகளின் அழிவு 2019 உடன் ஒப்பிடும் போது 2020 ஜனவரியில் இரு மடங்காக அதிகரித்துள்ளதாக அந்த நாட்டு அரச தரப்பு தகவல்கள் தெரிவித்துள்ளன. (ம)

# கொரோனா தாண்டவம் பலி 800!

பீஜிங், பெப். 10

சீனாவின் ஹபெய் மாகாணத்தில் கொரோனா வைரஸ் தாக்குதலால் நேற்று ஒரே நாளில் 80க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ள நிலையில் பலியானோரது எண்ணிக்கை 803ஆக அதிகரித்துள்ளது.

சீனாவின் ஹபெய் மாகாண தலைநகர் வுகானில் இருந்து கடந்த டிசம்பர் மாத இறுதியில் பரவிய கொரோனா வைரஸ், தற்போது நாடு முழுவதும் அசுர வேகத்தில் பரவி, பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. 25க்கும் மேற்பட்ட நாடுகளுக்கும் கொரோனா பரவி உள்ளது. இதனால் நாளுக்கு நாள் உயிரிழப்புகளும் அதிகரித்து வருகின்றன.

குறிப்பாக சீனாவில் மிகப்பெரிய பாதிப்பை கொரோனா வைரஸ் ஏற்படுத்தியுள்ளது. கொரோனா வைரசின் பிறப்பிடமாகக் கருதப்படும் வுகானில் இந்த வைரஸ் பாதிப்பால் மருத்துவமனைகள் அனைத்தும் நோயாளிகளால் நிரம்பி வழிகின்றன. இந்த வைரஸ் தாக்குதலால் இதுவரை 803 பேர் உயிரிழந்துள்ளனர். சுமார் 37 ஆயிரம் பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். (ம)

# வன்புணர முயன்ற நபரிடமிருந்து பெண்ணைக் காத்தது கொரோனா

பீஜிங், பெப். 10

சீனாவில் தன்னை வன்புணர முயன்றவரிடம் தனக்கு கொரோனா வைரஸ் இருப்பதாகப் பயமுறுத்தி இளம்பெண்ணொருவர் தப்பித்துள்ளார்.



சீனாவில் கொரோனா வைரஸ் முதலில் கண்டறியப்பட்ட வுகான் நகரில் இருந்து சுமார் 150 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது ஜிங்ஷான் நகரம்.

இங்கு கடந்த வாரம் 25 வயதான இளம்பெண் ஒருவர் வீட்டில் தனியாக இருந்துள்ளார். அப்போது கொள்ளையடிப்பதற்காக வீட்டுக்குள் நுழைந்த மர்மநபர், அந்தப் பெண் தனியாக இருப்பதை அறிந்து அவளை பாலியல் பலாத்காரம் செய்ய முயன்றார். கூச்சலிட்ட அந்தப் பெண்ணின் கழுத்தை நெரித்தும், வாயை மூடியும் பலாத்காரம் செய்ய முயன்றுள்ளார்.

அவரிடம் இருந்து தப்பிப்பதற்காக அந்தப் பெண் சாதுர்யமாக யோசித்து பலமாக இருமினார். அத்துடன்தான், வுகான் நகரில் இருந்து வந்திருப்பதாகவும், கொரோனா வைரசால் பாதிக்கப்பட்ட தன்னைத் தனிமையில் வைத்துள்ளதாகவும் கூறி மேலும் பலமாக இருமி பயமுறுத்தினாள். இதனை கேட்ட மர்மநபர் அங்கு இருந்து ஓட்டம் பிடித்தார். கையில் கிடைத்த பணத்தை மட்டும் திருடிச் சென்றுள்ளார். அந்தப்பெண் வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் குறித்த நபரைப் பொலிஸார் கைது செய்தனர். (ம)

## தாய்லாந்தில் பயங்கரம்

# 21 பொதுமக்களை கொன்ற சிப்பாய்!

பாங்கொக், பெப். 10

தாய்லாந்து நாட்டில் துப்பாக்கிச் சூடு நடத்தி 21 பேரைக் கொன்ற இராணுவ வீரரை பாதுகாப்பு படையினர் சுட்டுக் கொன்றுள்ளனர்.





தாய்லாந்தின் தலைநகரிலிருந்து 250 கிலோ மீற்றர் தொலைவில் வடக்கு பகுதியில் நகோன் ராட்சசிமா நகரம் உள்ளது. இங்குள்ள பிரபல வணிக வளாகம் முன்பு நேற்றுமுன்தினம் மாலை மர்ம நபரொருவர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் 21 பேர் உயிரிழந்தனர். அத்துடன் சிலரை அவர் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்திருந்தார்.

நேற்றுக் காலை இராணுவத்தினர் மேற்கொண்ட அதிரடி பதில் தாக்குதலை அடுத்து அவர் சுட்டுக் கொல்லப்பட்டார். விசாரணைகளில் தாக்குதல்தாரி ஒரு சிப்பாய் என்று தெரியவந்தது. (ம)



பலஸ்தீனம் - இஸ்ரேல் இடையிலான அமைதித் திட்டம் அண்மையில் ட்ரம்பால் ஏற்படுத்தப்பட்டது. இந்தத் திட்டம் இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனப் பகுதிகள் இஸ்ரேலுக்கே சொந்தம் என்று குறிப்பிடுகின்றது. இந்த நிலையில் குறித்த திட்டத்தை ஏற்கமறுத்து பலஸ்தீனர்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். (ம)



# யானைகளை வேட்டையாட அனுமதித்தது போஸ்வானா

ஆபிரிக்க நாடான போஸ்வானாவில் யானைகளை வேட்டையாட சட்டப்பூர்வ அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதற்காக ஏலம் மூலம் 'லைசென்ஸ்' வழங்கப்பட்டது. ஆபிரிக்க நாடான போஸ்வானாவில் ஒரு லட்சத்து 30 ஆயிரம் யானைகள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. உலகிலேயே அதிக யானைகளை கொண்டுள்ள போட்ஸ்வானாவில், யானைகள் தாக்குவதால் மலைவாழ் மக்கள் உயிரிழக்கும் சம்பவமும் அதிகரித்து வருகிறது. மேலும் விவசாய நிலங்கள் யானைகளால் சேதப்படுத்தப்படுவதாகவும் முறைப்பாடுகள் எழுந்துள்ளன. இதனால் யானைகளை வேட்டையாட விதிக்கப்பட்டிருந்த தடையை அந்த நாட்டு அதிபர் கடந்த ஆண்டு நீக்கினார். அதன் பின்னர் யானைகளை வேட்டையாட தனியார் நிறுவனங்களுக்கு அனுமதி அளிப்பதற்கான நடைமுறை தொடங்கியது. நேற்றுமுன் தினம் நடந்த ஏலத்தின் அடிப்படையில் 7 நிறுவனங்களுக்கு யானைகளை வேட்டையாட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன்படி இந்த ஆண்டு முடிவுக்குள் சுமார் 300 யானைகளைக் கொல்வதற்கு அந்த நாட்டு அரசு திட்டமிட்டுள்ளது. (ம)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 10.06.1966
இறப்பு 22.01.2019

அமரர் நடராசா ஜெயகுமார்

திதி: 10.02.2020

ஈராறு மாதங்கள் ஆனதே நீ இன்றி
எம் வாழ்வில் நிம்மதி போனதே
நாமாக நலம் இல்லை இங்கு
- நீ போனதால்
உன் நினைவு தரும் வேதனை
- நாளானது
உரமிட்டாய் எம் வாழ்வு சரியாக
- நிற்பதற்கு
நீ மட்டும் ஏன் சரிந்தாய் எம்மோடு
- வாழாமல்!

குடும்பத்தினர்.
வாகையடி, பருத்தித்துறை வீதி,
அச்சுவேலி தெற்கு.

## மரண அறிவித்தல்



### இராசையா லிங்கராசா

யாழ்ப்பாணம் அரியாலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லபிள்ளை என்று அன்பாக அழைக்கப்படும் இராசையா லிங்கராசா 05.02.2020 புதன்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - பாக்கியலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், லோகேஸ்வரி (ராசாத்தி) அவர்களின் அன்புக் கணவரும், வளர்மதி அவர்களின் அன்புத் தந்தையும், விமலேந்திரனின் அன்பு மாமனும், காலஞ்சென்ற சத்தியசீலன் மற்றும் சண்முகலிங்கம், உதயராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், இராசலெட்சுமி, வசந்தகுமாரி, பாக்கியராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும், மீரா,கிறிஷா, அக்ஷேஸ், அக்ஷான், அக்ஷா, அவிஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (09.02.2020) ஞாயிற்றுக் கிழமை கனடா நேரப்படி பிற்பகல் 5 மணி தொடக்கம் 9 மணிவரை பார்வைக்கு வைக்கப்பட்டு இன்று (10.02.2020) திங்கட்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் 1 மணிவரையில் நல்லடக்கம் செய்யப்படும்.

64, குகன் வீதி,
அரியாலை.

தகவல்: சகோதரி (உதயராணி),
பெறாமகன் (லோகதாஸ்),

(cs31163) (13.17)
077 310 3766, 077 850 5131

## மரண அறிவித்தல்

பிறப்பு 28 . 08 . 1939



இறப்பு 09 . 02 . 2020

### சவரிமுத்து ஜோசப் தேவதாசன்

(ஓய்வு பெற்ற கொமர்ஷல் வங்கி ஊழியர் - யாழ். கிளை)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சவரிமுத்து ஜோசப் தேவதாசன் (ஓய்வு பெற்ற கொமர்ஷல் வங்கி ஊழியர் - யாழ். கிளை) நேற்று (09.02.2020) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சவரிமுத்து - விக்ரோறியா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான எலியாஸ் - மாக்கிரட் தம்பதியரின் மருமகனும் மேரி ஆன் அவர்களின் அன்புக் கணவரும், நொய்லீன், ஏஞ்சலின் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான சூசைதாசன் (புகழ்), திரேசா (லீலா), மரியதாசன் (கோசி) மற்றும் அல்பேட் (ஆஸ்திரேலியா), கிறேஸ் (லில்லி - ஆஸ்திரேலியா), மேரி திரேசா (ஜேர்மனி), பிலோமினா, மேரி பெனீற்றா (ஆஸ்திரேலியா), யூட் வலன்ரைன் (பெல்ஜியம்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ஜொணி அஜித் (பாசிக் - PARCIC நிறுவன பிராந்திய முகாமையாளர்), அஜிற் ஜெயதீபன் (அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் - OSUSALA) ஆகியோரின் அன்பு மாமனும், மடோலின், மக்டலின், அட்றியன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10.02.2020) திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

16/14, விதானையார் வீதி,
யாழ்ப்பாணம்

தகவல்:
குடும்பத்தினர்

(13.17)
077 302 4234 (அஜித்), 077 155 4333 (அஜிற்).




# மடு பிரதேச எல்லே தொடரில் வள்ளுவர் அணிக்குத் தங்கம்!

யாழ்ப்பாணம், பெப். 10
மடு பிரதேச செயலக பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பாண்டுக்கான எல்லே தொடரில் ஆண்கள் பிரிவில் வள்ளுவர் அணிக்கு தங்கப்பதக்கம் கிடைத்தது.
மடு பிரதேச செயலக மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆண்களுக்கான எல்லே போட்டி இறுதியாட்டத்தில் வள்ளுவர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பூமலர்ந்தான் விளையாட்டுக் கழக அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய வள்ளுவர் விளையாட்டுக் கழக அணி 30 பந்துகளில் 2 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பூமலர்ந்தான் விளையாட்டுக் கழக அணி 8 பந்துகளில் 3 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது. (ம-23)

## இன்றையாட்டம்

யாழ்ப்பாணம், பெப். 10
யாழ்ப்பாண மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுன் சங்கானை கிங்ஸ் விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்திவரும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் சங்கானை கிங்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை இரவு 7.30 மணியளவில் இடம்பெறும் ஆட்டத்தில் சண்டிலிப்பாய் வசந்தசிறி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மயிலிட்டி வானவில் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

## திருக்குடும்பம் முன்னேற்றம்

யாழ்ப்பாணம், பெப். 10
யாழ்ப்பாண மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் சங்கானை கிங்ஸ் விளையாட்டுக் கழக அணி நடத்தும் தாச்சித் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் மயிலிட்டி திருக்குடும்பம் அணி வெற்றிபெற்றது.
சங்கானை கிங்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் மயிலிட்டி திருக்குடும்பம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நவாலி தென்றல் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் மயிலிட்டி திருக்குடும்பம் விளையாட்டுக் கழக அணி 8:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-23)

## செயற்பட்டு மகிழ்வோம்

யாழ். பெப். 10
யாழ்ப்பாணம்ஈவினை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் போட்டிகள் நாளை இடம்பெறவுள்ளன.
பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் சோ.கிருஷ்ணா தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண உள்ளூராட்சித் திணைக்கள உதவி ஆணையாளர் முருகநேசன் சுலோசனா கலந்துகொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சுப்பிரமணியம் சிறிகுமரன் கலந்துகொள்ளவுள்ளார். மதிப்புறு விருந்தினராக குடும்பசிட்டி பொன்பரமானந்த வித்தியாலயத்தின் ஆசிரியர் இ.வலன்ரீனா, யாழ். குப்பிளான் விக்னேஸ்வரா வித்தியாலக ஆசிரியர் சறோயா ரவிச்சந்திரன், பாடசாலை நலன்விரும்பி க.முருகையா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம)



# தங்கம் வென்றது மேரிஸ் கழகம்!


யாழ்ப்பாணம், பெப். 10
மடு பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பாண்டுக்கான எல்லே தொடரில் பெண்கள் பிரிவில் சென். மேரிஸ் அணி தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றியது.
மடு பிரதேச செயலக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த ஆட்டம் இடம்பெற்றது. இறுதியாட்டத்தில் குஞ்சுக்குளம் சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து தட்சணா மருதமடு ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய தட்சணா மருதமடு ஐக்கிய விளையாட்டுக் கழக அணி 30 பந்துகளில் 2 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய குஞ்சுக்குளம் சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணி 23 பந்துகளில் 3 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது. (ம-23)

# இலங்கைக் கிரிக்கெட் சபையை அழைத்தது கோப்

இலங்கை கிரிக்கட் உள்ளிட்ட மூன்று நிறுவனங்களை கோப் எனப்படும் பொது முயற்சியாண்மைக்கான நாடாளுமன்ற தெரிவுக் குழுவுக்கு அழைக்க தீர்மானிக் கப்பட்டுள்ளது.
இதற்கமைய இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம், தேசிய லொத்தர் சபை மற்றும் இலங்கை கிரிக்கட் ஆகிய நிறுவனங்களை கோப் குழுவுக்கு அழைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அந்தக் குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.
இந்த நிலையில், எதிர்வரும் 18, 19 மற்றும் 20ஆம் திகதிகளில் இந்த நிறுவனங்களை அழைத்துவிசாரணைகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம)









ஆஸ்திரேலியக் காட்டுத் தீ பாதிப்புக்கு நிவாரண நிதி திரட்டுவதற்காக நேற்று காட்சிக் கிரிக்கெட் போட்டி நடத்தப்பட்டது. பொண்டிங் தலைமையில் ஓர் அணியும், கில்கிறிஸ்ட் தலைமையில் இன்னொரு அணியும் களமிறங்கின. ஆட்டம் முடிந்த பின்னர் இரண்டு அணியினரும் இணைந்து ஒளிப்படம் எடுத்துக்கொண்டனர். (ம)

### காட்டுத் தீ இடர் நிதி சேகரிப்பு

# பொண்டிங் லெவன் போராடி வென்றது!

ஆஸ்திரேலிய காட்டுத் தீ இடருக்கு நிதி சேகரிப்புக்காக நேற்று நடத்தப்பட்ட காட்சி ஆட்டத்தில் பொண்டிங் லெவன் அணி போராடி வென்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கில்கிறிஸ்ட் லெவன் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பொண்டிங் லெவன் அணி, 5 இலக்குகளை இழந்து 104 ஓட்டங்களைப் பெற்றது. லாரா 30 ஓட்டங்களையும், பொண்டிங் 26 ஓட்டங்களையும், ஹைடன் 16 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் வால்ஸ், சைமன்ஸ், யுவராஜ் மூவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர். பதிலுக்குக் களமிறங்கிய கில்கிறிஸ்ட் லெவன் அணி 103 ஓட்டங்களைப் பெற்று வெறும் ஓர் ஓட்டத்தால் போராடித் தோல்வியடைந்தது. வற்சன் 30 ஓட்டங்களையும், சைமன்ஸ் 29 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் லீ 2 இலக்குகளையும், ஹொட்ஜ் ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (ம)








# மீண்டும் சச்சின்

இந்திய அணியின் முன்னாள் துடுப்பாட்ட வீரரும், கிரிக்கெட்டின் கடவுள் என்று வர்ணிக்கப்பட்டவருமான சச்சின், ஆஸ்திரேலிய வீராங்கனையின் சவாலை ஏற்று நேற்று ஒரு பந்துப்பரிமாற்றம் துடுப்பெடுத்தாடினார். ஆஸ்திரேலிய காட்டுத் தீ இடருக்கு நிதி திரட்டுவதற்காக இந்த ஆட்டம் நடத்தப்பட்டது.

முதல் இன்னிங்ஸின் முடிவில் ஒரு பந்துப்பரிமாற்றம் தனது பந்துவீச்சுக்குத் துடுப்பெடுத்தாட முடியுமா என்று ஆஸ்திரேலிய வீராங்கனை பெரி சவால் விட்டிருந்தார். இந்தச் சவாலை ஏற்றுக்கொண்ட சச்சின் அவ்வாறு துடுப்பெடுத்தாடினார்.

எனினும், ஆறு பந்துகளில் நான்கை மட்டுமே பெரி வீசினார். மிகுதி இரண்டு பந்துகளை சதர்லான்ட் வீசினார். (ம)



# களத்தில் நின்றிருந்தால் நிச்சயம் வென்றிருப்பேன்

### சைனி இறுமாப்பு

நான் மட்டும் ஆட்டமிழக்காமல் இருந்திருந்தால் போட்டியின் முடிவே தலைகீழாக மாறியிருக்கும். ஆனால் ஆட்டமிழந்த வீடியோவைப் பார்த்தபின்புதான் எனக்கு வேதனையாக இருந்தது என இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஷைனி தெரிவித்தார் ஆக்லாந்தில் நடந்த 2ஆவது ஒருநாள் ஆட்டத்தில் இந்திய அணியை 22 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோற்கடித்தது நியூஸிலாந்து அணி. இதன் மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 2-0 என்ற கணக்கில் நியூசிலாந்து வென்றுள்ளது.


இந்தப் போட்டியில் இந்திய அணியின் முன்னணி வீரர்களான கோலி, ராகுல், மயங்க் அகர்வால், பிரித்வி ஷா, கேதார் ஜாதவ் ஆகியோர் ஆட்டமிழந்தநிலையில் 8ஆவது விக்கெட்டுக்காக ஷைனியும், ஜடேஜாவும் நிலைத்து விளையாடி ஓட்டங்களைச் சேர்த்து அணி வெற்றிக்கு அருகே அழைத்துச் சென்றனர். ஆனால், ஷைனி ஆட்டமிழந்தபின் ஆட்டத்தின் முடிவு தலைகீழாக மாறிப்போனது. 49 பந்துகளைச் சந்தித்த ஷைனி 45 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழந்தார். இந்த போட்டியில் இந்திய அணியின் தோல்வி குறித்து ஷைனி கூறுகையில், 'நான்ஆட்டமிழந்துசென்றபின்அந்தவீடியோவைப் பார்த்து மிகுந்த வேதனை அடைந்தேன். நான் மட்டும் ஆட்டமிழக்காமல் இருந்திருந்தால், போட்டியின் முடிவு வேறு மாதிரி இருந்திருக்கும். ஆனால், வீடியோவைப் பார்த்த பின்புதான் வேதனையாக இருந்தது. பவுண்டரி அடிக்க முடிந்தால் அடித்துவிடு. இல்லாவிட்டால் ஒன்று, இரண்டு ரன்களை எடுத்துக்கொள்வோம் ஆனால், பொறுமையாக விளையாடு. இறுதிவரை போட்டியை எடுத்துச் செல்லவேண்டும் என ஜடேஜா என்னை உற்சாகப்படுத்தினார் என்று சைனி மேலும் தெரிவித்தார். (ம)

# வழித்துத்துடைப்பதற்கு நியூசிலாந்து முனைப்பு

இந்தியாவுக்கு எதிரான டி20 தொடரில் 05 என வெள்ளையடிப்பு வாங்கிய நியூசிலாந்து அணி ஒருநாள் தொடரில் இந்தியாவை வெள்ளையடிப்பதற்கு முனைப்புக்காட்டத் திட்டமிட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் ஆக்லாந்தில் நடைபெற்ற 2ஆவது போட்டியில் இந்திய அணியை 22 ஓட்டங்கள் வித்தியாசத்தில் குறைந்த இலக்கைத் தடுத்து வெற்றிபெற்றது நியூஸிலாந்து அணி. இதனையடுத்து 3ஆவது போட்டியிலும் வென்று தொடரை வழித்துத் துடைப்பதற்குத் திட்டமிட்டுள்ளோம் என்று நியூசிலாந்து அணியின் பொறுப்புத் தலைவர் லாதம் தெரிவித்தார். (ம)





# பாகிஸ்தான் வீரருக்கு 17 மாதங்கள் சிறை

பாகிஸ்தான் சுப்பர் லீக் போட்டியில் சகவீரர்களை மேட் பிக்ஸிங், ஊழலில் ஈடுபடத் தூண்டிய பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் நசீர் ஜாம்ஷெட்டுக்கு 17 மாதங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான வழக்கு இங்கிலாந்தின் மான்செஸ்டர் நகர நீதிமன்றத்தில் நடந்து வந்த நிலையில் ஜாம்ஷெட் மீது குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

குற்றவாளிகள் இருவர் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதால் பிரிட்டிஷ் நேஷனல் கிரைம் ஏஜென்ஸி விசாரித்து வந்தது.

கடந்த 2016ஆம் ஆண்டு வங்கதேச சுப்பர் லீக், 2017 ஆம் ஆண்டு பாகிஸ்தான் சூப்பர் லீக் போட்டியில் சக வீரர்களை மேட்ச் பிக்ஸிங், ஊழலில் ஈடுபடத் தூண்டியதாக ஜாம்ஷெட் மீது புகார் எழுந்தது. இதைத் தொடர்ந்து கடந்த 2017ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஜாம்ஷெட், இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த யூசுப் அன்வர், முகமது இசாஜ் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். இதில் கைது செய்யப்பட்ட அன்வர், இஜாஸ் இருவரும் பாகிஸ்தான் வீரர்களுக்குப் பணம் கொடுத்து மோசமாக விளையாடத் தூண்டினோம், மேட்ச்பிக்ஸிங் ஈடுபட முயன்றோம் எனும் குற்றத்தை ஒப்புக்கொண்டனர். இதனால், இஜாசுக்கு 30 மாதங்களும், அன்வருக்கு 40 மாதங்களும் சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

பிஎஸ்எல் கிரிக்கெட் போட்டியில் தான் மேட்ச்பிக்ஸிங்கில் ஈடுபடவில்லை என்று தொடக்கத்தில் கூறிவந்த ஜாம்ஷெட் பின்னர் குற்றத்தை ஒப்புக்கொண்டார். இதனால் அவருக்கு 17 மாதங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

ஏற்கனவே கடந்த 2018ஆம் ஆண்டில் வீரர்களிடையே கையூட்டு பெறுவதை ஊக்கப்படுத்திய குற்றத்துக்காக 10 ஆண்டுகள் கிரிக்கெட் விளையாட தடை விதிக்கப்பட்டார் ஜாம்ஷெட். அதற்கு முன்பாக 2017 ஆம் ஆண்டில் விசாரணைக்கு ஒத்துழைக்க மறுத்த குற்றத்துக்காக 12 மாதங்கள் தடையும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை விதித்தது குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான் அணியின் இடதுகை பேட்ஸ்மேனான ஜாம்ஷெட் 2 டெஸ்ட், 48 ஒருநாள் போட்டிகளிலும், 18 ரி-20 போட்டிகளிலும் விளையாடியுள்ளார்.

**விற்பனையாளர் தேவை**
கொழும்பில் தலைமையகத்தைக் கொண்ட யாழ்.கிளை பாதணி நிறுவனத்துக்கு விற்பனையாளர் தேவை.
**077 232 7058**



# சொசைற்ரெட் அணியிடம் ரியல் மட்ரிட் படுதோல்வி



ஸ்பானியக் கழகங்களுக்கு இடையிலான லா லிகா தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ரியல் சொசைற்ரெட் அணியிடம் படுதோல்வியடைந்தது ரியல் மட்ரிட் அணி.

ஆட்டத்தின் 22ஆவது நிமிடத்தில் ரியல் சொசைற்ரெட்டின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார் மார்ட்டின். அதுவே முதல் பாதியின் ஒரே கோலுமாக அமைந்தது. இரண்டாவது பாதியில் இரண்டு அணிகளின் சார்பிலும் தலா மூன்று கோல்கள் பதிவுசெய்யப்பட்டன.

ரியல்மட்ரிட் அணியின் சார்பில் மார்செலோ 59ஆவது நிமிடத்தி லும், ரொட்ரிகோ 81ஆவது நிமிடத்திலும், நாச்சோ 89ஆவது நிமிடத்திலும் கோல்களைப் பதிவுசெய்தனர். சொசைற்ரெட் அணியின் சார்பாக அலெக்சான்டன் 54ஆவது, 56ஆவதுநிமிடங்களிலும், மெரினோ 69ஆவது நிமிடத்திலும் கோல்களைப் பதிவுசெய்தனர். இதையடுத்து முடிவில் 4:3 என்ற கோல் கணக்கில் வென்றது ரியல் சொசைற்ரெட் அணி. (ம)

# விக்டோறியன்ஸ் கழகம் தங்கப்பதக்கம் வென்றது



யாழ்ப்பாணம், பெப். 10

சங்கானை பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பாண்டுக்கான கரப்பந்தாட்டத்தில் விக்டோறி யன்ஸ் அணி தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றியது. சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த இறுதியாட்டம் இடம்பெற்றது. மூன்று செற்களைக் கொண்டதாக இடம்பெற்ற ஆட்டத்தில் விக்டோறியன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சண்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் விக்டோறியன்ஸ் விளையாட்டுக் கழக அணி 25:18, 25:19 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

**வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை**

- அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
- கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருடகால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**

1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
**021 222 6113**



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.02.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.